# தமிழரசு

1-12-1973 40 காசு





# செழுமையான விளைச்சலுக்கோர் சீரான சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்







செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசியமானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸடார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டுப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டுப்ரோ லிமிடெட்**

P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.

LT-3506

# தமிழரசு

மலர் 4 இதழ் 11
1-12-'73




# நாவலர் நகர்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் திருவல்லிக்கேணியிலுள்ள பழைய 'லாக் நகர்' குடிசைப் பகுதிகள், புதிய மாடிக் குடியிருப்புகளாக உருவாக்கப் பெற்றுள்ளன. இப்பகுதி 'நாவலர் நகர்' என வழங்கப் பெறுகிறது. இதனை 7—11—1973 அன்று கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் தலைமையில் முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

ரூபாய் 25 இலட்சம் செலவில் உருவாக்கப் பெற்றுள்ள இக்குடியிருப்புகள் 4 அடுக்குகளைக் கொண்டவை. மொத்தம் 304 குடியிருப்புகள் உள்ளன; ஒவ்வொரு குடியிருப்பும் சுமார் ரூபாய் 8,000 செலவில் கட்டப்பட்டுள்ளது.

"1968-ஆம் ஆண்டு நெல்லை மாநகரத்தில் இந்தப் புதிய பாலத்தை அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது. இடையில் இரண்டாண்டுக்காலம், பால வேலை தொடங்கப் பெறாமல் தடைக்கற்கள் ஏற்பட்டதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

'தடைக்கற்கள் உண்டென்றாலும்-தடந்தோள்கள் உண்டென்று சிரித்தாய்'-என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளுக்கேற்பத் தடைக்கற்களைத் தாங்கினோம்.

இந்தத் தடை நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளை ஏறியது, நியாயத்தின் பக்கம் தீர்ப்புக் கிடைக்கும்-இந்தப் பாலவேலை நடந்தே தீரும் என்று நம்பியிருந்தோம். அதற்கு ஏற்ப 70-ஆம் ஆண்டு பாலவேலை தொடங்கி - இன்று திறப்பு விழாவும் நடைபெறுகிறது.

# ஈரடிக் குறளாரை நினைவு செய்ய ஈரடுக்குப் பாலம்



பாலம் ஏற்படுவதற்கு இடையில் ஏற்பட்ட இடையூறுகளைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள்.

சில வணிகர்கள் இந்தப் பாலம் கட்டுவதால் தொந்தரவு ஏற்படும்-வியாபாரம் ஸ்தம்பித்துப் போகும்-கட்டவே வேண்டியதில்லை; வேண்டுமானால் வேறு இடம் சொல்லுகிறோம் என்றார்கள்.

பாலம் கட்டப்பட்ட பிறகு பயனைத் தெரிந்து கொள்வீர்கள்-இந்த நல்ல காரியத்தைத் தடுக்காதீர்கள்-என்று தெரிவித்தோம்.

அவர்கள் எப்படியும்தடுத்தே தீருவது என்று நீதிமன்றம் போனார்கள். அப்போது எங்கள் உள்ளத்தில் ''இடுக்கண் வருங்கால் நகுக; அதனை அடுத்தூர்வது அஃதொப்பது இல்'' என்ற குறள்தான் தோன்றியது.

மெல்லச் சிரித்துக் கொண்டோம். ஆனால் உறுதியாகக் காரியத்தை நிறைவேற்றினோம்.

இப்படி ஒரு பாலம் தேவை என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்—வேறு இயக்கத்தைச் சேர்ந்தவரானாலும்-குரல் கொடுத்தார். அதே போல, சட்ட மன்ற உறுப்பினரும், நகராட்சித் தலைவரும் உறுப்பினர்களும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வந்தார்கள். பாலம் கட்டப்பட்ட பிறகு பெயர்ப் பிரச்சினையைப் பெரிதாக்க நினைத்தார்கள். அந்தப் பிரச்சினையை வைத்துப் போராட்டம் நடத்தலாமா என்று கருதினார்கள்.

போராடுவது என்றால் திருவள்ளுவரோடு போராடுங்கள் என்று-அவர் பெயரையே வைத்திருக்கிறோம். 'இடுக்கண் வருங்கால் நகுக: அதனை அடுத்தூர்வது அஃதொப்பது இல்' என்பதற்கேற்ப - எதிர்த்து வந்த இடையூறுகளையெல்லாம் மீறி வெற்றி பெற்றிருப்பதால் - திருவள்ளுவர் பெயரை வைத்திருக்கிறோம்.

இரண்டு அடுக்கு வரிகளால் உலகத்தையே வென்றவன் வள்ளுவன். இரண்டு அடுக்கு மாடிப் பாலத்திற்கு அவன் பெயர் வைத்தது பொருத்தமுடைய ஒன்றேயாகும்.

திருக்குறள், நாடுகளுக்கும் மதங்களுக்கும் சமுதாயங்களுக்கும் அருகன், முருகன், சிவன்-புத்தன் போன்ற பல்வேறு தன்மைகளுக்கும் பாலமாக

இருக்கிறது. அதுபோல் இந்தப் பாலமும் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்தது. ஆகவே-ஈரடிக்குறளை யாத்துத் தந்த திருவள்ளுவன் பெயரையே ஈரடுக்குப் பாலத்துக்கும் வைத்துள்ளோம்.

இந்த ஆண்டு அரசின் சார்பில் பல பாலங்களைக் கட்டி முடித்திருக்கிறோம். அடையாறு -திரு.வி.க. பாலம்; அண்ணா சாலையிலுள்ள அண்ணா மேம்பாலும், திருவேற்காட்டில் ஒரு பாலமும் அமைத்துள்ளோம். இன்று தமிழகத்தில் நடைபெறுகின்ற இதுபோன்ற பால வேலைகள் வேறு எங்காவது நடைபெறுகிறதா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். வேறு மாநிலங்களில் இதுபோலக் காரியங்கள் நடக்கின்றனவா? ஏழை எளிய நடுத்தர மக்கள் பயன்பெறத் தமிழக அரசு இது போன்ற திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

அண்மையில் ஒரு பெரியவர் -நாட்டில் பால வேலைகளே தேவையில்லை; பாலங்கள் பணக் காரர்களுக்குத்தான் பயன் படுகிறது என்று அறிக்கை விட்டிருக்கிறார்.

என்ன என்று விசாரித்துப் பார்த்ததில் - அவருக்குக் கோவையில் இருக்கிற கம்பெனி -பாலம் கட்டுவதால் மறைக்கப் படுகிறது என்று அவர் கூறுவதாக நண்பர்கள் தெரிவித்தார்கள்.

இப்படிச் சிலர், அரசாங்கக் காரியங்கள் தங்களைச் சுற்றியே இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். இதையெல்லாம் துச்சமாக மதித்து இந்த அரசு மக்களுக்காகப் பற்பல காரியங்களைச் செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் மேலும் கட்டப்படுகின்ற பாலங்கள் ஒன்றையொன்று மிஞ்சுகின்ற விதத்தில் அமைய இருக்கின்றன.

குளித்தலையையும் - முசிறியையும் இணைக்கும் பாலம் - மிகப் பெரிய அளவில் கட்டப்பட்டு விரைவில் திறக்கப்பட இருக்கிறது.

இந்தியாவிலேயே எங்குமில்லாத அளவுக்கு மேலே வேகமாகச் செல்லும் வண்டிகளுக்காகவும், கீழே மெதுவாகச் செல்லக்கூடிய வண்டிகளுக்காகவும் இந்தப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது.




இந்த அரசு அதிக வேகமாகவும் செல்லாது, அதிக மெத்தனமாகவும் செல்லாது என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்தப் பாலம் அமைந்துள்ளது.

# முதல்வர் கலைஞர்

அண்ணா அவர்கள் எந்தக் காரியமானாலும் - படிப்படியாக நடக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். அதற்கு ஏற்ப-படிப்படியாகக் காரியங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம்.



தேர்தல் பிரகடனத்தில்- ''உங்களுக்காக உழைக்க எங்களுக்கு உத்தரவு அளியுங்கள்''- என்று கேட்டோம். நீங்கள் உத்தரவிட்டீர்கள் : நாங்கள் உழைத்துக்கொண்டிருக்கிறோம். காலணிபோலத் தேய்ந்தாலும் உழைத்துக் கொண்டே இருப்போம்.

**(ஆசியாவிலேயே இரண்டாவதாக அமைந்துள்ள நெல்லை—திருவள்ளுவர் பாலத்தை 14—11—1973-ல் திறந்துவைத்து ஆற்றிய உரை)**



# திருவேற்காட்டில் மூழ்கு பாலம்

திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் கோயில் பக்தர்களின் நீண்ட நெடு நாள் கோரிக்கையை நிறை வேற்றும் வகையில் திருவேற் காடு அருகில் கூவம் ஆற்றின் குறுக்கே ரூ. 10.10 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்ட திருவேற்காடு மூழ்குபாலத்தை தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 9—11—73இல் திறந்து வைத்தார்கள்.

பாலத்தைத் திறந்து வைத்துத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்று கையில்,

''கடவுட் கொள்கையைப் பொறுத்த வரையில் ஆளும் கட்சியின் கருத்து எப்படிப்பட் டதாக இருந்தாலும் எந்த மதத்தினர் எந்தப் பிரிவினர் மனமும் புண்படாமல் அவர் களுடைய தேவைகள் புறக்க ணிக்கப்படாமல் நடந்துகொள் வதே இந்த அரசின்கொள்கை. அவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் அலட்சியப் படுத்தப்படலாகாது என்று அரசு எண்ணுவதற்கு இது சான்று'' என்று குறிப்பிட்டார் கள். முதல்வர் கலைஞர் அவர் கள் தொடர்ந்து பேசுகை யில்,

''கடந்த 3 ஆண்டுகளில் செங்கற்பட்டு மாவட்டத்தில் 67 இலட்சம் ரூபாய் செலவில் இந்தப் பாலத்தைத் தவிர 8 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன;

கிளியாறுபாலம் 5·05 இலட் சம்; கோவளம் பாலம் 25 இலட்சம்; பக்கிங்ஹாம் கால் வாய் பாலம் 2·52 இலட்சம்; வாலாஜாபாத் திரிபுவனம் சாலையில் தரைப்பாலம் 7·5 இலட்சம்; கீழக்கடற்கரைச் சாலைப்பாலம் 10·4 இலட்சம்; மாமண்டூர் உத்திரமேரூர்ச் சாலைப்பாலம் 4 இலட்சம்; நெல்வாய் திருக்கழுக்குன்றம் சாலையில் 3·3 இலட்சம்; அதே சாலையில் இன்னொரு பாலம் 1·7 இலட்சம்; சோளிங்கநல்லூரை யும் குடுமியாண்டித் தோப் பையும் இணைக்கும் பாலம் 4·95 இலட்சம். இவை தவிர, வாய லூர் பாலாற்றின் குறுக்கே ஒரு பாலமும், தேன்பாக்கத் தில் ஒரு பாலமும் 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. பொதுவாக, 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் பாலம் ஆனாலும், 1 கோடி ரூபாய் செலவில் கட் டப்படும் பாலம் ஆனாலும், 10





ஆயிரம் செலவில் கட்டப்படும் பாலம் ஆனாலும் பாலங்களின் பலனை—பயனைக் குறைத்து மதிப்பிட முடியாது. இப்போது திறந்து வைக்கப்பட்டுள்ள திருவேற்காடு பாலத்தின் பயன், மிக மிக அதிகம்'' என்றார்கள்.

திருவேற்காடு கிராமம், திருப்பெரும்புதூர் வட்டத்தைச்சேர்ந்த பூவிருந்தவல்லிக் வடகிழக்காக 4.8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்த ஊரில்தான் அருள் மிகு தேவி கருமாரியம்மன் கோயில் உள்ளது. சென்னை நகரிலிருந்தும் சுற்றுப்புற கிராமங்களில் இருந்தும் இக் கோயிலுக்குவருகின்ற பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. இப்போது இந்தக் கோயிலுக்குச் செல்வதற்கு, 2.6 கிலோ மீட்டர் நீளமுள்ள ஒரு சாலை, சென்னை பெங்களூர்ச் சாலையில் 16.8 கிலோ மீட்டரில் பிரிந்து செல்கிறது. அந்தச் சாலையில் 0.2 கிலோ மீட்டரில் ஒரு சிறிய மூழ்கு பாலம் ஏற்கெனவே உள்ளது. என்றாலும், மழைக் காலங்களில் வெள்ளமேற்பட்டு, உடைப்புக்கள் உண்டாகி அடிக்கடி போக்குவரத்துதடைபடும். திருவேற்காடும் துண்டிக்கப்பட்டுவிடும். இவ்வாறு ஏற்படாமல் பக்தர்கள் எப்போதுமே எவ்விதத் தடையுமின்றிக் கருமாரியம்மன்கோயிலுக்குச் சென்று வரும் பொருட்டு ஒரு பாலம் கட்டப் பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வந்தது. அந்தக் கோரிக்கையை ஏற்று, மாதர் வேடு சாலையில் 1.6 கிலோ மீட்டரில் மூழ்கு பாலம் ஒன்றைக் கட்டி முடிக்கத் தமிழ் நாடு அரசு ஆணையிட்டது. அதன் விளைவுதான், 9—11—73-இல் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திருவேற்காடு மூழ்கு பாலம்.

## ஆளுநரின் பாராட்டு

அக்டோபர் 29-ஆம் நாளன்று, தமிழக ஆளுநர் மேதகு கே.கே. ஷா அவர்கள் பூம்புகாரில் உள்ள சிலப்பதிகாரக் கலைக்கூடத்தை பார்வையிட்டுப் புகழ்மாலை சூட்டியுள்ளார்.

''ஒப்பற்ற காவியமான சிலப்பதிகாரத்தின் உண்மையான பிரதிபலிப்பாக இந்தக் கலைக் கூடம் அமைந்துள்ளது என்பதை உலகிலுள்ளோர் யாவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் திறமையாகத் திட்டமிட்டு, கவின்மிகு எழிலோடு அமைக்கப்பட்டிருக்கிறது''—இவ்வாறு பார்வையாளர் பதிவேட்டில் குறிப்பிட்டிருக்கிறார் தமிழக ஆளுநர்.

இந்த மூழ்கு பாலம் 3.04 மீட்டர் அகலமுள்ள, 66 கண்களைக் கொண்டது. இந்தப் பாலத்திற்கான அடித்தளம் நீண்ட சதுர வடிவிலான ஆழமற்ற கிணறுகளால் (CAISSON FOUNDATION) ஆனது. அவற்றின் மீது கான்கிரீட் தூண்களும் சார்புச் சுவர்களும் எழுப்பப்பட்டுப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. மேல் தளம் கம்பியிடப்பட்ட சிமெண்ட் கற்கலவையினால் ஆனது. பாலத்தின் மீதுள்ள சாலையில் அகலம் 7.31 மீட்டர்.

இப்பாலத்தின் மொத்த நீளம் 245 மீட்டர். 106 டன் இரும்புக் கம்பிகளும் 1,007 டன் சிமெண்டும் இந்தப் பாலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இப்போது திறந்து வைக்கப்பட்டுள்ள இந்தப் பாலம், திருவேற்காடு தேவி கருமாரி அம்மன் ஆலயத்தை மாத்திரமின்றிச் சென்னையையும் ஆலயத்தின் வழியாக அம்பத்தூரையும் இணைக்கிறது. மழைக் காலத்தில், அம்மன் கோவில் பிற கிராமங்களிலிருந்து துண்டிக்கப்படுவது தவிர்க்கப்படுகிறது. பக்தர்கள் எப்போதும் தடையின்றி சென்று வர நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.





தொழில் வளர்ச்சித் துறையில் மற்ற மாநிலங்களோடு தமிழகம் போட்டி போட வேண்டும். அதிலே வெற்றி பெற வேண்டும் என்று நாம் முனைந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

80 கோடி ரூபாய் அளவில் உருவாகும் இந்தத் தொழிற்சாலை, உற்பத்தியை வழங்கும் போது, உலகத்திலேயே பிரமாண்டமான தொழிற்சாலை என்ற பெயரைப் பெற இருக்கிறது.

இங்கே இந்தத் தொழிற்சாலையில் அரசுத் துறையும், தனியார் துறையும், அது தவிர்த்துப் பொதுவான பங்குதாரர்களும் பொறுப்பேற்றிருக்கிறார்கள்.

பஸ்களை எல்லாம் தேசியமாக்க வேண்டும் என்று முனைந்த போது அறிஞர் அண்ணா அவர்கள் அது நியாயம் தான் என்றாலும், டி.வி.எஸ் போன்றவர்களின் அறிவாற்றலும் கிடைப்பதற்கு வாய்ப்புண்டாவென்று பார்க்க வேண்டும் என்று சொன்னார். அதை மனத்தில் வைத்துக் கொண்டு தான் பஸ்களை எல்லாம் தேசியமயமாக்கியிருக்கிறோம்.

இத்தகைய தேசியமயத் திட்டத்தைக்கூடச் சிலர் எதிர்ப்பார்கள்; அதை அதிதீவிரவாதிகளும் எதிர்க்கிறார்கள். அவர்கள் மிதமாகச் சென்றாலும் எதிர்க்கிறார்கள். வேகமாகச் சென்றாலும் எதிர்க்கிறார்கள். ஆகவே இதைப் பற்றி எல்லாம் பொருட்படுத்தாமல் சோஷலிசத்தைப் படிப்படியாக-மெல்ல மெல்ல-ஆனால் உறுதியாகச் செயல்படுத்துவதில் நாம் முனைப்பாக இருக்கிறோம். செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

தொழிற்சாலை ஒன்றைக் கடலூரிலும் அமைக்க விரும்பியிருக்கிறோம். அந்தத் தொழிற்சாலை இதைவிடப் பெரிய அளவில் அதிக உற்பத்தித் திறன் உள்ளதாக இருக்கும். இதைவிடப் பெரிதான ஒன்று வெளி நாட்டில் ஏதும் இருந்துவிடக்கூடாது என்றுதான்—தமிழ்நாட்டில்தான் அத்தகைய தொழிற்சாலை இருக்க வேண்டும் என்ற நினைப்பில்தான் கடலூரிலும் ஏற்படுத்த விரும்பியிருக்கிறோம். அதையும் 'ஸ்பிக்' நிறுவனத்தாரே அமைக்கவிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலை அமைக்க அரசாங்கம் எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும் என்று தொழில் அதிபர் சிதம்பரத்தைக் கேட்டேன். அவர் அதற்கு முதலீடே தேவையில்லை என்று கூறினார்.

# தூத்துக்குடியைத் தொடர்ந்து கடலூர்....

## முதல்வர் கலைஞர்

இந்தத் தொழிற்சாலையில் 26 சதவீதம் அரசாங்கத்திற்கும். 25 சதவீதம் தனியாருக்கும், மீதமுள்ள 49 சதவீதத்தைப் பங்குதாரர்களுக்கும் கொடுத்திருக்கிறார்கள். இதிலே பங்குதாரர்களாக 33 ஆயிரம் பேர் இருப்பது மகிழத்தக்க ஒன்றாகும்.

உலகத்தில் சோஷலிசம்பற்றி மிக வேகமாகப் பேசப்படுகிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் சோஷலிசத்தைச் செயல்படுத்துவதில் முனைப்பாக இருக்கிறோம். அதையும் நாம் படிப்படியாக நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகிறோம்.

எல்லாத் தொழில்களையும் தேசியமாக்க வேண்டும் என்பது கேட்பதற்கு இனிமையாகத் தான் இருக்கிறது. அதே நேரத்தில் நாம் வெறும் கோஷத்தில் மட்டும் மனத்தைப் பறிகொடுத்துவிடாமல் தமிழ்நாட்டில்தான் அதை படிப்படியாகச் செயல் அளவில் நிறைவேற்றி வருகிறோம்.

சிலர் வயல்களையெல்லாம் தேசியமயமாக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதனால் ஏற்படும் விளைவுகள் திகைப்பாகத்தான் இருக்குமே தவிர, செழிப்பாக இருக்காது.

பஸ்களை எல்லாம் நாட்டுடைமை ஆக்க முற்பட்டபோது -இதனால் நட்டமேற்பட்டாலும் பரவாயில்லை; இதனால் மக்கள் பயனடைய வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படுத்தி இருக்கிறோம்.

இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் இதன் உற்பத்தி துவங்கும்போது ஆசியாவிலேயே-ஏன் உலகத்திலேயே முதல் தரமானதாக இருக்கும். வரவிருக்கும் 74 ஜூலை மாதத்தில் இந்தத் தொழிற்சாலையில் நாளொன்றுக்கு உற்பத்தி 50 சதவீதமாக இருக்கும். ஓராண்டு முழுமை அடையும்போது இதன் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 1,500 டன் யூரியாவும் 1,100 டன் அமோனியாவும், 600 டன் காம்ப்ளக்சும் இருக்கும்.

மேலும் இது போன்ற

ஆகவே இவர்களைப் போன்றவர்களின் துணையோடு அடுத்தடுத்துப் புதிய புதிய தொழில்களை மேலும் துவக்கவிருக்கிறோம்.

ஆகவே இவர்கள் கடலூரில் துவக்கப்படவிருக்கும் தொழிற்சாலையில் நாளொன்றுக்கு யூரியா 1,900 டன்னும், அமோனியா 1,500 டன்னும், காம்ப்ளக்ஸ் 1,200 டன்னும் உற்பத்தியாகும். இந்தத் தொழிற்சாலை ஏறத்தாழ ரூ. 400 கோடி முதலீட்டில் துவக்கப்படும்.

மாநில அரசைப் பொறுத்தவரையில் இதைத் துவக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். மத்திய அரசுதான் அனுமதிக்க வேண்டும். சிதம்பரத்தில் உள்ள நடராசர் ஒற்றைக் காலில் நின்றுதான் காரியங்களைச் சாதிப்பார் என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். அதுபோல இந்தச் சிதம்பரமும் ஒற்றைக் காலில் நின்று அந்தத் தொழிற்சாலையையும் நிறுவிடப் பெருமுயற்சி எடுத்துக் கொள்வார் என்று நம்புகிறேன். இதற்காகப் பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

14—11—1973-ல் தூத்துக்குடி 'ஸ்பிக்' நீராவி உற்பத்தி இயந்திரத்தைத் துவக்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து................

# மனித வளம் பேணுவோம்



**மாண்புமிகு பிற்பட்டோர் நல அமைச்சர்**

## என். வி. நடராசன்

"மனித வளம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான சமுதாய மாற்றம்'' பற்றிய செயல் அணியின் அறிக்கையினை இப்பொழுது வெளியிடுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தச் செயல் அணிக்குக் கொடுக்கப்பட்ட பொருள்கள் பல தரப்பட்டவை, முக்கியமானவை, கடினமானவையும் கூட. சமுதாய மாற்றம், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பின் தங்கியோர் நலம், மனித வளம், வேலை வாய்ப்பு, தொழிலாளர் நலம், ஏழை எளியவர்களுக்கு மறு வாழ்வு என்பன போன்ற பல முக்கியமான, சிக்கலான பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றுக்கேற்ற பல திட்டங்கள் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளன. அரசின் பல துறைகளின் வேலை சம்பந்தப்பட்டதாகும் இவ்வறிக்கை.

நம்மிடமுள்ள இயற்கை வளங்களில் மிக முக்கியமான ஒரு வளம், நமது மக்கள் வளம் (Human resources) இந்த வளத்தினை எவ்வாறு ஆக்க முறையில், எல்லாருக்கும் நலம் பயக்கும் வகையில் பயன்படுத்த வேண்டும் என்பதனை விஞ்ஞான அடிப்படையில், முன்னேற்ற நோக்குடன், நல் வாழ்வு மற்றும் நேர்மையுள்ள சீரிய சமுதாயம் என்கின்ற இலக்கினை அடையும் நோக்குடன் ஆய்ந்தறிந்து பல பரிந்துரைகளை வழங்கியிருக்கிறார்கள். இந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கான பல செயல் திட்டங்களையும் விரிவாகக் கொடுத்திருக்கிறார்கள்.

பொதுவாக, இந்த அறிக்கை எடுத்துக் கொண்டுள்ள பொருள்கள் பற்றித் திட்டமிடத் தேவையான, நம்பகமான புள்ளி விவரங்கள் கிடைப்பது அரிது. இருப்பினும் பெரு முயற்சி செய்து அநேக விவரங்களைச் சேகரித்துள்ளார்கள். இந்த வகையில் இனி வருங்காலத்தில் நம்பகமான, உடனுக்குடன் கிடைக்கக்கூடிய விவரங்கள் சேகரிப்பதற்கான அவசியத்தை வலியுறுத்தி அதற்கான சில செயல் திட்டங்களையும் கொடுத்துள்ளார்கள்.

வேலை வாய்ப்பு, வசதி மற்றும் வேலையின்மையைப் போக்குவதற்காகக் கூறப்பட்டுள்ள வழி முறைகள் ஆகியவை சிறப்பாகக் கவனிக்கப்பட வேண்டியவையாகும். தொழில்வளம் பெருக தொழிற் பயிற்சி வசதிகளும், வேலைச் சந்தையமைப்பு முறைகளும் சீரிய முறையில் இயங்க வேண்டும், இவற்றைச் செவ்வனே செய்து முடிப்பதற்காகக் கூறப்பட்டுள்ள திட்டங்கள் பயனுள்ளவையாகும்.

நாட்டிலுள்ள வறுமையினைப் போக்க, வறுமை நிலையிலுள்ள மக்கள் எல்லாருக்கும் ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவு வருமானமாவது கிடைப்பதற்கான வழி வகைகள் செய்திடல் வேண்டும். இதன் மூலம் வேலையில்லாப் பிரச்சினையினைப் பெருமளவுக்குத் தீர்க்க முடியும். இவ்வாறு வேலையில்லாப் பிரச்சினையை வருமானக் கொள்கையுடன் இணைத்துச் செயற்படுதல் நலமாகும். நமது மாநில அளவில் ஒரு மனித வள ஆய்வு பிரிவினை (Man-Power Division) ஏற்படுத்த வேண்டியது மிக அவசியம். அதனை இவ்வறிக்கை வலியுறுத்தியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். மாநில திட்டக் குழுவினால் நியமிக்கப்பட்ட பல்வேறு செயல் அணிகள் கொடுத்துள்ள திட்டங்களைச் செயல்படுத்தினால் ஏற்படக்கூடிய கூடுதலான வேலை வாய்ப்புகள் பற்றியும் இவ்வறிக்கை கணக்கெடுத்துக் கூறியுள்ளது. அதன்படி, அடுத்த பத்து ஆண்டுத் திட்டக் காலத்தினுள் வேலையில்லாப் பிரச்சினையை நல்ல முறையில் தீர்த்து வைக்க இடமிருப்பது பற்றி நான் உள்ளபடியே மிக மகிழ்ச்சிஅடைகிறேன். படித்து வேலையற்றிருப்போரின் நிலை பற்றி இவ்வறிக்கை சிறப்பாக ஆராய்ந்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க சில திட்டங்களைக் கொடுத்துள்ளது.

தொழிலாளர் நலம் பற்றி நன்கு ஆராய்ந்து, தொழில் துறை அமைதிக்கு நல்லெண்ணம் எவ்வளவு இன்றியமையாதது என்பதனையும் வலியுறுத்தியுள்ளது. தொழிலாளர் நலனுக்கான திட்டங்களைக் கூறுவதோடு, தொழிலாளர் நலக்

குழுவின் பரிந்துரைகளைப்பற்றியும், அவற்றின் மீதான நமது மாநிலத்தின் தேவைகளைப் பற்றியும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையின் மற்றொரு முக்கியமான அங்கம் 'சமுதாய மாற்றம்' (Social Change) என்பதாகும். பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரு திட்ட முறையாக இது அணுகப்பட்டு, குறிப்பிட்ட செயல் திட்டங்களாகக்கொடுக்கப்பட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்விதம் சமுதாய மாற்றத் திட்டங்களுக்குச் சிறப்பிடம் அளித்துத் திட்டம் வகுக்கப்பட்டிருப்பது ஒரு சிறந்த அம்சமாகும். ''கிராமச் சங்கங்கள்'' (Village Clubs) போன்ற செயல் திட்டங்கள் சமுதாய மாற்றத்திற்கு உதவி உள்ளன.

தமிழ்ப் பண்பு, பரந்த நோக்குடைய மனிதாபிமானம் மிக்க ஒரு பண்பாகும். ஆகவே நமது பழம் பெரும் பண்பினையும், நாகரிகத்தையும் மறுமலர்ச்சியடையச் செய்தால், அதுவே சாதி மற்றும் இன வேற்றுமைகளைக் களைந்தெறிய உதவியாயிருக்கும். இதன் மூலம் சமுதாய மாற்றமும் எளிதில் கைகூடும் என்று நம்புகிறேன். இந்த எண்ண அடிப்படையில் தமிழ் மறுமலர்ச்சிக்கான சில திட்டங்கள் கூறப்பட்டுள்ளன. இவை தவிர சாதி, மத வேற்றுமையற்ற, நேர்மையான சமுதாயத்தை உருவாக்கும் இலக்கினை நோக்கியும் சில செயல் திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் வரவேற்கத் தக்கவைகளாகும்.

தமிழர்கள் இயற்கையிலேயே உடல் பயிற்சியிலும், சல்லிக்கட்டு போன்ற விளையாட்டுக்களிலும் ஆர்வம் மிக்கவர்கள். இந்த இயல்பினை நன்கு பயன்படுத்தி நமது மக்களின் உடல் நலத்தை நன்கு பேணி வளர்க்கச் சில திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அகில உலக நிலையில் தமிழ் நாட்டின் பெருமையை அறியவும் இது பேருதவியாயிருக்கும்.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பின் தங்கிய வகுப்பினரின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களின் கல்வியறிவு ஏனைய வகுப்பாருக்குச் சமமாக வளர வேண்டும் என்கின்ற இலக்குக்காகவும், அவர்களது (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பின் தங்கியோர்) பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் சமுதாயத்தில் அவர்களும் நல்ல முறையில் பிணியின்றி, குறைவின்றி வாழவும் திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பொது முன்னேற்றத் திட்டங்களில் செலவிடப்படும் பணத்தில் ஒரு பகுதி அந்தந்தப் பிரிவின் கீழ் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பின் தங்கிய வகுப்பினருக்கு நலம் பயக்கும் வகையில் தனிப்பட்ட முறையில் செலவிடப்படவேண்டும்என்கின்ற கருத்து ஏற்கப்பட வேண்டிய ஒரு கருத்தாகும். அவ்வண்ணமே ஒவ்வொரு பொது முன்னேற்றத்திட்டத் துறையின் கீழும் ஒரு 'துணைத் திட்டம்' இந்த வகுப்பினருக்காக இருக்க வேண்டும் என்கின்ற கருத்தும் வரவேற்கப்பட வேண்டியதாகும்.

கலப்புத் திருமணங்களை ஊக்குவிப்பதற்காகக் கூறப்பட்டுள்ளவைகளில் 'கலப்புத் திருமண அறிவுரை நிலையம்'' நல்ல ஒரு திட்டமாகும். மலைச் சாதியினருக்காகத் '' திட்ட அணுகு முறையாக'' இந்த வகுப்பினரின் ''ஒருங்கிணைந்த பகுதி முன்னேற்றத் திட்டம்'' கூறப்பட்டுள்ளது. வெறுக்கத்தக்க சில பணிகளை இப்பொழுது சில தாழ்த்தப்பட்ட வகுப்பினர் செய்து வருகிறார்கள். இத்தகைய பணிகளைக் களைந்தெறியக் கூறப்பட்டுள்ள கருத்து காலத்தின் மாறுதலை உணர்ந்து வரவேற்க வேண்டியதாகும். அது மட்டுமல்லாமல் இது உடனடியாகச்செயல் படுத்தப்பட வேண்டிய ஒன்றும் ஆகும்.




''சமுதாய முன்னேற்றத் திட்டம்'' (Social Development Planning) என்கின்ற ஒரு பொருளாதாரக் கருத்தினை நல்ல முறையில் உருவாக்கித் தந்துள்ளது இவ்வறிக்கை. சமூகத்திலுள்ள ஏனைய எளியவர்களைப் பற்றியும் ஆராய்ந்து அவர்கள் நிலை உயர வழி வகைகள் கூறப்பட்டுள்ளன. இந்த வகையில், மகளிர், குழந்தைகள் நலம், மூப்படைந்தோரின்—ஊனமடைந்தோரின் நலம்; மாணவர்களல்லாத இளைஞர்களின் நலம்; சிறையிலிருப்போர், கண்காணிப்பு நிலையங்களில் உள்ளோரின் நலம் ; பிச்சைக்காரர் மறுவாழ்வு ஆகிய பல தரப்பட்ட சமூக நலத் திட்டங்களையும் நன்கு ஆராய்ந்து அவற்றுக்கான முன்னேற்றத் திட்டங்களை விரிவாகவும், தெளிவாகவும் விளக்கியிருக்கிறார்கள்.

மேற்கூறிய திட்டங்களையெல்லாம் செயல்படுத்தச் சில நிர்வாக அமைப்பு மாற்றங்களும் தேவைப்படுகின்றன. அவை பற்றியும் பரிந்துரைகளை வழங்கியுள்ளார்கள். இவை அரசினரின் தீவிர கவனத்திற்குரியவை என்று கூறின் மிகையாகாது.

இந்தச் செயல் அணியில் உள்ள உறுப்பினர்கள் பொது வாழ்விலும், கல்வித் துறையிலும், நிர்வாகத் துறையிலும், தனியார் துறையிலும், சமூக நலத் துறையிலும்ஈடுபட்டுள்ள அறிவிற் சிறந்த பெருமக்களாவர். அவர்களது சிறந்த பணியினை நான் போற்றுகின்றேன்.

விஞ்ஞான அடிப்படையில் அமைந்த, ஏற்றத் தாழ்வற்ற சாதி மத வேற்றுமையற்ற, பொருளாதார முன்னேற்றமடைந்த, பிணிகள் அற்ற, கல்வி அறிவு மிக்க நேர்மையான, சீரிய ஒரு சமுதாயத்தை உருவாக்கவே நமது அரசு இயங்கி வருகின்றது. இந்த இலக்கினை அடையப் பல துறைகளில் பல வழிகளில் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டியது இன்றியமையாததாகும். அந்த வகையில் இப்பொழுதுள்ள நிலையினை நன்கு ஆராய்ந்து, நடைமுறைக்கேற்ற பல ஆக்கத் திட்டங்களைக் கொண்டுள்ள இந்தச் செயல் அணியின் அறிக்கையினைத் தமிழக அரசின் சார்பில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வணக்கம்.

[மாநிலத் திட்டக் குழுவின் ''மனித வளம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான சமுதாய மாற்றம்'' என்கின்ற பொருள் பற்றிய செயல் அணியின் அறிக்கையினை 24—10—73 காலை 10-30 மணி அளவில் வெளியிட்டு மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு. என்.வி. நடராசன் அவர்கள் ஆற்றிய உரை]

# உலகில் இரண்டு கிளிகள்

**21**

## பாபுவின் பரிவுக் கடிதம்

**டி.என். சுகி சுப்பிரமணியன்**

**த**க்க சமயத்தில் மனச்சாட்சியைப் பேசவிடவில்லையென்றால் மனச்சாட்சி நித்தியமாய் ஊமையாகப் போய் விடும். நாம் ஊமையாகலாம் குருடாகலாம்; நமது மனச்சாட்சிக்கு ஊமைத்தன்மை, குருட்டுத் தன்மை வந்துவிடக் கூடாது. மணிவாசகன் மனத்திற்குள் சிறிதே துளிர்விட்டு நிற்கும் மனச்சாட்சி "ராதை பாராட்டுக்குரியவள்; அவளைப் பாராட்டவேண்டும்" என்பதே. இந்தச்சந்தர்ப்பத்தை டாக்டர் நர்மதைக்காகப் பயன்படுத்திக் கொண்டிருந்தாள் ராதை. மணிவாசகனின் வருங்கால நன்மைக்காக, பாபுவின் வளர்ச்சிக்காக, டாக்டர் நர்மதையின் மனப்புயல் ஒடுங்கி ஓய்வதற்காக அவள் திட்டம் வகுத்துக் கொண்டே பரிமாறினாள். திட்டவட்டமாக வெற்றி பெற்று விடுவோம் என்றெண்ணிப் பரிமாறினாள்.

மனித பலவீனங்களுக்குள் ஒன்றுண்டு; உடற்பயிற்சிக்காக அதுகிளை தாவினாலும் வயிற்றுப் பசிக்காகப் பழக்கமுள்ள பழகிய ருசியுடைய பக்குவத்தைத்தான் விரும்பும். புலி புல்வாயை விரும்புவதும், புல்வாய் பசிய புல்லை விரும்புவதும் உணவுப் பழக்கமே தவிர்த்து அது உல்லாச வாழ்க்கைப் பழக்கமன்று. காந்திநகர் வீட்டுச் சாப்பாட்டில் இல்லாத ருசியை, காலங்காலமாக உண்டு உரமேறிய ருசியை, அன்று ராதையின் கைவண்ணத்தில் கண்டான்.

''மிகப் பிரமாதம்!''

''இதைவிட மிகப் பிரமாதமாக எனக்கு நீங்கள் ஒன்று செய்யப் போகிறீர்கள்!''

''டாக்டரம்மாவை என்னோடு உட்கார வைத்து இன்னும் உணவு பரிமாறப் போகிறாயா?''

''இல்லை!''

''பிழைத்தேன். உனக்காக என்ன செய்ய வேண்டும்?''

''நான் படித்து வெற்றி பெற்றதை நீங்கள் பாராட்டியதில் எனக்கு மகிழ்ச்சி. உங்களை எதிர்த்து வாதாடப் போவதிலும் எனக்கு மகிழ்ச்சி!''

''இன்னும் கொஞ்சம் சாம்பார் போடு. அது எனக்கு மகிழ்ச்சி!''

ராதை பெரிய ராஜதந்திரி. உள்ளத்தின் சூட்சுமம் உணவில் இருப்பதை அறிந்தவள். மனம் அமைதியடைய நாக்கைத் திருப்திப் படுத்த வேண்டும்.!

''உனக்காக நான் என்ன செய்ய வேண்டும்?''

''நீங்கள் உங்கள் அறையில் புத்தகங்களையும் ரிக்கார்டுகளையும் தனித்து எடுத்து வைப்பதைப் பார்த்தேன்.''

''நான் வந்த நோக்கங்களில் அதுவும் ஒன்று. அதாவது நாளைக்கு இங்கே லாரி வரும். எனக்குத் தேவையுள்ள புத்தகங்கள் என் கட்சிக்காரரின் ரிக்கார்டுகள் என் வீட்டிற்குப் போகப் போகின்றன!''

''நானே உடன் இருந்து அடுக்குக் கலையாமல் ஏற்றி அனுப்பி வைக்கிறேன்!''

''அப்பாடா! அதற்குத் தடை சொல்லுவாயோ என்று நினைத்தேன்; ஏமாந்தேன்''

''நீங்கள் என்றும் எதிலும் ஏமாந்தவர்கள் இல்லை; பிறரை ஏய்ப்பதில் வல்லவர்கள்!''

இருவரும் சிரித்துக் கொண்டார்கள். இத்தனையும் பார்த்துக்கொண்டும் காதாரக் கேட்டுக் கொண்டும் இருக்கிறாள் நர்மதை.

''அத்தான்! நான் சொல்வது உங்களுக்குக் கசப்பாக இருக்கலாம். ஆனாலும் கடமையை நான் சொல்லியாக வேண்டும். 'பாபு' சின்னஞ்சிறு பிஞ்சு. அவன் எந்தத் தவறும் செய்யாதவன். அவனை நீங்கள் தண்டிக்க நினைப்பது தவறு. இது என் எண்ணம். அவன் அம்மா செய்தது தப்பிதம், தவறு என்றே வைத்துக் கொள்வோம். பசு தப்புச் செய்தால் அதன் கன்றினைத் தண்டிப்பது நியாயம் அல்லவே.''

''நான் 'பாபு'வை என்ன செய்து விட்டேன்?''

''வெற்றிலைத் தட்டம் இருக்கிறது. வெற்றிலை போட்டுக் கொண்டு 'பாபு'வின் கடிதத்தைப் படியுங்கள்''.

''வெற்றிலை போட்டுக் கொண்டால் உன் பேச்சுக்கு நான் பதில் கூற முடியாது. தலையாட்டிக்கொண்டிருக்க வேண்டும். இதுவும் நல்ல யுக்திதான்!''

''நீங்கள் அனுமதி தந்தால் கடிதத்தை நான் பிரித்துப் படிக்கிறேன். அனுமதி தாருங்கள்.''

''என்ன எழுதியிருக்கிறான், விவாகரத்துக் கோரும் நர்மதையின் பையன்?''

''அப்பா என்று உங்களைக் கூப்பிட்டு எழுதியிருக்கிறான்!''

''படி!''

பாபுவின் கடிதத்தைப் படித்தாள்.

"அன்புள்ள அப்பா!

ஏம்பா நீ எனக்குக் கடிதமே போடலே! எம்மேலே கோபமா? நான் என்ன தப்புச் செய்தேன்? நான் முதல் வகுப்பில் தேர்வு பெற்றதற்குத் தங்கமெடல் கிடைத்தது. அதை உன் கையால் போட்டிருப்பாய் என்று நம்புகிறேன். நான் வரும் போது உங்கள் கையால் நான் பெற்ற மெடல் கிடைக்க வேணும் இன்னொரு சமாச்சாரம்; என் நண்பன் ஜி. முருகன். அவனும் பத்து நாள் விடுமுறைக்குப் பட்டணம் பார்க்க வருகிறான். அவனை அழைத்து வர நீங்கள் அனுமதி தர வேண்டும். உங்களை அவன் பார்க்க வேணுமாம்! உங்கள் பதிலை எதிர் பார்த்து நாங்கள் புறப்படுகிறோம். நான் கூட்டிவரும் படியாக நீங்கள் சம்மதம் தர வேணும். அம்மாவுக்குலெட்டர் எழுதினேன். அம்மாவும் பதில் போடவில்லை. உடனே பதில் போடுங்கள். நீங்கள் பதில் போடாவிட்டால் நான் விடுமுறைக்குப் பட்டிணம் வர முடியாது. என் நண்பனைக் கூட்டிப் போவதாகச் சொன்னது பொய்யாகப் போய்விடும். தயை செய்து எனக்கு அனுமதி தரவும்.

இங்ஙனம்,

உங்கள் அன்பு மகன்,

எம். பாபு.

நேரிலே நின்று பேசுவது போலப் பாபுவின் சொற்கள் வக்கீல் உள்ளத்துள் போயின. ஆனாலும் நாளைக்கு வீட்டைக் காலி செய்து முக்கிய பொருள்களோடு அவர் போக இருக்கிறார். இது எதிர்பாராத சங்கடம்.

"பாபுவுக்காக உங்கள் மனம் ஐம்பது சதவிகிதம் இறங்கட்டும். எனக்காக ஐம்பது சதவிகிதம் இறங்கட்டும்".

"என்னை நீ குடும்ப வேலிக்குள் கட்டிப் போடப் பார்க்கிறாயா?"

"நீங்கள் 'பாபு' இருக்கும் வரை இங்கே இருங்கள்! அவன் புறப்பட்டுப் போனதும் நீங்கள் காந்திநகர் வீட்டுக்குப் போகலாம்".

"பத்து நாள் எனக்குச் சிறைவாசம் தருவதென்று தீர்மானித்துவிட்டாய்!"

டாக்டர் நர்மதா "வருகின்ற பாபுவுக்குக் குடும்பத்தின் கசப்புத் தெரிய வேண்டாம். அவன் பிஞ்சுக் குழந்தை" என்று பக்கத்தறையிலிருந்து அழுதபடியே சொன்னாள்.

"அந்த நீலிக்கண்ணீரை நிறுத்தச் சொல். பத்து நாட்களுக்குப் பிறகு கோர்ட்டில் விவாகரத்து வழக்கு நடக்கப் போகிறது. பத்து நாட்களுக்குப் பின்பு, ஊரும் உலகமும் அறியும். அப்போது பாபுவுக்குத் தெரியப் போகிறது; இப்போது தெரிந்தால் என்ன?"

"அவனும் அவனது நண்பன் சிறு குழந்தையும் வரவிருக்கிறார்கள். அதைத் தடை செய்யவேண்டாம். அதற்காகத்தான் உங்களிடம் இத்தனை தூரம் வரம் கேட்கிறேன்."

மீண்டும் ராதையின் கண்கள் கெஞ்சின; நெஞ்சம் கெஞ்சியது.

"ஒரு கண்டிஷன் போடுவேன்."

"என்ன விதியானாலும் விதியுங்கள்."

"டாக்டரம்மா தன் வழக்கை வாபஸ் வாங்கக் கூடாது! பாபு போன பின்பு ஒரு விநாடி கூட இங்குத் தங்கவும் மாட்டேன்."

"ஒப்புக் கொள்கிறேன். பாபு வருகிறபோது நீங்கள் வரவேற்கலாம் இப்போதே நீங்கள் போகலாம்."

ராதை! நீ உன் கட்சிக்காரிக்காக வாதாட உரிமை கோர்ட்டில்தான் உண்டு. வீட்டிலே அவளே பேசியாக வேண்டும்."

"செல்லேன் அக்கா!"

"பாபு வீட்டில் இருக்கும் வரை நமக்குள் ஏற்பட்ட பிளவு தெரியாது. பாபு, உதகைக்குப்போன பின்பு கண்டிப்பாக வழக்குத் தொடருவேன். உங்கள் சன்னத்துக்குச் சங்கடம் வரும். என் அனுமதியின்றி மறுமணம் செய்த உங்கள் மீது நடவடிக்கை யெடுக்கப்படும். அந்த வழக்கை ராதை நடத்துவாள்! வெற்றி தோல்வி உண்டு. ஆனால் வீம்பில் கொஞ்சம் கூட நான் சளைக்கவில்லை."

"சபாஷ்! ராதை நீ கொடுத்த சுவை விருந்தைவிட இந்தச் செவி விருந்து மிகவும் சூடாகவும் இருக்கிறது. என் அறிவுக்குச் சவாலாகவும் இருக்கிறது!"

"அப்படியானால் 'பாபு'வுக்குக் கடிதம் எழுதட்டுமா?"

"டிரங்கால் போடு. பாபுவுக்காக இந்த வீட்டில் இருக்க நான் சம்மதிக்கவில்லை. நானும் மனிதன். உன் தியாகங்கள் அத்தனைக்கும் நான் ஒரு பரிசு தந்தாக வேண்டும். 'பாபு'வுக்காக இங்கே தங்குவது; அவன் இருக்கும்வரை இருப்பது; அதன் பின்பு உன்னையும் உன் கட்சிக்காரி நர்மதையையும் விவாகரத்து வழக்கில் சந்திப்பது; இதில் எந்த மாற்றமும் இருக்காதே!"

"இருக்காது. நீங்கள் தங்குவதற்கு ஒப்புக் கொண்டதற்கு என் நன்றியை நான் தெரிவித்துக் கொண்டேன். இப்போது நீங்கள் கிளம்பலாம்."

"ஆமாம் நானும் மறந்து போய் உட்கார்ந்துவிட்டேன்! பாபு எந்தத் தேதியில் இங்கு வருகிறான்?".

"பத்தாம் தேதி இங்கு வருகிறான். இருபதாம் தேதி உதகைக்குப் புறப்பட வேண்டும்!"

"காலை ரெயிலில் வருகிறானா? மாலையிலா?"

டாக்டர் நர்மதா "காலை ரெயில் 8.30க்கு வருகிறது!" என்று உள்ளறையிலிருந்து பதில் சொன்னாள்.

"நான் சரியாக 8 மணிக்கு இங்கே இருப்பேன்!" காலை பத்து மணிக்கு லாரி வரும். சாமானை ஏற்றிப்போவதற்கு!"

"பாபு ஊருக்குப் போகும் வரை இருப்பீர்கள்!"

உனக்கு ஒரு நண்பன் கிடைக்க வேண்டுமா? அப்படியென்றால் நீ ஒரு நண்பனாக மாறவேண்டும்! உனக்கு உதவி வேண்டுமா? நீ முதலில் மற்றவனுக்கு உதவி செய்!

—எமர்சன்.



"ஆமாம். விவாக ரத்து சம்பந்தமான சட்டப் புத்தகங்கள் இந்த அறையில் அடிவரிசையில் இருக்கின்றன. அதனைப் படிப்பது உன் வழக்குக்கு உபயோகமாகயிருக்கும்."

இத்தனையும் பேசிவிட்டு, மணிவாசகன் அறையைவிட்டு சில வழக்கு ரிக்கார்டுகள், இரண்டொரு சட்டப் புத்தகங்களுடன் காருக்குப் போனான். அவனுக்குரிய ரிக்கார்டுகளைச் சுமந்து சென்று காரேற்றி அதன் கதவைச் சாத்தி வழியனுப்பியும் வைத்தாள் புதிய வக்கீல் ராதை!

## 22

# பத்து நாள் பாசக்கயிறு

எந்தக் காலத்திலும் எல்லா இடங்களிலும் மனிதவாழ்க்கை இரண்டு தத்துவங்களுக்குள் அடங்கிக் கிடக்கிறது—ஒன்று பொருள் தத்துவம்; மற்றொன்று குடும்பத் தத்துவம். பொருளும் குடும்ப வாழ்க்கையும் ஒன்றை விட்டு ஒன்று விலக முடியாதவை. ஒன்று வளர்ந்தால் மற்றொன்றும் செழிக்க வேண்டும். ஒன்று வளர்ந்து மற்றொன்று அழியுமானால், அந்த மனிதர்கள் வாழத் தெரியாதவர்கள்.

உலகத்து அறிஞர்கள் யாவரும் மார்க்ஸ் முதல் பிரஸ்ட் வரை இந்த இரு அடிப்படையில்தான் மனித குலத்தைக் கணிதம் செய்கிறார்கள். பொருள் வளர்ச்சியால் குடும்ப வாழ்க்கை நிம்மதி பெறும் ; குடும்பத்து உறவு ஒழுங்காக இருந்தால் பொருள் வளர்ச்சிக்குக் குந்தகம் வராது!

மணி வாசகன் ஏழையாக இருந்த போது, தன் மாமன் குடும்பத்தில் பற்றுதலும் பாசமும் கொண்டு வாழ்ந்தான். ஒன்றாகப் பழகிய ராதையை மனத்தாலும் தொட்டு விட அஞ்சினான்! அவனுக்குக் குடும்பத்துள் கசப்பும் பழிவாங்கும் எண்ணமும் பிறந்தது. கனகாம்பரத்தை மனம் நாடத் தொடங்கியது. பொருளால் வளர்ச்சியடைந்த வாழ்க்கை, தடம் புரண்டது. இதனை அவன் எண்ணிப் பார்க்கவும் மறுத்தான். திருந்தவும் மனம் ஒப்பினான் இல்லை.

மாசைக் களைந்து மறு பிறவியாக வந்து வாழவும் மறுத்து விட்டது அவனது செல்வச் செழிப்புள்ள மனம்.

டாக்டர் நர்மதை, சிறைக் கைதி போலத்தாயன்பு காணாமல் டாக்டருக்குப் படித்த காலத்திலும், பள்ளியில் படித்த காலத்திலும் வீட்டு நிர்வாகம் வீட்டுப் பண்பு என்று எதையும் பழகாமல் தனித்துவாழும் பறவையாக வளர்ந்து விட்டாள். பொருளாதாரச் சுதந்தரமும் புதுமைப் பெண்ணின் பெரு மிதமும் அவள் நெஞ்சுக்குள் நிமிர்ந்து நின்ற காரணத்தால் அவளும் விட்டுக் கொடுக்க மறுத்தாள்.

கல் கிணற்றில் மோதிய இரும்புத் தோண்டியின் நிலைமை இவர்கள் குடும்பத்தில் உண்டாகி இருந்தது. பணம் வந்தால் பத்தும் பறந்து போகும்; பசி வந்தால் அல்ல என்பது இவர்கள்வாழ்க்கைக்கு பொருந்தும் சொல்லாகி விட்டது. இருவருமே முதலாளித்துவ அடிப்படையில் தங்கள் மனங்களை லயிக்கவிட்டு விட்டார்கள். தத்தம் தொழிலைப் பெரிதாக நினைத்தார்களே தவிர தத்தம் வாழ்க்கை, அதன் அடிப்படையான உடல் தத்துவம், உள்ளப் பாங்கு, குழந்தைப்பேறு யாவற்றையும் அறவே மறந்து போனார்கள்.

அன்பு என்பது பள்ளிக்கூடம் சொல்லித் தரும் பாடமில்லை. அது வாழ்க்கையில் மலர வேண்டிய அனிச்சப் பூ. ஆணின்றிப் பெண்ணும் பெண்ணின்றி ஆணும் வாழும் வாழ்க்கை மனித இன வாழ்க்கையன்று. அது ஐந்தறிவுக்கும் கீழான நிலையுள்ளவர்களின் வாழ்க்கை. குடும்பத்தின் நலம் யாருக்கு யார் எஜமானன் என்பதில் இல்லை; யாருக்கு யார் எச்சமயம் வலிந்து பணிபுரிய வேண்டும் என்பதைப் பொறுத்தது.

இந்த ஒரு கலையைத் தத்துவமாகக் கடைப் பிடித்தவள் ராதை!

அவள்தான் ரெயிலடிக்குப் போனாள். உதகையிலிருந்து வரும் பாபுவையும் அவன் தோழன் ஜி. முருகனையும் உடன் அழைத்து வந்தாள்.

"இதுதான் உன் அம்மாவா?"

"எனக்கு இவள் தான் அம்மா! ராதையம்மா!"

"ஓகோ டாக்டரம்மா இல்லை. புது வக்கீலம்மா!"

இருவரையும் மோட்டார் வண்டியில் ஏற்றி வீட்டுக்குக் கூட்டி வந்தாள்.

டாக்டர் ஓர் அறையில் இருந்தாள்.

எட்டு மணிக்கு வந்த வக்கீல் தமது அறையில் இருந்தார்.

இருவரும் இரு அறைகளில் இருந்தவர்கள் மட்டுமல்லர்; இரு வேறு உலகத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள்.

கார் வந்து வீட்டிற்குள் நின்றதும் டாக்டரும் ஓடி வந்தாள், வக்கீலும் ஓடி வந்தார்.

"பாபு" என்ற குரல் ஒன்றாக இணைந்தது.

காரின் கதவைத் திறந்து இருவரும் அவனைத் தூக்கிக் கொள்ள முயற்சி செய்தார்கள். இருவர் முகத்திலும் பொலிவு. ஒருவரை ஒருவர் தொட்ட சிலிர்ப்பு.

"இவன் என் நண்பன்" என்றான் பாபு.

"என் பெயர் ஜி. முருகன்" என்றான் சிறுவன்.

முருகனையும் பாபுவையும் அருகாக அணைத்துக் கொண்டு வீட்டிற்குள் நடந்தார்கள் தம்பதிகள்.

சண்டை போட்ட தம்பதிகளாக முகத்தை வைத்துக் கொள்ள வில்லை. அவர்கள் இருவரும் சண்டையை மறந்து விட்டார்களோ; இல்லை மறைத்துக் கொண்டு குடும்ப நாடக மேடையில் நடிக்கிறார்களோ!

பையன்கள் இருவரும் வீட்டிற்குள் வந்ததால் பெரும் பரபரப்பு. வெளிச்சம். சத்தம். ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு இடம் பார்க்க வேண்டுமென்று திட்டம் போட்டார்கள். வீட்டில் இருந்

> வாழ்க்கை என்பது ஓர் அலை. அதன் வடிவமும் எண்ணமும் ஓயாமல் மாறிக் கொண்டேயிருக்கின்றன.
> —டிஸ்ரலி.

தானும் வெளியே கிளம்பினானும் இரு குழந்தைகளும் அப்பாவோடும் அம்மாவோடும் கை கோத்துக் கொண்டு கிளம்பின. இதன் காரணமாக டாக்டர் மனத் திரையைப் போட்டுக் கொண்டாலும் சொல்லிலும் செயலிலும் திரையைப் போட்டுக்கொள்ள முடியவில்லை.

வக்கீலுக்கும் இதே நிலைமை. "நாம் அந்நியர்கள் இந்தப் புதியநாடகத்திற்காகத் தம்பதியர்களாக நடிக்கிறோம்" என்னும் நாடகத்தை ஒத்திகை பார்ப்பது போல இரண்டொரு நாள் இருந்தது.

சென்னையின் அழகிய கடற்கரை, பூங்காக்கள், மிருகக் காட்சிச்சாலை, மியூசியம் என்று சுற்றினார்கள். வீட்டிலிருந்து எடுத்துப் போன உணவையும் உண்டார்கள்; சோர்ந்து போய் ஓட்டலில்உணவும் உண்டார்கள். சில நாள் ராதை வருவாள். சில நாள் வராமல் இருக்கும் காரணத்தைச் சொல்லி விடுவாள்.

பாபுவுக்குத் தன் வீட்டையும், தன் வீட்டு இரு கார்களையும் தன் தாய் தந்தையை முருகனுக்குக் காட்டியதில் பெருமையடைந்தான். தன் வீட்டுச் செல்வச் செழிப்பை அறிவிக்கும் வாய்ப்பு, தனக்குக் கிடைத்தது பற்றி மிகவும் பெருமைப் பட்டான் பாபு.

முருகன் பட்டணத்தின் சூழ்நிலையையும் பரபரப்பையும் முதல் தடவையாகப் பார்க்கிறான்.

மோட்டாரின் பாம்...பாம். ...சத்தம் கேட்டால், "சின்னஞ்சிறு குழந்தை அம்மா அம்மான்னு கத்துகிற மாதிரி இருக்குது" என்பான்.

கடலலையைப் பார்த்தால் 'தாய் மேல் வந்து விழுகிற குழந்தை போல இருக்குது' என்று பேசுவான்.

அடையாறு ஆல மரம் பார்த்த போது "ஏண்டா பாபு ஒவ்வொரு விழுதும் இந்த மரத்தைப் பெரிசு பருத்துது. ஒவ்வொரு குழந்தையும் தாய்க்கும் தந்தைக்கும் உதவி செய்தா குடும்பம் உருப்படும்' என்னும் ஆசையை வெளியிட்டான் முருகன்.

"தொங்கும் விழுது உதவாக் கரைப் பிள்ளைக்குச் சமம். வேர் விட்ட விழுது உதவும் பிள்ளையென்று எங்கள் வாத்தியார் சொன்னார்" என்று பாபுவும் பேசினான்.

நீதி மன்றத்திற்குள் இருக்கும் கலங்கரை விளக்கைப் பார்க்க மாடி மாடியாக ஏறினார்கள். மிகவும் சிரமப்பட்டு வக்கீல் மணிவாசகன், டாக்டர் நர்மதை ஏறினார்கள். ஒவ்வொருத்தர் ஒவ்வொரு குழந்தையின் விரலைப் பிடித்துக் கொண்டார்கள்.

உயரமான இடத்தில் நின்று கடலையும், கடலுக்கு எதிரே இருக்கும் சின்னஞ் சிறு கட்டடங்களையும் பார்த்து மகிழ்ந்தார்கள்.

"இரவிலே இந்தக் கலங்கரை விளக்கு, சுழலும். இதன் வெளிச்சம் பார்த்ததும் கடலில் மிதக்கும் கப்பல்கள் துறைமுகத்திற்கு வரும்" என்று மணிவாசகன் இருவருக்கும் விளக்கினான்.

"இருட்டிலே தவிக்கிற குழந்தைகளுக்கு ஒலி கொடுக்கிற தாய்க்கு கலங்கரைவிளக்கு என்று பெயர் கொடுக்கலாம்"

இந்த உதாரணம் கேட்டு அறிவு செறிந்த வக்கீல் மனம் ஒரு கணம் அதிர்ச்சி பெற்றது. ஒளியாகப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போன கலங்கரை விளக்கிலிருந்து ஒலியை எழுப்பி விட்ட முருகனை நெஞ்சாரத் தழுவிக் கொண்டான்.

படிப்படியாக இறங்கி அவர்கள், கிண்டியிலுள்ள மான் பூங்கா பார்க்கப் போனார்கள்.

அங்கு பஞ்ச வர்ணக் கிளி ஒன்று தன் குஞ்சுக்கு இரை கொடுத்துக் கொண்டிருந்தது.

அதன் அருகே நின்று யாவரும் வேடிக்கை பார்த்தார்கள்.

"இது எப்படி இருக்கிறது முருகா?"

" நீங்க இரண்டு பேரும் பாபுவிடம் காட்டுகிற அன்பு மாதிரி இருக்குது! கிளி, குஞ்சுக்கு இரை கொடுக்கும் அழகு வேறே எந்தப் பறவையிடம் இருக்க முடியும்?"

போலியாக வேஷம் கட்டிய இருவரும் திடுக்கிட்டார்கள்.



**பெரிய முட்டை 32 காசு**

பெரிய கோழி முட்டைகள் தனியார் கடைகளில் 36 காசு முதல் 40 காசுகள் வரை விற்கப்படுகின்றன. ஊட்டச் சத்து மிக்க உணவான முட்டைகளைத் தமிழக மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைத்திடச் செய்ய வேண்டுமென்ற இலக்குடன், தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் பெரிய முட்டைகளை, ஒன்று 32 காசு வீதமே விற்பனை செய்து வருகிறது. 97, லாயிட்ஸ் சாலை, சென்னை என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் அலுவலகத்தில் மிகப் பெரிய (Extra Large) முட்டைகள் 34 காசுகள் வீதம் விற்கப்படுகின்றன.

டாக்டரம்மா தன்னைத் தாயாக எண்ணினாள். தன் மகன் பாபுவைச் சின்னஞ் சிறு கிளிக் குஞ்சாக எண்ணிக் கற்பனை செய்தாள்.

மறுநாள் :

வட பழனியில் நடந்த சினிமா ஷூட்டிங் பார்த்தார்கள். வடபழனி முருகன் கோவிலுக்குப் போனார்கள்.

''பாபு நாம் வந்த இடத்துச் சாமியின் பெயர் தெரியுமா?''

''முருகன்! உன் பெயரும் அதுதான்!''

முருகன் சொல்லுவான், ''எனக்கு ரொம்பப் பிடித்த தெய்வம் முருகன். ஏன் தெரியுமா? உலகம் என்பது வேறு; தெய்வம் என்பது வேறு. இது கணபதியின் எண்ணம். அம்மாவும் அப்பாவும் உலகம் என்று நினைத்தவன் முருகன். அதனாலே எனக்கு முருகன் என்றால் ரொம்பப் பிடிக்கும்!''

''அப்பாவும் அம்மாவும் இல்லாத உலகம் என்னடா உலகம்?''

''நரகலோகம்'' என்றான் முருகன்.

டாக்டர் நர்மதைக்கும் தலையில் யாரோ குட்டுவது போல இருந்தது. வக்கீல் மணிவாசகனுக்கும் கன்னத்தில் யாரோ பளீர் என்று அறைவது போல இருந்தது. இருவரும் தத்தம் வலியை விழுங்கிக் கொண்டிருந்தார்கள்.

''நம்ம வாத்தியார் சொன்னாரே ஒரு நாள் நினைவு இருக்கா?''

''எதுடா முருகா?''

''தாயிற் சிறந்தொரு கோயில் இல்லை. தந்தைசொல் சிறந்தொரு வாசகம் இல்லை என்பதாக.''

''இரண்டையும் நம்ம பக்கத்தில் பார்க்கிறோமே!''

குழந்தைகள் இயல்பாகச் சிரித்தார்கள்.

நடித்துப் பழகிய இருவரும் மனத்தில் நடித்துக் கொண்டு ஒன்றாக இணைந்த மாதிரிச் சிரித்தார்கள்.

''பாபு! பிறர் காட்டற அன்பும் பாசமும் நமக்கு லகுவாக இருக்குது. அதேபோல நாம அன்பு காட்டணுமானால் எத்தனை கஷ்டமாகஇருக்குது?''

''எதைச் சொல்லறே?''

''பாபு! உன் அப்பா அம்மா ரெண்டு பேரும் உன்னிடம் எத்தனை அன்பையும் பாசத்தையும் பொழியறாங்களோ இதுபோல அன்பை வேறு எங்கடா நான் கண்டேன்? எங்கடா நான் அனுபவிச்சேன்?

உனக்கும் எனக்கும் பேதமில்லாதபடி எந்த வீட்டிலே நடத்துவாங்க?''

கண்ணீர் மல்கத் தன் ஆனந்தத்தை முருகன் சொன்னான்.

பேதங்களை மனத்தில் மறைத்துக்கொண்டு கணவன்-மனைவியாக நடித்த அவர்களின் மனம் பேதலித்தது.

காணுமிடமெல்லாம் கண்ட பொருளெல்லாம் அன்னையாகவும் அன்புக் குழந்தையாகவும் உவகை காட்டிப் பேசிய முருகனைத் தம்பதிகளால் மறக்க முடியவில்லை.

தங்களை மறந்து கொண்டு வந்தார்கள்.

தங்கள் பத்து நாள் நாடகத்தையும் செம்மையாக நிறைவு செய்து கொண்டு வந்தார்கள்.

நாளைக்குக் குழந்தைகள் இருவரும் ஊர் திரும்ப வேண்டும்.

அவர்கள் நடித்த நாடகத் திரை விழ வேண்டும்!

(அடுத்த இதழில் முடியும்)

## தரம் பிரித்து விற்றிடுவீர் !

எப்பொருளையும் தரம் பிரித்து விற்பதனால் நல்ல இலாபம் பெறமுடியும். குறிப்பாக முட்டைகளை அவைகளின் எடைக்குத் தகுந்தவாறு தரம் பிரித்து விற்றால் விற்பனை அங்காடிகளில் அதிக விலைக்கு விற்க முடியும். படத்தில் கண்ட கருவி (Grading) முட்டைகளை எடைக்குத் தகுந்தவாறு தரம் பிரிக்கப் பயன்படும். இக்கருவியின் மூலம் மிகப் பெரிய (Extra Large), பெரிய (Large), நடுத்தர (Medium), சிறிய (Small) ஆகிய நான்கு வகையாகத் தரம் பிரிக்க இயலும். இக்கருவியைப் பயன்படுத்திக் காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையில் 45 கிராம் எடையும் அதற்கு மேற்பட்ட எடையும் உள்ள முட்டைகளைப் பெரியது (Large) என்றும், 45 கிராம் எடைக்குக் குறைந்த முட்டைகளைச் சிறியது (Small) என்றும் தரம் பிரித்து அவைகளை ஒவ்வொன்றும் முறையே 29 காசு என்றும், 26 காசு என்றும் விற்கப்படுகிறது.



# புத்துணர்வும் புதுவாழ்வும்



இந்த மண்ணுலகில் வாழ்கின்ற மக்களில் சிலர் விண்ணுலகம் சென்று நிலவில் இறங்கி, அங்கேயும் உயிரினங்களை வாழ வைக்க முடியுமா என ஆராய்ந்து வந்து அந்த அதிசயத்தை நாடெல்லாம் அறிவிக்கிறார்கள். ஆனால் இந்த விஞ்ஞான உலகத்தில் மக்களில் பலர் இந்த பூமியில் இடர்ப்பாடுகளையெல்லாம் கடந்து, தடைகளையெல்லாம் தகர்த்து வாழ்ந்து காட்டுவதையே மிகப் பெரிய சாதனையாகக் கருதுபவர்களாக இருக்கிறார்கள். அவர்களெல்லாம் இந்த மண்ணில் ஆண்கள், பெண்கள் குழந்தைகள் வடிவில் ஏதும் செய்ய இயலாத உடல்களாக, கண்பார்வை இழந்தவர்களாக, காது கேளாதவர்களாக, ஊமைகளாக; நோயாளிகளாக, நொண்டிகளாய், முடங்களாய், மூளைவளர்ச்சி குன்றியவர்களாய் இன்னும் ஏதேதோ வடிவில் காட்சியளிக்கிறார்கள். வாழ்க்கையில் ஏதாவது சாதனைகளைப் புரிய அவர்களுடைய உள்ளங்களும் தேடியலைகின்றன. ஊனமுற்றவர்கள் மற்றவர்கள் தங்களுக்குச் சந்தர்ப்பங்களை அளித்து வாழ வழிகாட்ட வேண்டுமென்று விரும்புகிறார்களேயல்லாமல் வெகுமதி கிடைக்குமா என்று ஏங்கி எதிர்பார்த்ததில்லை.



அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் சந்தர்ப்பங்களை அளிக்க வேண்டும். அவர்கள் பயனுள்ள வாழ்வைப் பெற, வாழ்வு உயர, உதவிகளை வழங்கிடவேண்டும். இன்றைய உலகில் ஊனமுற்று மறுவாழ்வுக்கான உதவிகள் தேவைப்படுகிறவர்கள் 3 முதல் 4 கோடி வரை உள்ளனர். இந்தியாவில் மட்டும் 1 கோடியே 20 இலட்சம் பேர் ஊனமுற்றவர்கள் இருக்கிறார்கள். மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் ஊனமுற்றவர்களுக்கு உயர்ந்த முன்னுரிமையும், சிறந்த வழிகாட்டுதலும், வளர்ச்சித் திட்டங்களை வகுத்தலும்தான் அரசின் நோக்கமாக உள்ளது. இதற்கான வேலைகள் மிகப் பெரிது. ஊனமுற்றவனாக ஒருவன் இருந்தபோதும் முழுமையாக எல்லாம் இயலக்கூடிய மனிதனைப் போலவே, தன்னுடைய திறமையையும் பயன்படுத்த வேண்டுமென அவனது ஆவலும் உணர்வுகளும் விரும்புகின்றன. குறைந்த பட்சம் அவனுக்கு வாழ வழி வேண்டும்; பயிற்சி வேண்டும்; பயன்படுத்த வாய்ப்பு வேண்டும்.



அரசு அலுவலர்கள், நிர்வாகிகள், சமூகப் பணியாளர்கள், மருத்துவர்கள், கல்வி நிறுவனங்கள், மற்றும் பொது மக்களும் பெற்றோர்களும் ஊனமுற்றவர்களுடைய இயலாமையைப் போக்க இணைந்து செயலாற்றி வாழ்வு தர வேண்டும். ஊனமுற்றவர்கள் தங்களுடைய திறமைக்கேற்றவாறு தங்களுடைய எதிர்காலத்தை வகுத்துக் கொள்வதும் அவர்களுடைய பொறுப்பாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ உரிமை இருப்பது போல், திறமையின் பங்கை உலகுக்குச் செலுத்துவதிலும் உண்டு. கல்வியின் மிகுந்த மதிப்பு அது சமுதாயத்தை அடையும் போதும், சமுதாயம் அதை ஏற்றுக் கொள்ளும்போதுந்தான் பிரகாசமாகச் சுடர் விடுகிறது. பயிலும் போதே சம்பாதிக்கும் அளவிற்குப் பணிக்கூடங்கள் திறக்கப்பட வேண்டும். கற்ற கல்வி நாட்டுக்கும் வீட்டுக்கும் பயனைத்தர வேண்டும்.





ஊனமுற்றவர்களை வேலையில் அமர்த்தத் தொழில் அதிபர்கள் தயங்கினார்கள். சரியான கல்வியும், பயிற்சியும் பெற்றவர்கள் ஆரோக்கியமான மனிதனைப் போல உற்பத்தி பெருக்கவும், பொறிகளை இயக்கவும் இயலும் என்பது நிரூபணமான பின்னர் தயக்கங்கள் பறந்துவிட்டன.



மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் ஊனமுற்றவர்களுக்கு மருத்துவ உதவியும், கல்வி, வேலை வாய்ப்பு வசதிகளும் அளிப்பதோடு மட்டுமல்லாமல், சமூகத்தில் ஒற்றுமையையும், அங்கீகாரத்தையும்

அவர்களும் பெற ஏற்பாடு செய்ய வேண்டும். ஊனமுற்ற தாழ்வு மனப்பான்மையைப் பெற்றிருந்தாலும் சமுதாயம் அவர்களை ஒருங்கிணைத்து ஒத்துழைப்பு நல்கி அங்கீகாரம் வழங்கிட வேண்டும்.

குறிப்பாக ஊனமுற்ற குழந்தைகளுக்குத் தனிக் கவனமும், பேணுதலும் தேவைப் படுகின்றன. நாம் எவ்வளவு பணியைச் செய்தாலும், சரியான நபர்களுக்குச் சரியான நேரத்தில் கிடைக்கின்றனவா என்றும் கவனிக்க வேண்டும். அவர்களுக்குக் கல்வி வாய்ப்பையும் பயிற்சியையும் அளிப்பது, அவர்கள் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்வதற்குப் பெரிய முதலீடாகும்.

அண்மைக் காலம் வரை, ஊனமுற்றவர்கள் பயனற்றவர்களாக, இருண்டு போன வாழ்க்கையோடு, எவரையாவது நம்பியே வாழ வேண்டியிருந்தது. வாழ்க்கையைப் பற்றிய நவீனத் தத்துவங்களும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், ஊனமுற்றவர்களுக்கும் அவர்களின் திறமைக்கேற்றவாறு பொருத்தமான வேலைக்கு வாய்ப்பளித்துச் சம்பாதிக்கவும், தங்களைக் காத்துச் சொந்தக் குடும்பம் நடத்தவும் வழிகோலியுள்ளன.

தமிழ்நாட்டில் மட்டிலுமே ஊனமுற்றவர்களுக்காகச் சிறப்பாக வாரியம் ( Board ) அமைக்கப்பட்டுள்ளது. ஊனமுற்றவர்கள்வேலைவாய்ப்பைப் பெறுவதன் மூலம், மற்றவர்களை நம்பி வாழ்ந்து அவர்களுக்குப் பாரமாய் இருப்பதிலிருந்து விலகிக் கொள்கிறார்கள். ஊனமுற்றவர்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பிலிருந்தும் மற்றவர்கள் விடுபடுகின்றனர்.





தமிழ்நாடு அரசு தனது அமைச்சர்கள் மூலமும் அலுவலர்கள் மூலமும் இவர்களுக்கெல்லாம் நிறைந்த வசதிகளைச் செய்து கொடுத்து வருகிறது. மறுவாழ்வளிப்பதென்பது தனி மனிதனால் மட்டுமோ அரசினால் மட்டுமோ இயலக்கூடிய காரியமல்ல. அரசும் மக்களும் இணைந்து செயலாற்றிட வேண்டும். ஒவ்வொருவரும் இதற்கான கல்வி நிறுவனங்கள் - நிலையங்களுக்கு உதவ முன்வர வேண்டும்! தடைக்கற்களான சுமைகளைத் தாங்கிக் கொள்ள ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

பார்வையற்றோருக்கு அரசினால் ஆறு பள்ளிகளும் தனியார்களினால் நான்கு பள்ளிகளும் நடைபெறுகின்றன. பயிற்சி நிலையங்கள் அரசால் ஒன்றும், தனியார் நிர்வாகத்தின் மூலம் மூன்றும் உள்ளன. கல்வி நிலையத்தில் 1,000 பேரும், பயிற்சி நிலையத்தில் 81 பேரும் பயிலுகிறார்கள். ஊனமுற்றவர்களின் மாறுபட்ட தேவைகளையெல்லாம் கவனிக்க 38 நிறுவனங்கள் உள்ளன. 1970-க்குப் பின்னர் மட்டும், மேலும் 10 நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன.



தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு பெற்றனர். பிறவிக்குருடனும் கண்பார்வை பெற முடிந்தது. கைவண்டி இழுத்தவனும் சைக்கிள் ரிக்‌ஷாவைப் பெற முடிந்தது. மனமுண்டானால் அனைத்திற்கும் மார்க்கமுண்டு. ஒத்துழைப்புத் தேவை; உதவுகின்ற மனம்தான் பெருக வேண்டும்.

இந்த மண்ணில் வாழ்கின்ற ஒவ்வொரு மகனும் வாழ்வது போல் அவர்களும் வாழ்க்கையை இனிதே அனுபவிக்க வேண்டும். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணுகின்ற தமிழ்நாடு அரசு ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வளிப்பதன் மூலம் அவர்கள் புன்னகையிலும்இறைவனைக்காணுகிறது.

—ம. அ.



# நிதி நிலைக் கூட்டம் அறிவித்த
# நீர்ப்பாசனத் திட்டங்கள்

**தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் 15—11—73ல் நடைபெற்ற தமிழக அரசின் நிதிநிலைக் கூட்டத்தில் புதிய நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் விவாதித்து அனுமதிக்கப்பட்டன. அவை வருமாறு :**

மதுரை மாவட்டம், பழனி வட்டம் வரதமாநதி நீர்த்தேக்கம் 1 கோடி ரூபாய்.

நெல்லை, செங்கோட்டை வட்டக் குண்டாறு நீர்த்தேக்கம் என்ற கண்ணுபுள்ளிமேடு திட்டம் ரூபாய் 37 இலட்சம்.

கோவை, பவானி வட்டம், வறட்டுப்பள்ளம் நீர்த்தேக்கம் ரூபாய் 60 இலட்சம்.

வட ஆர்க்காடு செங்கம் வட்டம், சாத்தனூர் அணையில் புதிய வலதுபுற வாய்க்கால் அமைப்புத் திட்டம் ரூபாய் 2 கோடி.

மதுரை இராமநாதபுரம் மாவட்டத்தில் மேலூர், சிவகங்கை,திருப்புத்தூர் வட்டங்களில் பெரியாறு வாய்க்கால்களைச் சீரமைக்க 7·5 கோடி ரூபாய்.

கோவை கோபிசெட்டிபாளையம் வட்டம் குண்டேரி பள்ளம் நீர்த்தேக்கம் 46 இலட்சம் ரூபாய்.

கோவை தாராபுரம் வட்டம், வட்டமலைக்கரை ஓடை நீர்த்தேக்கம் ரூபாய் 74 இலட்சம்.

தஞ்சை, பட்டுக்கோட்டை அடைக்கத்தேவன் கிராமம் அம்புலியாறு குறுக்கே அணை கட்ட ரூபாய் 6·25 இலட்சம்.

சேலம், மேட்டூர் உள்ளுகோம்பை முள்ளிக்காடு கிராமம் பாலமலை ஓடை கண்மாய்த் திட்டம் ரூபாய் 8·5 இலட்சம்.

சேலம், மேட்டூர் பி. என். பட்டி கிராமம் புது ஓடை அணை கட்ட ரூபாய் 5 இலட்சம்.

சேலம் மேட்டூர் லக்கம்பட்டி கிராமம் கொத்த நேரி கண்மாய் சீர்திருத்த ரூபாய் 7 இலட்சம்.

சேலம், ஆத்தூர் வலசகால்பட்டி கிராமம் கல்லாற்றின் குறுக்கே அணை கட்ட ரூபாய் 13·5 இலட்சம்.

கோவை, கோபிசெட்டிபாளையம் வட்டம் ஆனந்தசாகரம் கண்மாய் கால்வாய் திட்டம் ரூபாய் 3 இலட்சம்.

சேலம், தக்கம்பட்டி கிராமம் ஜம்பூத்து ஓடை கண்மாய் ரூபாய் 7 இலட்சம்.

தஞ்சாவூர், திருத்துறைப்பூண்டி வடிகால் திட்டம் ரூபாய் 21 இலட்சம்.

மொத்தம் ரூபாய் 12 கோடியே 38·5 இலட்சத்துக்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில் கொல்லிமலைப்பகுதியில் 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் வாட்டில் மரம், பைன் மரம் பயிரிட முடிவு செய்து 10 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் செங்கல்பட்டு மாவட்டத்தில் 40 வீடுகளும் தர்மபுரி மாவட்டத்தில் 28 வீடுகளும் கட்ட ரூபாய் 9 இலட்சம் அனுமதிக்கப்பட்டு உள்ளது.

மணலியைச் சுற்றி அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு நாள் 1-க்கு 1 கோடியே 10 இலட்சம் காலன் தண்ணீர் வினியோகம் செய்யும் திட்டத்தை அமல்படுத்த 2 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் தேவையான நிர்வாக அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

கிராமங்களில் குடிநீர்வசதி செய்து கொடுக்கத் தேவையான துளைக் கருவிகள், மற்றும் சாதனங்கள் வாங்குவதற்குக் குடிநீர் வாரியத்துக்குக் அரசு ரூபாய் 43 இலட்சம் கடனுகக் கொடுக்க முடிவு செய்துள்ளது.

எழும்பூர் மகளிர், சிறுவர் மருத்துவ மனைக்கு 'கோயில்டு' கருவி வாங்க ரூபாய் 3·5 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கோவை, திருப்பூரில் 100 படுக்கைகள் கொண்ட, மருத்துவ மனை அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை நகரில், கண்காணிப்புப் பணிக்காக மேலும் 18 சப்-இன்ஸ்பெக்டர்கள் 18 தலைமைக் காவலர்கள் நியமிக்கப்படுவார்கள்.

1-12-3

* 10,602·72 ஏக்கர் நிலங்களின் மேல் 6 அங்குலம் முதல் 4 அடி உயரம்வரை வெள்ளம் குவிந்த மணலை இலவசமாக அகற்றிக் கொடுக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்தது.

* இம்மாபெரும் பணியை எட்டே திங்களில் 1·06 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை செய்து முடித்துள்ளது.

* இதனால் 6 மாவட்டத்தைச் சேர்ந்த 6,088 உழவர் பெருமக்கள் பயன் பெற்றுள்ளனர்; தமிழ்நாட்டிற்கு ஆண்டுதோறும் ஏற்படவிருந்த ஒரு கோடி ரூபாய் நட்டம் தவிர்க்கப்பட்டுவிட்டது.

இவைகுறித்து வேளாண்மைத்துறை இயக்குநர் இக்கட்டுரையில் விரிவாக விளக்கியுள்ளார்.

# வெள்ளம் குவிந்த மணலை அகற்றினோம்! உள்ளம் மகிழ்ந்தனர் உழவர் மக்களே!

சென்ற ஆண்டு டிசம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ளம், தமிழ்நாட்டில் வரலாறு காணாத அளவுக்குச் சேதங்களை ஏற்படுத்தியது. அவ்வெள்ளத்தால் குறிப்பாகத் தென்னார்க்காடு, கோயம்புத்தூர், சேலம் தருமபுரி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் வளம் கொழிக்கும் நிலங்கள் பாழடைந்தன! வயல்களில் வளர்ந்திருந்த பயிர்கள் பாழ்பட்டதுடன், வயலெங்கும் 6 அங்குலம் முதல் 4 அடி உயரம் வரை மணல் குவிந்தது! அதனால் அந்நிலங்கள் சாகுபடி செய்வதற்குத் தகுதியற்றதாகிவிட்டன!

இயற்கையின் இக்கோர விளையாட்டினால் 6,088 உழவர் பெருமக்களின் நிலங்கள் சாகுபடி செய்வதற்குத் தகுதியில்லாத-மணல் மூடிய-நிலங்களாக ஆகிவிட்டன! தங்கள் வாழ்வுக்கு நிலங்களையே நம்பி இருந்த உழவர்கள். தங்கள் வாழ்வில் பேரிடி விழுந்துவிட்டதாக எண்ணி அழுதனர்! 'மணலை அகற்றுவது எப்படி?' என்று மலைத்தனர்!! 'பணத்திற்கு என்ன செய்வது?' என்று திகைத்தனர்!!!

நாட்டு மக்களின் வாட்டம் போக்குவதையே குறிக்கோளாகக் கொண்ட தமிழ்நாடு அரசு, உழவர் பெருமக்களின் கண்ணீரைத் துடைத்திடுவதற்கு ஓடோடி வந்தது! திக்கற்று நின்ற உழவர் பெருமக்களின் துயர் துடைத்திட தமிழ்நாடு அரசு விரைந்து முடிவு எடுத்தது!!

அதன் பயனாய், வெள்ளத்தால் பாழ்பட்ட பரப்பு பற்றிய விரைவான முன்னோடி ஆய்வு, தமிழ்நாடு வேளாண்மைத்துறையினரால் மேற்கொள்ளப் பெற்றது. அவ்வாய்வில் ஏறத்தாழ 10,000 ஏக்கர் நிலங்கள் — மணலால் மூடப்பட்டோ அல்லது வெள்ளத்தால் அரிக்கப்பட்டோ இருப்பதால் — 'புல்டோசர்' இயந்திரம் பயன்படுத்திச் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டியநிலையில் இருப்பதாக மதிப்பிடப் பெற்றது.

**'அஞ்சாதீர்' என்றது அரசு!**

வெள்ளத்தால் பாழ்பட்ட பரப்புபற்றிய முன் அறிக்கை கிடைத்த உடனேயே, பாழ்பட்ட சாகுபடி நிலங்கள் முழுவதையும் சீர்திருத்துவதென்று தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. இயற்கை விளைவித்த இன்னலினால் பாதிக்கப்பட்ட உழவர்களின் ஏழ்மையை எண்ணியும், முக்கிய வேளாண்மைப்பட்டம் துவங்குவதற்குள் நிலச்சீர்திருத்த வேலைகளை விரைந்து முடித்திடக் கருதியும், தமிழ்நாடு அரசு மனிதாபிமானத்துடனும், தருமச் சிந்தனையுடனும் பாழ்பட்ட நிலங்களை இலவசமாகச் சீர்திருத்திக் கொடுத்திட முடிவு செய்தது. பெருமளவில் மணல் குவிந்த நிலங்களைச் சீர்திருத்தும் பணியை, வேளாண்மைத் துறையிடம் தமிழ்நாடு அரசு ஒப்படைத்தது.

பச்சைப் போர்வைப் போர்த்தி இருப்பதுபோல் இருந்த நெல் வயல்களையும், பத்து நாட்களுக்குள் அறுவடைக்கு வந்துவிடக்கூடிய நிலையில் இருந்த நெல் வயல்களையும் மூடிய மணலை ஒரு சில நாட்களுக்குள்ளேயே சீர்திருத்தும் பணியைத் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள 'திருவாமூர்' என்ற ஊரில் 23-12-72 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்து ''மணல் அகற்றும் பணியைப் போர்க்கலப் பணிகளைப்போல் வெகுவிரைவாகமேற்கொள்ளுவோம்! அழாதீர்!! அஞ்சாதீர்!!!'' எனக் கூறி உழவர் பெருமக்களுக்குத் துணிவு கூறினார்.

**விரிவான ஆய்வு!**

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பரப்புபற்றிய விரிவான ஆய்வு வேளாண்மைத்துறையின் மண்வளப் பாதுகாப்புப் பிரிவினரால்- நிலவருவாய்த்துறையினர் மற்றும் கிராம அலுவலர்கள் ஒத்துழைப்புடன் -மேற்கொள்ளப் பெற்றது. மண்வளப் பாதுகாப்புப் பிரிவைச் சார்ந்த அலுவலர்கள் விரிவான ஆய்வு வேலையை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற நிலங்களின் பரப்பினைக் கணக்கிடவும், அந்நிலங்களைச் சீர்திருத்துவதற்கு ஆகும் செலவினைக் கணக்கிடவும் விரிவான ஆய்வு விரைவாக மேற் கொள்ளப் பெற்றது. இவ்விரிவான ஆய்வு மேடிட்டுள்ள மணலின் ஆழம், மண்ணரிக்கப்பட்ட பரப்பு,

டி. வி. அந்தோணி, I.A.S.,
இயக்குநர்,
வேளாண்மைத் துறை,
சென்னை-5.



திருவாமூர் கிராமத்தில் மணல் மூடிய நிலங்களைச் சீர்திருத்தும் பணியை முதல்வர் துவக்கி வைக்கிறார்.

சீர்திருத்துவதற்குத் தேவைப்படும் காலம், மணலை அகற்றுவதற்குக் கொண்டு செல்ல வேண்டிய குறுகிய தூரம் போன்ற சேதங்களின் தன்மையை வெகு தெளிவாகக் காட்டின. 'புல்டோசர்' இயந்திரம் மூலமாக சீர்திருத்த வேண்டிய-மணலால் மூடப் பெற்றதும், மண்ணரிக்கப் பெற்றதுமான- நிலங்களின் பரப்பு 10,500 ஏக்கருக்கும் சற்று அதிகமாகவே இருக்கும் என்று மதிப்பிடப்பெற்றது.

### 'புல்டோசர்' படை புறப்பட்டது!

மணலால் மூடப்பெற்ற நிலங்களைச் சீர்திருத்துவதற்காக தென்னார்க்காடு, கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மாவட்டங்களுக்கும் 101 'புல்டோசர்' இயந்திரங்கள் அடங்கிய படையை வேளாண்மைத்துறை அனுப்பியது. வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டது தென்னார்க்காடு மாவட்டமாதலின், தென்னார்க்காடு மாவட்டத்தின் விளைநிலங்களில் மணலை அகற்றும் பணிக்காக மட்டும் 80-க்கும் மேற்பட்ட 'புல்டோசர்' இயந்திரங்கள் நாள்தோறும் 12 மணி நேரத்திற்கும் அதிகமான நேரமும், ஒரு திங்களில் தொடர்ந்து 25 நாட்களுக்கும் மேலாகவும் மணல் அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பெற்றன. மாவட்ட ஆட்சித்தலைவர்கள் குறிப்பிடும் முக்கியத்துவ வரிசையில் நிலச் சீர்திருத்த வேலைகளைப் 'புல்டோசர்' இயந்திரங்கள் மேற்கொண்டன. குறிப்பாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில்—கருவிகள், இயந்திரங்கள் மட்டுமின்றி — ஏறத்தாழ எல்லா வேளாண்மைப் பொறியியல் பிரிவைச் சார்ந்த அலுவலர்களும், பணியாளர்களும் மணல் அகற்றும் பணிக்காக ஒருமுகப்படுத்தப்பட்டனர்.

### எட்டு திங்களில் ஏற்றமிகு சாதனை !

விளைநிலங்களில் மூடிய மணலை அகற்றி, குறுகிய காலத்தில் அந்நிலங்களைச் சாகுபடி செய்வதற்கு ஏற்றதாக ஆக்கவேண்டும் என்பதற்காக, எல்லா மாவட்டத்திலும் மணல்களை அகற்றும் பணி-முழு அளவில் முடியும்வரை-முன்னேற்ற நிலையிலேயே இருக்க ஆவன செய்யப்பட்டது. பின்கண்ட புள்ளி விவரங்கள், மணல் அகற்றும் பணி துவக்கம் முதல் இறுதி வரை முன்னேற்றப் பாங்கிலேயே இருந்துள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

### மணல் அகற்றும் பணியின் முன்னேற்றம் !

| காலம் | | | சீர்திருத்தப் பெற்ற நிலப்பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|
| 23-12-72 முதல் 31-1-73 வரை | | ... | 830.75 |
| பிப்ரவரி 1973 முடிய | ... | ... | 3,108.71 |
| மார்ச்சு 1973 முடிய | ... | ... | 4,952.27 |
| ஏப்ரல் 1973 முடிய | ... | ... | 6,068.65 |
| மே 1973 முடிய | ... | ... | 6,939.58 |
| ஜூன் 1973 முடிய | ... | ... | 8,042.64 |
| ஜூலை 1973 முடிய | ... | ... | 9,228.04 |
| ஆகஸ்டு 1973 முடிய | ... | ... | 10,206.04 |
| செப்டம்பர் 1973 முடிய | ... | ... | 10,541.00 |
| 12-10-73 முடிய | ... | ... | 10,602.72 |

நிலச்சீர்திருத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த 101 புல்டோசர் இயந்திரங்களும் 1,42,445 புல்டோசர்-மணி நேரம் வேலை செய்துள்ளன ; மணலால் மூடப்பெற்றதும், மண்ணரிக்கப் பெற்றதுமான 10,602.72 ஏக்கர் நிலங்களைச் சீர்திருத்தி மீண்டும் சாகுபடி செய்வதற்கு ஏற்ற நிலங்களாக ஆக்கியுள்ளன. மணல் அகற்றிச் செப்பனிடும் பணியில் பெரும் பகுதி 1973-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் இறுதியிலேயே-அதாவது வேலை துவங்கியதிலிருந்து 8 திங்களுக்குள்ளாகவே - முடிக்கப் பெற்றுள்ளது குறிப்பிடத் தகுந்ததாகும்.

### திறமைக்குச் சான்று!

ஒரு ஏக்கர் நிலத்தில் படிந்துள்ள மணலை 'புல்டோசர்' மூலம் அகற்ற, சராசரியாக ஏக்கருக்கு ஏறத்தாழ 1,200 ரூபாய் செலவாகும் என்று துவக்கத்தில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 'புல்டோசர்' இயந்திரத் தொகுதிகளை நியாயமாகவும், திறமையாகவும் இயக்கியதனால் மணலை அகற்றிச் சீர்திருத்த ஆகிய செலவு ஏக்கருக்குச் சராசரியாக ரூபாய் 850 என்ற அளவுக்குக் குறைந்தது (உதிரி பாகங்கள் மற்றும் பணியாளர்கள் செலவு சேராமல்). இது, இப்பணியில் ஈடுபட்டவர்களின் திறமைக்குச் சான்றாக விளங்குகிறது.

### ஒரு கோடி ரூபாய் இழப்பைத் தவிர்த்தோம்!

மணலை அகற்றிச் சீர்திருத்தப் பெற்ற ஒரு ஏக்கர் நிலத்தில் நிலக்கடலை, நெல், கரும்பு அல்லது பல பயிர் செய்ய முடிவதன் மூலம் ஆண்டுதோறும் குறைந்தது ரூபாய் 1,000 மதிப்புள்ள மகசூல் பெற முடியும் என மதிப்பிடப் பெற்றுள்ளது. என்வே, மொத்தம் சீர்திருத்தப்பெற்ற 10,602.72 ஏக்கர் நிலத்திலிருந்து ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமான வருவாய் பெறுவது உறுதியானது. இந்த நிலச்சீர்திருத்தும் பணி தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படாதிருக்குமானால், தமிழ்நாட்டின் வேளாண்மை உற்பத்தி இழப்பு, ஆண்டிற்குக் குறைந்தது ஒரு கோடி ரூபாய் என்ற அளவில் இருந்திருக்கும் என்பது திண்ணம்!

### சிறு நிலக்கிழார்கள் வாழ்வு செழித்தது!

அரசு மேற்கொண்ட இந்த மாபெரும் பணியினால் 6,088 உழவர் பெருமக்கள் பயனடைந்துள்ளார்கள். தமிழ்நாடு அரசு மட்டும் இம்மாபெரும் பணியைச் செய்யாதிருந்தால், ஏழை உழவர்கள் வளம் கொழிக்கும் தங்கள் நிலங்களை இழந்து, நிலமற்ற கூலிகளாக ஆகி இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை! இப்பணியினால் பயனடைந்த உழவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு உள்ளது.

**மணல் அகற்றிய பணியினால் பயனடைந்தவர்கள்.**

| நில உடைமையின் அளவு | | பயனடைந்த உழவர்களின் எண்ணிக்கை | சதவிகிதம் |
|---|---|---|---|
| ஒரு ஏக்கர் வரை | ... | 2,642 | 43.5 |
| 1 முதல் 2 ஏக்கர் | ... | 1,797 | 29.5 |
| 2 முதல் 3 ஏக்கர் | ... | 764 | 12.5 |
| 3 முதல் 4 ஏக்கர் | ... | 330 | 5.5 |
| 4 முதல் 5 ஏக்கர் | ... | 232 | 3.5 |
| 5 ஏக்கருக்கும் அதிகம் | ... | 323 | 5.5 |
| | | 6,088 | 100 |



மணல் மூடிய நிலங்களை முதல்வர் கலைஞர் பார்வையிடுதல்



பத்து நாளில் அறுவடைக்கு வரவிருந்த நெல்வயல்கள் பாழடைந்து கிடக்கின்ற பரிதாபக் காட்சி!

மேற்கண்ட அட்டவணையிலிருந்து, மணல் அகற்றிய பணியினுல் பயனடைந்தவர்களில் 85.5. சத அளவினர் ஒன்று முதல் மூன்று ஏக்கர் வரை நிலமுடைய சிறு நிலக்கிழார்களே என்பது தெளிவாகிறது.

### பாராட்டிற்குரிய பணி!

வேளாண்மைப் பொறியியல் திட்டங்களுக்கு ஆண்டுதோறும் சராசரியாக ஏறத்தாழ 4.5 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இத்தொகைக்கான திட்டப்பணிகளைச் செய்ததுடன், கூடுதலாக மணல் குவிந்த நிலங்களையும், மண்ணரிக்கப்பட்ட நிலங்களையும் சீர்திருத்தும் மாபெரும் பணியை—கூடுதலாக இருதுணைக் கோட்டப் பணியாளர்களின் உதவியுடன்—எட்டே திங்களில் ஒரு கோடி ரூபாய்க்கும் சற்று அதிகமான செலவில் வேளாண்மைத் துறை முடித்துள்ளது. இதிலிருந்து இ-ம் மாபெரும் பணியை வேளாண்மைத்துறை அவசர அடிப்படையில் வெகு வேகமாகவும், தீவிரமாகவும் நிறைவேற்றியுள்ளது என்பது புலனாகிறது.

இப்பணியில், 'புல்டோசர்' இயந்திரங்களை இயக்கும் பணியாளர்கள் 300 பேரும், மேற்பார்வை மற்றும் பராமரிக்கும் பணியாளர்கள் 50 பேரும் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் எல்லா மாவட்டங்களிலும் இருந்து தங்கள் குடும்பத்தைத் தனியே விட்டுப் பிரிந்து வந்து-போர் வீரர்களைப் போல்-தென்னார்க்காடு மாவட்டத்தில் முகாம் அடிப்படையில், பணியாற்றினர். மணல் குவிந்ததாலும், மண்ணரிப்பாலும் பாழடைந்த நிலங்களை முக்கிய பட்டம் துவங்குவதற்குள் சீர்திருத்திச் சாகுபடி செய்வதற்கு ஏற்றதாக ஆக்கிவிட வேண்டும் என்பதற்காக அவர்கள் நாள் முழுவதும் - பகலென்றும், இரவென்றும் பாராமல்-பணியாற்றினர் என்பது பாராட்டிற்குரியதாகும்.

### மாபெரும் வேலை!

அவர்களின் அயராத பணியினுல் 10,602.72 ஏக்கர் நிலம் செப்பனிடப்பட்டது. அந்த நிலங்களில் 6 அங்குலம் முதல் 4 அடி ஆழத்திற்கு மணல் படிந்திருந்தது. சராசரியாக மணல் படிந்திருந்த ஆழம் 1.25 அடி என்று எடுத்துக்கொண்டு, 10,602.72 ஏக்கர் நிலப் பரப்பிலிருந்து அகற்றிய மணலின் அளவைக் கணக்கிட்டால், ஏறத்தாழ 577 மில்லியன் கன அடி மணல் அகற்றப்பட்டுள்ளது தெரியவருகிறது. இவ்வாறு அகற்றப்பட்ட மணல் சராசரியாக 200 அடி தூரத்திற்கு அப்பால் தள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கட்டப்பெற்றுள்ள மிகப் பெரிய மண் அணை, கோவை மாவட்டத்தில் உள்ள பவானிசாகர் அணையே யாகும்! இவ்வணையில் ஏறத்தாழ 14 மிலியன் கன அடி கற்கட்டடப்பகுதியும், 160 மில்லியன் கன அடி மண் அணைப்பகுதியும் அடங்கியுள்ளது. ஆகவே, ஏறத்தாழ 200 அடி தூரத்திற்கு அகற்றப்பட்ட மணலின் அளவு, பவானிசாகர் அணையில் உள்ள மண் அணைப்பகுதியை விட 3 மடங்கிற்கும் அதிகமானது என்பது புலனாகிறது.

### திட்டமிட்டபடி செய்து முடித்தோம்!

திருச்சிராப்பள்ளி, தருமபுரி கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் 'புல்டோசர்' மூலம் சீர்திருத்தும்பணி 1973-ஆம் ஆண்டு மே திங்களிலேயே முடிவு பெற்றது. தஞ்சாவூர் மாவட்டத்தில் குறைந்த பரப்பளவே பாதிக்கப்பட்டி

ருந்ததால், அம்மாவட்டத்தில் மணல் அகற்றும் பணி 1973-ஆண்டு ஜூலைத் திங்களிலே துவங்கப்பட்டு, அத்திங்களிலேயே முடிக்கப் பெற்றது. மேற்கூறிய 5 மாவட்டங்களிலும் வேலை முடிந்த பிறகு, அம்மாவட்டங்களில் பணியாற்றிய ‘புல்டோசர்’ இயந்திரங்கள் அனைத்தும் தென்னார்க்காடு மாவட்டத்திற்கு -திட்டமிட்டபடி நிலச் சீர் திருத்தும் வேலையை முழு அளவில் முடித்திட—அனுப்பப்பட்டது. தென்னார்க்காடு மாவட்டத்தில் நிலச்சீர்திருத்தம் செய்யும் பணி ஏறத்தாழ முழு அளவில் 1973-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களிலேயே முடிக்கப்பட்டது.

பிறகு பல்வேறு கிராமங்களில் சிறுசிறு அளவில் பாதிக்கப்பட்டிருந்த நிலங்களைச் சீர் திருத்தும் பணி மேற்கொள்ளப்பெற்றது. தென்னார்க்காடு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த பரப்பு முழுவதையும் சீர்திருத்தும் பணி 12-10-1973 அன்று முடிவு பெற்றது.

**மாவட்ட வாரியாக மணலை அகற்றிச் சீர்திருத்தம் செய்யப்பட்ட நிலங்களின் பரப்பு பின்கண்டவாறு உள்ளது.**

| மாவட்டத்தின் பெயர் | | சீர்திருத்தப்பெற்ற நிலங்களின் பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|
| தென்னார்க்காடு | ... | 8,793.18 |
| கோயம்புத்தூர் | ... | 519.25 |
| சேலம் | ... | 680.93 |
| தருமபுரி | ... | 272.12 |
| திருச்சிராப்பள்ளி | ... | 282.78 |
| தஞ்சாவூர் | ... | 54.46 |
| மொத்தம் | | 10,602.72 |







மேலக்குமாரமங்கலம் கிராமத்தில் மணல் மேடிட்ட வயல்கள்

தென்னார்க்காடு, கோயம்புத்தூர், சேலம், தருமபுரி திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்ட நிலங்களில் வெள்ளத்தால் படிந்த மணலை அகற்றி, நிலங்களைச் சீர்திருத்திய உடனேயே, அந்நிலங்களின் சொந்தக்காரர்கள் பயிரிடத் தொடங்கிவிட்டனர்

தென்னார்க்காடு மாவட்டத்தில் சீர்திருத்தப் பெற்ற நிலங்களின் பெரும்பகுதியில், உழவர்கள் இரண்டாவது பயிராக 'ஜெயா', 'ஐ.ஆர்.20'போன்ற உயர்விளைச்சல் தரும் நெல் வகைகளையும், கம்பு, சோளம், நிலக்கடலை, கரும்பு ஆகியவைகளையும் பயிரிட்டுள்ளனர். தென்னார்க்காடு மாவட்டத்தில் 1973-ஆம் ஆண்டு ஜனவரி-பிப்ரவரி திங்களில் சீர்திருத்தப் பெற்ற நிலங்கள் அடங்கிய சில கிராமங்களில், மூன்றாவது பயிராக நெல் பயிரிடப்பட்டுள்ளது.

வளம் கொழிக்கும் வயல்களில் வெள்ளம் குவித்த மணலை அகற்றிடவும், வெள்ளத்தால் அரிக்கப்பட்ட வயல்களைத் திருத்தவும் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நிலச்சீர் திருத்தப்பணியின் பயனாய் 6,088 உழவர்கள் பயனடைந்தனர்.

## உழவர்களுக்கு உதவும் அரசு

தமிழ்நாடு அரசு மட்டும் தக்க சமயத்தில் உதவாதிருந்திருந்தால்-துணிவுடன் இம் மாபெரும் திட்டத்தை 1.05 கோடி ரூபாய் செலவில் மேற்கொண்டு இலவசமாகவே நிலங்களைச் சீர்திருத்திக் கொடுக்க முன்வராதிருந்திருந்தால்-பின்கண்ட விளைவுகள் ஏற்பட்டிருக்கும்.

நமது மாநிலத்திலுள்ள 207 நூற்பு ஆலைகளுக்கு, மாத்திரம் சுமார் 11.14 லட்சம் பேல்கள் பஞ்சு தேவைப்படுகிறது. நமது சராசரி பஞ்சு உற்பத்தியோ, 3..63 லட்சம் எக்டேரில் விளைவிக்கப்படும் 4 லட்சம் பேல்கள்தான். எனவே, பருத்திச் சாகுபடி செய்யும் உழவர்கள் நோய் தடுப்பு முறை உட்பட்ட அனைத்து முன்னேற்ற முறைகளையும் மேற்கொண்டு அதிகம் விளைவிக்க முயல வேண்டும்; பிற நாடுகளிலிருந்து பருத்தியின் வரவை எதிர்பார்ப்பதை விரைவில் நிறுத்த-பருத்தி விளைச்சலில் தன்னிறைவு ஏற்படுத்த-உழவர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

(1) 6,088 உழவர்கள் தங்கள் நிலத்தை இழந்து, கூலி வேலை செய்து பிழைக்கும் நிலைக்கு ஆளாகி இருப்பார்கள்!

(2) 6,088 உழவர்களின் குடும்பத்தைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பசிப்பிணியால் வாடிக்கொண்டிருப்பார்கள்!

(3) தமிழ் நாட்டின் வேளாண்மை உற்பத்தியில் ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள மகசூல் குறைந்திருக்கும்!

இத்தகைய கோர விளைவுகள் ஏற்படாதிருக்கவே, தமிழ்நாடு அரசு தக்க சமயத்தில் உதவியது!

தமிழ்நாடு அரசின் இம்மகத்தான பணி, 'நெருக்கடியான நேரங்களில், தமிழ்நாடு அரசு உழவர் பெருமக்களுக்கு உடனடியாகவும், உறுதியாகவும் உதவிட முன் வரும்' என்ற நம்பிக்கையை உழவர் பெருமக்களின் உள்ளத்திலே ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையல்ல!



மணல் அகற்றப்பட்டபின் மணிலா பயிரிடப்பட்டுள்ள வயல்

**கோ**லாபாவின் அமைதியான சூழ்நிலையில் அந்த மருத்துவ மனை ஒருவித கம்பீரத்துடன் தோற்றம் தந்து கொண்டிருந்தது.

மருத்துவமனையின் உரிமையாளரும்—தலைமை சர்ஜனுமான டாக்டர் நிதிதாசன் ஒரு அமெரிக்கர் பின்தொடர மருத்துவமனையினுள் இருந்த பிரத்தியேக அறையினுள் நுழைந்தார்.

அங்கு ஒரு கட்டிலில் கண்கள் கட்டப்பட்டவாறு குமரிப் பெண்ணொருத்தி படுத்திருந்தாள்.

"ஹலோ ஸ்டெல்லா... ! இதோ டாக்டர் வந்திருக்கிறேன் . . . .டாடி வந்திருக்கிருர் . . !"

நிதிதாசன் உற்சாகமூட்டியவாறு பேசிக்கொண்டிருந்தார்.

ஸ்டெல்லாவின் தகப்பனர் ஹிக்ஸ் அளவிலா மகிழ்ச்சியில் திளைத்தார். டாக்டரின் பேச்சு அவருக்குக் களிப்பை நல்கிய போதிலும், சிறிது மனவருத்தத்தையும் கொடுத்திருக்க வேண்டும். அதனுல்தானே என்னவோ இடையிட்டுப் பேசினுர் நெகிழ்ச்சியுடன் :

"என்ன டாக்டர்... உங்களுக்கே நன்ருகப் படுகிறதா உங்கள் பேச்சு?"

ஹிக்ஸின் வினு நிதிதாசனை அதிர்ச்சிக்கு ஆளாக்கியது.

"மங்கலமான செய்தியைத் தானே சொல்லிக் கொண்டிருந்தேன். தவருக ஏதும் சொல்ல

# கருணை என்னும் ஒளி!

— பேரை சுப்ரமணியன்

"குட்மார்னிங் டாக்டர் . . குட்மார்னிங் டாடி . . !"

"ஸ்டெல்லா . .! டாக்டர் ஒரு நற்செய்தி கொண்டு வந்திருக்கிருர்.. நாளை கண் கட்டுகளை அவிழ்த்து, தையலைப் பிரிக்கப் போகிருராம் . ." —உடன் வந்த அமெரிக்கர் எழுச்சியுடன் மொழிந்தார். ஸ்டெல்லாவின் தந்தை அவர். ... பெயர் ஹிக்ஸ்.

"மிக்க மகிழ்ச்சி டாக்டர்!" —ஸ்டெல்லாவின் குரல் நளினம் நன்றியுணர்வின் 'தடம்' காட்டியது. .

"ஸ்டெல்லா . .! நாளைக் காலை கட்டுக்களை அவிழ்க்கப் போகிறேன். . உனக்குப் பார்வைகிடைக்கப் போகிறது. நீ பார்க்கப் போகிருய்... உன் டாடியை—உன் மம்மியை.. எல்லோரையும் — எல்லாவற்றையும்—இந்த உலகம் பூராவையும் பார்க்கப் போகிருய். பரவசம் அடையப் போகிருய்! உனக்குப் பார்வை கிடைத்து விட்டது, ஸ்டெல்லா, உனக்குப் பார்வை கிடைத்து விட்டது!"

வில்லையே! . .பின் ஏன் இவ்விதம் வினு எழுப்பினுர் . ."

எண்ணக் குழப்பம் நிதிதாசனைக் கலக்கமுறச்செய்தது. அவருடைய கலகத்தை அதிக நேரம் நீடிக்கவிடக் கூடாது என்பதற்காக ஹிக்ஸ் தனது பேச்சைத் தொடரலானுர்.....

"டாக்டர்..!உங்களைத் தவருக எண்ணி நான் ஏதும் பேசவில்லை. அவ்விதம் எண்ணினுலே இயேசு பிரான் என்னை மன்னிக்க மாட்டார். கண் கொடுத்த தெய்வம் நீங்கள். என் கண்மணி ஸ்டெல்லா உங்களைத்தான் முதல் முதலில் பார்க்கப் போகிருள். பார்க்க வேண்டும் ! அதன் பிறகுதான் என்னை— என் மனைவியை—இந்த உலகத்தைப் பார்க்க வேண்டும்! அவ்விதம் உங்களை முதலில் பார்த்து உங்கள் நல்லாசிகளைப் பெருவிட்டால் ஸ்டெல்லா நன்றி கெட்ட பாவத்துக்கு ஆளாகி விடுவாள். நீங்களோவெனில் உங்களை விட்டுவிட்டு எல்லோரையும் அவள் பார்க்கப்போவதாகச் சொல்கிறீர்களே . . . இது நியாயமா?"

ஹிக்ஸின் வார்த்தைகளில் நெகிழ்ந்தார் டாக்டர். தந்தைக்குச் சளைத்தவளாகத் தெரியவில்லை ஸ்டெல்லா. அவளது குரல் மிகத் தீவிரமாகவே இருந்தது.

"ஆமாம் டாக்டர் . . . ! உங்களைப் பார்த்து நல்லாசி பெற்ற பின்னரே என் பெற்ருேரைப் பார்க்க விரும்புவேன். அவ்விதம் செய்யத் தவறினுல் நான் பாவம் செய்தவளாகி விட்டதான ஒரு நினைப்பு என்னுள் வேரோடி என்னைப் பயமுறுத்திக்கொண்டேயிருக்கும். அப்படியொரு வேதனையை அனுபவிக்கும் போது பார்வையே கிட்டாமல் இருந்திருக்கக் கூடாதா என்ற எண்ணம் வலுப்பெறும். அத்தகு எண்ணம் முழுமுதிர்ச்சி அடையப்பெறுமாகுல் மீண்டும் குருடாகி விடுவதுதான் பிராயச்சித்தம் என்னுமொரு முடிவுக்கு வழியமைத்துக் கொடுத்தாலும் வியப்படைவதற்கு இல்லை!"

"ஸ்டெல்லா . .! ஏனம்மா இப்படிப் பேசுகிருய்? பார்வை பெறப் போகும் நல்ல நேரம் நெருங்கி வந்து கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் இப்படி அமங்கலமாகப் பேசலாமா . .?"

"பின்னென்ன டாக்டர் ? கண்ணெளி வழங்கக் காரணமானவர் நீங்கள். உங்களை முதலில் பார்க்க வேண்டுமென்னும் ஆவல்தான் என்னுள் அதிகம். காரண கர்த்தாவான உங்களைப் பற்றிய பேச்சை விட்டு விட்டு, டாடியையும்—மம்மியையும் இந்த உலகத்தைப்பற்றியும் நீங்கள் பேசினுல் என் மனம் புண்படாதா, என்ன?"

"நன்ருக உரைக்கும்படி சொல்லம்மா, ஸ்டெல்லா ! மின்னல்தான் கண்ணைக் குருடாக்கியது என்று விவரம் கூற முடியாத குழந்தைப் பரு

வத்தில் நீ கண்களை இழந்தாய். அந்த நாள் முதல் எத்தனையோ வல்லுனர்கள் பரிசோதித்தும் காரணத்தைக் கண்டு பிடிக்க இயலவில்லை. பிறவிக் குருடு என்றார்கள். அதனால் எவ்வகையான சிகிச்சை செய்வது என்று புரியாமல் குழம்பினார்கள். பதினான்கு வருடங்கள் கழித்து இந்திய மண்ணில் தமிழ் டாக்டர் ஒருவரால் காரணம் கண்டுபிடிக்கப்பட்டு —கண்ணொளியும் பெறவியலும் என்னும் செய்தியைப் பெற்றபோது அமெரிக்க டாக்டர்கள் வியந்தனர். நீ பம்பாய் வந்தாய். ஆறு மாத கால சிகிச்சைக்குப் பிறகு இதோ—நாளை பார்வைபெறப் போகிறாய். இவ்வளவுக்கும் காரணமானவர் டாக்டர் நிதிதாசன்! அவருக்குப் பிறகு தான் நான்... உன் மம்மி ... எல்லோருமே!''

ஹிக்ஸின் பேச்சு நிதிதாசனைப் பூரிக்கச் செய்தது.

''மிஸ்டர் ஹிக்ஸ்! மிஸ்ஸ்டெல்லா! நீங்கள் இருவரும் காட்டும் அன்பு எல்லையற்றது. வரையறை இல்லாது விரிந்து செல்லும் வானம் போன்றது! நான். தலை வணங்குகிறேன்.!'

''டாக்டர்! நாங்கள் காட்டுவது அன்பு மட்டும்தான் என்று எல்லை வகுக்காதீர். இது ஒரு பக்தி மனப்பான்மை. நிறைந்த மனத்துடன் உங்களைப் பூசனை புரியும் பக்திதான் உங்கள் தொண்டுக்கு நாங்கள் அளிக்கும் ஈடான கைம்மாறாகும். கோடீஸ்வரனாகிய நான் எவ்வளவுதான் பணம் கொடுத்தாலும் பக்தியால் பெறும் நிறைவைப் பெறவே இயலாது டாக்டர் . .!''

''மிஸ்டர் ஹிக்ஸ்! மிகையாகப் பேசிவிட்டீர்கள். இத்துணை அன்புக்கும்—பக்திக்கும் பாத்திரமாகி விட்ட எனது சுயநலம் ஆவலாதி காட்டினாலும் உண்மையில் நான் தகுதி பெற்றவனில்லை என்று மனச்சாட்சி கூறுகிறதே. அதை மறைத்து விட முடியுமா?''

''புதிராகப் பேசுகிறீர்கள்; புரியும்படி கூறுங்கள்.''

நீங்கள் கட்டாயம் தெரிந்து கொள்ளவேண்டிய ஒன்று தான். புரியும்படிக் கூறுகிறேன். கேளுங்கள் . . ''—

டாக்டர் நிதிதாசனின் பீடிகை ஒரு கதை, துவக்கம் கொள்ளப் போகிறது என்பதன் அறிகுறியாக இருந்தது.



''டாக்டர்! உங்கள் பீடிகையைப் பார்த்தால் ஏதோ கதை சொல்லப் போகிறவர் போல் தெரிகிறது. கதை கேட்பதில் எனக்கு ஆசை அதிகம். சொல்லுங்கள். . ''

''கதையில்லை ஸ்டெல்லா . . இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் நடந்த உண்மைச் சம்பவந்தான்!''

* * * *

''டேய் மாரி .! கல்லுளி மங்கன் மாதிரி நின்று கொண்டேயிருக்கிறாயே! பலகையில் எழுதிப் போட்டதைப் படியேண்டா, எத்தனை நாள் எத்தனை முறை உன்னோடு மாரடிப்பது?''

கடைசி வரிசைப் பெஞ்சிலிருந்து எழுந்து நின்ற மாரி, பேந்தப் பேந்த விழித்தவனாய் மரமாக நின்று கொண்டிருந்தான்! கரும்பலகையில் ஆசிரியர் எழுதிப் போட்ட 'குறளை' அவனால் படிக்க இயலவில்லை!

தினமும் இந்த நிகழ்ச்சி தவறாது நடந்து வந்தது.—ஆசிரியரின் கோபம் ஒரு நாள் உச்ச நிலையை எட்டிவிட்டது. அதன் விளைவு—

பத்து வயதுச் சிறுவன் மாரியின் உடம்பு தாங்கிக் கொள்ள முடியாத வண்ணம் தாக்குதல் நடத்திவிட்டது ஆசிரியரின் கைத்தடி.

வீடு திரும்பிய பையனின் நிலை பெற்றோரைக் கண்கலங்க வைத்தது. ஏழைப் பெற்றோர் ... என்ன செய்ய இயலும்? பாமரரான பெற்றோரின் கலக்கம் பையனைப் படிப்பதினின்று நிறுத்தி வைத்துவிட்டது.

மாரி அடம் பிடித்தான், பள்ளி செல்ல. மற்றச் சிறுவர்களைப் போல் அல்ல அவன்; ஆர்வம் உள்ளவன். வீட்டில் முகத்தெதிரே புத்தகத்தைப் பிடித்துக் கொண்டு மணிக்கணக்கில் வாசித்துக் கொண்டேயிருப்பான். கணீரென்று உச்சரிக்கும் அவனது வாசிப்பில் ஒரு பிழை காண முடியாது. இயல்பான கெட்டிக்காரத் தனம் வேறு. பள்ளியில் அவ்வப்போது நடக்கும் பரீட்சைகளிலும் நல்ல மார்க்குகள் வாங்கத் தவறுவதில்லை. ஆனால் சொல்லி வைத்தாற்போல் ஆசிரியர் கரும்பலகையில் எழுதிப் போட்டுப் படிக்கச் சொல்லும்போது எல்லாம் அவனால் வாசிக்க முடிவதில்லை. அதன் காரணத்தை ஆராய ஆசிரியரும் முனைந்ததில்லை. 'தான் ஏன் இவ்விதம் இருக்கிறோம்?' என்று அவனுக்கும் புரிவதில்லை. அடி முதல் நுனி வரை விவரம் கேட்டறிந்து தெளிவு பெறும் அறிவு பாமரரான பெற்றோருக்கும் இல்லை!

தான் பெற்ற மகன் தினமும் பள்ளியினின்று திரும்பும்போது அடிபட்ட தழும்புகளைத் தாங்கிக்கொண்டு வருவது அன்னையின் நெஞ்சைத் தொட்டது. வேதனைக்கு ஆளாகி வந்த அவள் அதன் எல்லைக்கோட்டை அடைந்தபோது அதற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட முனைப்புடன் தீர்மானித்துவிட்டாள்.

மாரியின் பிடிவாதம் பலிக்கவில்லை.

அந்தச் சமயத்தில்தான் 'குறள்படிப்பகம்' ஒன்றைத் தொடங்கிவைக்கும் பொருட்டு அந்தக் கிராமத்துக்கு அரசியலைச்சார்ந்த ஒரு பெரியவர் வந்தார்.

மாரியும் அந்த விழாப் பந்தலில் நின்றுகொண்டிருந்தான். வந்த பெரியவர் அரசாங்கச் சார்புடையவர். மேடையில் விழாவைத் துவக்கி வைத்துப் பேசிக்கொண்டிருந்தார் அவர்.

''...உணவின் இன்றியமையாத தேவையைப் போலத் தான் கல்வியின் தேவையும். கல்வி பெறாதவன் மனிதனே அல்ல. கல்வி மூலம் கிடைக்கும் அறிவெழுச்சிக்கு இத்தகு படிப்பகங்கள் அளவிடற்கரிய துணை புரியுமென்பதால் 'குறள் படிப்பகம்' துவக்கிட முனைந்த நல்லவர்களைப் பாராட்டுகிறேன். இதே சமயத்தில் என்னுள் ஒரு ஆவல், அதனை நிறைவேற்றித் தரும் சிறுவனுக்குத்தக்க பரிசில் தரவும் விழைகிறேன். ''பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர் — சிறுமியரே! 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்! என்று உணவின் தேவையைப் பாடிய கவிஞன் பாரதியைப்போல வள்ளுவனும் ஆவேசத்துடன் இதேகருத்தையொட்டிக்குறள் பாடியிருக்கிறான். 'குறள் படிப்பகம்' துவக்கிட வந்த நான் அந்தக் குறளை உங்கள் அமுத வாயால் கேட்டு மகிழ ஆவல் மிகக் கொண்டுள்ளேன். யாருக்குத் தெரியும் அந்தக் குறள்? என் நெஞ்சுக்கு நிறைவைத் தரவல்ல அந்தச் சிறுவனை இங்கே அழைக்கிறேன்!''—

'மைக்' முன் நின்றுகொண்டு அந்தப் பெரியவர் விடுத்த அழைப்பைக் கேட்ட மறுகணமே மாரி, மேடைமீது ஏறிவிட்டான் துணிச்சலுடன்.

''இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்''!

என்று தன் மணிக்குரலில் முழங்கிய மாரியைக் கண்ணுற்ற அந்தப் பெரியவர் மட்டிலா மகிழ்ச்சியுற்றார். வள்ளுவர் உருவம் பதித்த தங்க டாலர் ஒன்றினை அவனுக்குப் பரிசளித்தபோது மாரி அதனைப் பெற்றுக் கொண்டானில்லை!

'தனக்கு வேண்டியது கல்வி தான்!' என்று அவன் கூறிடக் கேட்டபோது அந்த அரசியல் வித்தகர் மேலும் உவந்தார். விழா முடிவுற்ற பின்னர் பையன் மூலம் விவரம் அனைத்தையும் அறிந்து கொண்டார். அவர் ஒரு சிந்தனைவாதி — அவரது எண்ணம் தீவிரமாகச் செயல்பட்டது. மாரியையும் தன்னுடன் காரில் அழைத்துக் கொண்டு பள்ளி சென்றார். வழக்கம்போல மாரியை அவன் அமரும் இடத்தில் நிற்கச் செய்தார். தானே கரும்பலகையில், மாரி மேடையில் முழங்கிய குறளை எழுதினார். அவனை வாசிக்கும்படிப் பணித்தார். மாரி பேந்தப் பேந்த விழித்தான். புரியாமல் விழித்தான். அவன் கண்கள் நீரைக் கொட்டின!''

''இப்படித்தான் சார்... தினமும் வேண்டுமென்றே என்னை அவமானப்படுத்துவான். இவனுக்குப் படிக்கத் தெரியாது என்றால் பரவாயில்லை. மன்னிக்கலாம்தான். ஆனால்....''

குற்றச்சாட்டை நீட்டிக் கொண்டே போக முனைந்த ஆசிரியரைப் பார்த்துக் கையமர்த்தினார் அந்தப் பெரியவர்.

''மாரி! இப்போது முதல் வரிசைக்கு வந்து நின்று கொண்டு படி!'' பெரியவரின் கட்டளையைச் செயல்படுத்தும் பொருட்டு மாரி முதல் வரிசைக்கு வந்தான். கரும்பலகை

யில் இருந்த எழுத்துக்கள் தெளிவாகத் தெரிந்தன. புரிந்தன!

தனது மணிக் குரலில் உச்சரிப்பு பிறழாமல் அந்தக் குறளைப் படித்தான்.

அரசியல் பெரியவருக்கு அவனது 'பார்வைக்கோளாறு' புரிந்துவிட்டது. மறுகணம் மாரியை அழைத்துக்கொண்டு கண் டாக்டரிடம் சென்ருர். கண்கள் பரிசோதிக்கப் பட்டன. கண்ணுடியின் தேவை புரிந்தது.

தனது சொந்தச் செலவில் அவனது கண்களுக்கு ஒளி வழங்கும் கண்ணுடி வாங்கி அணிவித்தார். அத்துடன் அவன் தனது படிப்பில் முன்னேற்றம் காட்டினுல் அரசுச் சலுகை வழங்குவதாகவும் கூறிச் சென்ருர்.

சென்றவரின் சிந்தையில் வெவ்வேற்ன எண்ணங்கள். நாட்டுக்காக உழைக்கும் நல்லவர் என்பதால் அவரது சிந்தனையை 'மாரியின்நிலை' வெகுவாகப் பாதித்திருந்தது.

'தனக்குப் பார்வைக் கோளாறு என்று புரிந்துகொள்ளக்கூட முடியாமல் படிக்கும் ஆர்வமுள்ள மாரியைப்போன்ற எத்தனையோ சிறுவர்கள் தங்கள் வாழ்க்கையை இருளாக்கிக்கொண்டு விடுகின்றனரென்ருல், சிறிதளவுகூடப் பார்வை இல்லாத எத்தனையோ பேர்களின் கதி என்னவாக இருக்கும்?'

அரசியல் பெரியவரின் எண்ணம் ஒரு முடிவுக்கு வந்து விட்டது. அவர் அரசுச் சார்புடையவர் என்பதால் ''கண்ணெளி வழங்கும் திட்டம்'' உருவாகியது; செயல்பட்டது. பெருமளவில் மக்கள் பயனுற்றனர்.

பள்ளியில் படிக்கும்போதே மாரி அந்த அரசியல் பெரியவரின் செயற்கரிய செயலான அந்தத் திட்டத்தின் பலனைப் பார்த்தான்.

அவன் அதிதீவிரமாகப் படிக்கலானுன்.

அரசின் முழு உதவியும் கிடைக்கப் பெற்ருன்.

சிறந்த கண் டாக்டராகத் தன்னை உருவாக்கிக் கொண்டு விட்டான்!

கண்ணெளி வழங்குவதில் திறமை பெற்ற டாக்டர் என்னும் பெயர் பெறுவதற்கும்-அத்தகு தொண்டு செய்வதற்கும் காரணமாக இருந்தவர் அந்த அரசியல் பெரியவர்தான் என்பதை அவனல் எப்படி மறக்க முடியும்?''

சட்டங்கள் ஒரு முறை தீட்டப்பட்டு விட்டால் பிறகு மாற்றக்கூடாது என்பது தவறு. காலத்திற்கும் தேவைக்கும் தக்கவாறு மாற்றி அமைக்கப்படத்தான் வேண்டும்.

—அரிஸ்டாடில்.

அகில உலகமும் புரிந்து கொள்ளக் கூடிய மொழி ஒன்றைப் படைக்கப் பல்லாண்டு முயன்றும் முடியவில்லை. அப்படிப்பட்ட மொழி ஏற்கெனவே நம்மிடம் உள்ளது. அதுதான் அன்பு.

—பெர்னுட்ஷா.

நிதிதாசன் மூலம் கதை கேட்ட ஸ்டெல்லாவும் — ஹிக்ஸும் ஏக காலத்தில் வினவினர்.

''அந்தப் பையன் மாரி நீங்கள்தானே... இல்லையா, டாக்டர்?''

''ஆமாம்..பெயரை மாற்றிக் கொண்டுவிட்டேன், அவர் மீதுள்ள பக்தியினுல்!''

''டாக்டர்! உங்கள் மனம் நிறைவுபெற அவரது நல்லாசிகளை நிச்சயம் நான் கேட்டுப் பெறுவேன். நாளைக்கு அவரைக் கூட்டி வருவீர்களா?..''

''அவரால் எப்படி வர இயலும்? உடலின் மூப்பு இவ்வளவு தூரத்துக்கு அவரைப் பயணம் செய்ய அனுமதிக்காதே. ஆனுலும் அந்த மகானை நீ முதலில் பார்க்கத்தான் போகிருய்!''

''இந்திய மண்ணில் மகான்களின் எண்ணிக்கை அதிகம் தான் போலும்!''

ஹிக்ஸின் பேச்சு நிதிதாசனைச் சிரிக்கவும் — சிந்திக்கவும் வைத்தது.

''ஜடாமுடியும் - காவியுடையும் - கமண்டலமும் - உருத்திராட்ச மாலையும்கூடிய கோலத்தில் இருப்பவரெல்லாம் மகான்கள் என்று கணக்கிட்டால் இந்திய மண்ணில் அவர்கள் அதிகம்தான்! ஆனுல் மனத்தாலும் - எண்ணத்தாலும் - வாக்காலும் உயர்ந்தவர்களை சாதாரணக் கோலத்திலே பார்த்தாலும்— மகானுகத் தெளிந்து கொண்டால் அப்படிப்பட்டவர்கள் மிகச் சிலர்தான். அவர்களில் இந்த அரசியல் பெரியவரும் ஒருவர்! இதோ பாருங்கள். இந்த நிழற்படம் அவரதுதான்!

தனது கோட் பாக்கெட்டிலிருந்து எடுத்த பர்ஸில் இருந்த புகைப்பட மொன்றைக் காட்டினுர் நிதிதாசன்.

அந்தப் படத்தில்—

காவி இல்லை; ஜடாமுடி இல்லை; தாடி இல்லை; ஆனுல்?

''நினைத்ததை முடிக்கும் செயல்வீரன்போல் தோற்றமளிக்கிருர், மிடுக்குடன்!''

''ஆமாம்! செயல்வீரர்தான் நினைத்ததை முடிப்பவர்தான்.. ஆனுலும் ஒரு மகான்!''

''டாக்டர்! டாடிக்கு மட்டும் மாட்டி விட்டீர்கள். .நான் காண வேண்டாமா உங்கள் பக்திக்குரிய மகானை? எங்கே இப்படிக் கொடுங்கள் அந்தப் படத்தை!''

ஆவலுடன் கரங்களை நீட்டினுள் ஸ்டெல்லா.

''அவருடைய கருணையினுல் தான் உனக்குக் கண்ணெளி கிட்டியிருக்கிறது. எனவே நாளைக்கு முதலில் நீ பார்க்கப் போவது இவரைத்தான். இந்தா, வைத்துக்கொள்''

பர்ஸிலிருந்து எடுத்த நிழற்படத்தை ஸ்டெல்லாவின் கரத்தில் வைத்தார் நிதிதாசன்.

ஸ்டெல்லாவின் பூவிரல்கள் படத்தைத் தடவித் தடவி நீவி விட்டன.

கண்பார்வை கிட்டும்போது முதல் முதலாக உள்ளத்தால் உயர்ந்த ஒரு பெரியவரைப் பார்க்கப்போகிருேம் என்னும் பூரிப்போ - என்னவோ - அவள் அடுத்த நிமிடமே நித்திரை வசப்பட்டுவிட்டாள்.

கனவுகள் காண வேண்டாமா?

# தமிழ்நாட்டில் கோழி இன ஆராய்ச்சி

தமிழ்நாட்டில் கோழிப் பண்ணைகளின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக கோழிகள் மற்றும் கோழி வளர்ப்பு பற்றிய ஆராய்ச்சிகளைத் தமிழ் நாடு கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் இதுவரை மேற்கொள்ளப் பெற்ற ஆராய்ச்சிகளிலிருந்து கீழ்க்கண்ட பயனுள்ள முடிவுகள் கிடைத்துள்ளன.

**1. மேயர் இன வெள்ளை லெக்கார்ன் கோழிகளின் அபிவிருத்தி.**

1962 முதல் கோழியின இயல், மரபியல் வல்லுநர்கள் செய்த பல ஆராய்ச்சிகளின் பயனாகத் தோன்றியது மேயர் இன வெள்ளை லெக்கார்ன் கோழிகள். ஆண்டு ஒன்றுக்கு 200 முட்டைகள் இடும் இவ்வினக் கோழிகள் பல குணங்களிலும் பல்வேறு வீரிய கலப்பினக் கோழிகளை ஒத்துள்ளது. ஆயினும் (ஒருநாள்) மேயர் இன பெட்டைக் குஞ்சுகளின் விலை ரூ. 1.50தான். இவ்வின கோழிகள் பலராலும் போற்றி வளர்க்கப்படுகிறது. இவ்வினத்தைப் பெருக்கி, தமிழகத்தில் கோழி வளர்ப்போர் அத்தனை பேருக்கும் குறைந்த விலையில் தரமான குஞ்சுகள் கிடைக்க வழிவகைகள் செய்யப்படுகின்றன.

**2. 'ஐ.சி.ஏ.ஆர்.' இன வெள்ளை லெக்கார்ன் கோழிகள்.**

மேயர் இனத்தைப் போன்ற மற்றொரு இன வெள்ளை லெக்கார்ன் கோழிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. கடந்த ஆறு ஆண்டுகாலமாக நிறைய முட்டையிடும் இவ்வினம் அபிவிருத்தி செய்யப்பட்டவுடன் இரண்டு தரமான தனி இனங்கள் கிடைக்கும். பல தரமான தனி இனங்களை உண்டாக்கிய பின்பு அவற்றின் கலப்பே வீரியக் கலப்பின குஞ்சுகளைத் தரும்.




**3. 'அல்கலைன் பாஸ்படேஸ் என்சைம்' அளவும், முட்டையிடும் தன்மையும்.**

ஆறுவார வெள்ளை லெக்கார்ன் குஞ்சுகளின் இரத்தத்தில் அதிக 'அல்கலைன் பாஸ்படேஸ் என்சைம்' இருந்தால் அவை அதிக முட்டையிடுகின்றன என கணிக்கப்பட்டுள்ளது. இம்முறையிலேயே ஆறு வாரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சேவல்களும், பெட்டைகளும் இனவிருத்திக்காகப் பெரிதும் பயன் படுகின்றன.

**4. முட்டைகளைப் பொரிக்க ஏற்ற பருவகாலம்.**

முட்டைகள் நன்கு சூல் தரிக்கவும், சூல் தரித்த முட்டைகள் நன்கு பொரிக்கவும் ஏற்ற பருவம் குளிர் காலமேயாகும் (டிசம்பர் முதல் மார்ச் வரை). குஞ்சுகளைப் பொரிக்க வைப்பதற்கு இதுதான் ஏற்ற காலம். தென் மேற்குப் பருவக்காற்று வீசும் மாதங்களில் (ஜூலை, ஆகஸ்ட், செப்படம்பர்) குஞ்சுகள் சரியாகப் பொரிப்பதில்லை. இம்மாதங்களில் முட்டைகள் சரியாக சூல் தரிக்காமலும், சூல் தரித்த முட்டைகள் சரியாக பொரிக்காமல் போவதும் கண்டுபிடிக்கப்பட்டது.

**5. இளங்குஞ்சுகளுக்கு ஏற்ற தரை பரப்பு.**

இளங்குஞ்சுகள் நோயற்று வாழவும், செவ்வனே வளரவும், ஒவ்வொரு குஞ்சுக்கும் அளிக்கப்படவேண்டிய பரப்பளவு ஆராய்ச்சிக் கணிப்பின்படி பின்வருமாறு இருக்க வேண்டும்.

| வாரங்கள் | சதுர அங்குலம் |
| --- | --- |
| 0—4 | 25 |
| 5—8 | 40 |
| 9—12 | 83 |

6. காற்றின் வெப்பமும் முட்டையின் எண்ணிக்கையும்.

வெப்பம் அதிகரித்தவுடன், முட்டைகளின் எண்ணிக்கை குறைந்துவிடுகிறது. ஆராய்ச்சிக் குறிப்புகளின்படி வேனிற் காலத்தில் 1 டிகிரி வெப்பம் (பாரன்ஹீட்) கூடும்போது 2.1. சத முட்டைகள் குறைகின்றன. எனவே, கோழி வீடுகளில் வெப்பத்தைக் குறைக்கத் தக்க வகையில், ஏற்ற கூரைப் பொருட்களை உபயோகிக்க வேண்டும். மேலும் நல்ல காற்றோட்டத்திற்கும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

7. நல்ல கூரை பொருட்கள்.

கோழிகளின் வீடுகளுக்கு 'ஆஸ்பெஸ்டாஸ்' அட்டைகளையும், கலாய் தகடுகளையும் விட விலைந்த அலுமினியத் தகடுகளே உகந்தவை எனக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. இத் தகடுகள் 5 டிகிரி பாரன்ஹீட் வெப்பத்தைக் கூண்டினுள் குறைக்க பயன்படுகிறது.

8. கோழிகளுக்கேற்ற வீடுகள்.

துப்புரவானதும், காற்றோட்டமுள்ளதும், நமது பொருளாதாரத்துக்கு ஏற்றதுமான கோழிகள் வளர்க்கும் வீடுகளின் தரைப்படங்கள் (Plans) தயாரிக்கப்பட்டுள்ளன.

9. முட்டை உற்பத்தியில் செலவுகள்

முட்டை உற்பத்தி செய்யும் பண்ணைகளிலே ஆகும் செலவுகளின் விகிதாசாரங்கள் பின் வருமாறு இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

| | சதம் |
|---|---|
| தீனி | —50—60 |
| வீடு | —10—12 |
| குஞ்சு | — 3 |
| வேலையாள் | —4.8 முதல் 5.0 |

10. சேவலை வளர்த்தல் நட்டமானதே !

வெள்ளை லெக்கார்ன் இனத்தைச் சேர்ந்த சேவல்களை ஆழ் கூள குப்பை முறையில் (Deep Litter) பேணிக் காத்து, கறிக்காக விற்பனை செய்வது நட்டமானதே என கணிக்கப் பட்டுள்ளது. ஆகவே குஞ்சு பொரித்தவுடன், பால் பிரித்து சேவல் குஞ்சுகளைக் கொன்று விடுதல் பயனுள்ளதாகும்.

11. அசாதாரணத் தீனிகள்.

மனிதனுக்குதவாத தீனிகளை இட்டுக் கோழிகளை வளர்க்க முயலும்ஆராய்ச்சியில், கடலில் முளைக்கும் ஒருவிதச் செடியை-மக்காசோளம், ராகி, கோதுமை போன்ற தானியங்களுக்குப் பதிலாக—5 சதம் வரைச்சே சர்க்கலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

12. ஈரல் கறி.

மருந்துகளைத் தயாரிக்கும் தொழிற் சாலைகளினின்றும் கிடைக்கும் துணைப் பொருள்கள் நல்ல புரதச்சத்து மிகுந்த உணவாக கோழிகளுக்கு பயன் படும் எனக் கணித்துள்ளனர். இது இப்போது பலராலும் பின்பற்றப்பட்டுள்ளது.

13. நோய் தடுப்பு.

பச்சைக் கழிச்சல் (Ranikhet Disease), அம்மை நோய் (Fowl-Pox), மரேக் நோய், ஏ. எல். சி. (A. L. C.) போன்ற நோய்களினின்றும் கோழிகளைப் பாதுகாக்க, தக்க நவீனத் தடுப்பு மருந்துகளைத் தயாரிக்கத் தக்க ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.


## மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், நெ. ஜி-1628. படாளம்

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
'தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும்'
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ !

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர விநியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்னும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க !




பிலிப்ஸ். HRC-16 எகானமி லான்டர்னே அறிமுகப் படுத்துகிறது. HPL 125 W MV லாம்புக்கேற்ற சிக்கனமான ஃபிட்டிங்.

சிறியதும், அதிக நடமாட்டமுமில்லாத தெருக்களில் இனி நீங்கள் செலவைப் பெருக்கும் லாம்ப் ஃபிட்டிங்குகளே உபயோகிக்கத்தேவையில்லை. HRC-16 உங்களுக்குத் தெருப்பாதுகாப்பை மலிவாகக் கிடைக்க வழி செய்கிறது.

HRC-16 ஒரு கச்சிதமான ஃபிட்டிங்காகும். இதன் உள்ளேயே பலாஸ்ட் யூனிட் மற்றும் தெருவை நோக்கி ஒளியைப் பாயவைக்கும் சிறந்த ரிஃப்ளெக்டர் இவற்றின் இணைப்பு உள்ளது. இப்போதுள்ள தெரு விளக்கின் பிராக்கெட்களிலேயே இதை எளிதில் பொருத்தலாம்.

ஹை ட்ரான்ஸ்பேரென்ஸி மற்றும் அக்ரிலிக் கவருடன் சேர்ந்தோ அல்லது தனியாகவோ HRC-16 கிடைக்கும்.

## சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?
## பிலிப்ஸ் வாங்குங்கள்



# பிலிப்ஸ்

**பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்**

கல்கத்தா • பம்பாய் • புதுடில்லி • சென்னை

# புகழ் வளர்க்கும் பழனியிலே...



குமரன்

## ஆலயம் ஆற்றும் அரும்பணிகள்

தொன்மைக் காலத்தில் தமிழகத் திருக் கோயில்கள் மக்கள் சமுதாயத்தின் வாழ்வியல் நன்மைகளைப் பேணிக் காக்கும் சமுதாய மைய நிலையங்களாக—துன்பக் கண்ணீர் துடைக்கும் அன்பு நிலையங்களாக விளங்கின. அதனையொட்டியே, 'திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணை' 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பனபோன்ற பொன்மொழிகள்' பிறந்தன.

தமிழகப் பெருங் கோயில்களின் சார்பில் பலகலைகளையும் பயிற்றும் கல்லூரிகள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றைத் 'திருச்சுற்றாலைக் கல்லூரி' என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

அடுத்து, திருக்கோயில்கள் சார்பில் மக்கள் உடற் பிணி தீர்க்கும் பொது மருத்துவமனைகள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றை 'ஆதுர சாலை' என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

ஆதரவற்ற — பேணுவோர் இல்லாத—அனாதைகள் எனப் படுவோர்க்கு உடுக்க உடையும், உண்ண உணவும், உறையுளும் தந்து காத்த 'ஆதுலர் சாலைகள்' திருக்கோயில்களின் சார்பில் நடைபெற்றிருக்கின்றன.

அப்பரடிகள், ஆளுடைய பிள்ளை போன்ற அருளாளர்கள் எல்லாம் தொண்டின் நெறி நின்றே சமயம் வளர்த்திருக்கிறார்கள் — அவர்கள் சமயம், சமுதாயத்தைத் தழுவிய சமயமாகவே விளங்கின என்புதனை அவர்தம் வரலாற்றினைப் படிப்போர் உணர்வர்.

இடைக் காலத்தே தமிழகச் சமய உலகம், மக்கட் சமுதாயத்தை மறந்தது. கோயிலுக்கும் குடிசைக்கும் இடையே இடைவெளி ஏற்பட்டு, அந்த இடைவெளி நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வந்தது. இந்நிலையில், 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று கூறித் தமிழகத்தின் ஆட்சிப்பொறுப்பேற்ற தமிழ்த் தெய்வமான பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியில், தமிழகத் திருக்கோயில்களின் வரலாற்றில் ஒரு நல்ல—குறிப்பிடத்தக்க திருப்பு முனை ஏற்பட்டது. தமிழகத் திருக் கோயில்கள், வெறும் சமய நிறுவனங்களாக மட்டுமின்றிச் சமுதாயத்தைப் பேணிக் காக்கும் நிறுவனங்களாகவும் வளர்ந்தோங்கி வருகின்றன. அத்தகைய திருக்கோயில்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்.

குறிஞ்சிக் குமரனுக்குரிய ஆறு படை வீடுகளுள் மூன்றாவதாக விளங்குவது, பழனி என்று இன்று வழங்கப்பெறும் திருவாவினன்குடி. இந்தத் திருத்தலம், வரலாற்றுப் பெருமையுடையதாகும். ஆவியர் குடியைச் சேர்ந்த மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தமையால், இதனை 'ஆவினன்குடி' என்றழைக்கின்றனர். இம் மூதூர்க்குப் 'பொதினி', 'வைகாவூர்', 'சிவகிரி', 'சித்தன் வாழ்வு' என்ற பெயர்களும் உண்டு.

பழனி, ஒரு காலத்தில் சேரர்க்கு உரியதாகக் கொங்கு நாட்டோடு இணைந்து இருந்தது. இப்போது, பழனி நகரம் மதுரை மாவட்டத்தில், பழனி வட்டத்தின் தலைநகராக விளங்குகிறது. இந் நகர், தென் மண்டல இருப்புப் பாதையில் திண்டுக்கல்லி



கார்த்திக் பள்ளியில் ஒலிப்பதிவுத் தட்டுகள் மூலம் கற்பித்தல்.

விருந்து கோவை செல்லும் பாதையில் ஏறத்தாழ 47 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வூரிலிருந்து கோவை—பாலக்காடு — திண்டுக்கல் ஆகிய நகரங்கள் வழியே செல்லும் இருப்புப் பாதையில் பயணம் செய்யலாம். மேலும், இங்கிருந்து, கோவை, மதுரை, தஞ்சை, நாகபட்டினம், கடலூர், சென்னை ஆகிய ஊர்களுக்குச் செல்லத் தமிழ் நாடு அரசு போக்குவரத்தின் விரைவு வண்டி வசதிகள் உள்ளன.

தொடக்க காலத்தில் சேர மன்னரான சேரமான் பெருமான், மலைமீது ஆண்டவனுக்குக் கருவறை அமைத்துத் திருக்கோயில் எழுப்பினர். காலப்போக்கில் பின் வந்த பாண்டியர்களும், நாயக்க மன்னர்களும் ஆலயத் திருப்பணிகள் செய்து, இவ்வாலயத்தின் பெருமையை அதிகப் படுத்தினர். 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் நக்கீரரும், கி.பி. 15-ஆம் நூற்றுண்டில் அருணகிரியாரும், கி.பி. 19-ஆம் நூற்றுண்டில் தண்டபாணி சுவாமிகள், மாம்பழக் கவிச் சிங்க நாவலர் போன்றவர்களும் தங்கள் அருட்பாடல்களை அள்ளியள்ளி வழங்கிப் பெருமானைப்பாடிப் பரவியுள்ளனர்.

பழனித் திருத்தலம், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்பும் கொண்டதாகும். இத்திருக்கோயில், கொடைக்கானல் மலைத் தொடரைச் சார்ந்துள்ளது. நிலப்பரப்பிலிருந்து சுமார் 450 அடி உயரத்தில் அமைந்துள்ளது. திருக்கோயிலுக்குச் செல்ல அமைந்துள்ள மலைச் சுற்றுப் பாதை 2.2 கிலோ மீட்டர் நீளமுடையது; 691 படிக்கட்டுகளையுடைய பாதை ஒன்றும் உள்ளது. இவைதவிர, அடிவாரத்திலிருந்து மலைக்குச் சென்றுவர, 'இழுவை இரயில்' (விஞ்ச்) போக்குவரத்தும் தேவஸ்தானத்தால் செய்யப் பட்டுள்ளது. இந்த இழுவை இரயில் அடிவாரத்திலிருந்து 7 மணித் துளிகளில் கோயிலைச் சென்றடைகிறது.

மலையின் மீது நீலமலைப் பின்னணியில் கோயில் கொண்டுள்ள ஞான தண்டாயுதபாணி குமரனாக—குழந்தை வடிவேலனாக—துறவியாகக் காட்சி தந்தருளுகிறார். அவரது எழில் மிக்க திருமேனி, போகசித்தர் உருவாக்கிய நவ பாஷாணத் திருமேனியாகும். எனவே, அந்தத் தண்டாயுதபாணி, தன்னை நஞ்சாக்கிக் கொண்டு,



கார்த்திக் பள்ளியில் அறிவியல் வ

மற்றவரின் உளப் பிணிக்கும், உடற் பிணிக்கும் உற்ற மருந்தாக—கேடு தீர்க்கும் அமுதமாகத் திகழ்கிறார். அப்பெருமானின் திருமேனியிற் பட்டு வரும் பாலும், பஞ்சாமிர்தமும் பரிமளிக்கும் சந்தனமும் தனிச் சிறப்புடையன.

பழனித் திருக்கோயிலின் முக்கிய வருமானம் பக்தர்கள் ஆண்டவருக்குக் காணிக்கையாக இடும் உண்டியல் வருமானமேயாகும். இவ்வருமானம், 66—67-இல் 33,71,506 ரூபாய் ஆக இருந்தது. கடந்த ஆண்டில் 58,66,178 ரூபாய் ஆக உயர்ந்திருக்கிறது.

தமிழகத்திலுள்ள கோயில்



ஊமையர், செவிடர் பள்ளியில் கற்பிக்கும் முறை

களில் அதிக வருமானமுள்ள கோயில் அருள் மிகு பழனி ஆண்டவர் கோயில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் என்று எடுத்துக்கொண்டால், இது இரண்டாவதாகும். அதிகப்படியான கல்வி முதலிய பொது நிறுவனங்களை நடத்தி வருவதும் அருள் மிகு பழனி ஆண்டவர் கோயில் தான்.

இந்தக் கோயில் வருமானத்திலிருந்து ஆண்டவனுக்குச் செய்ய வேண்டிய அத்தனை காரியங்களுக்கும் போதுமான அளவு செலவு செய்து, மீதியிருக்கிற பணத்திலே பல்வேறு சமுதாயப் பணிகளைத் தேவஸ்தானம் மிகச் சிறப்பான முறையில் நடத்தி வருகிறது.



ஊமையர், செவிடர் பள்ளியில் ஒலிபரப்புக் கருவி மூலம் கற்பித்தல்.



தமிழகத்தில் கோயில்கள் சார்பில் நடைபெறும் 6 கல்லூரிகளில் நான்கு கல்லூரிகள் அருள் மிகு பழனியாண்டவர் திருக்கோயிலின் நிர்வாகத்தில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், இத் திருக்கோயிலின் சார்பில் 14—2—72-ல் ஊமையர் செவிடர் பள்ளி ஒன்றினைத் துவக்கி வைத்தார்கள். அப்போது, திருக்கோயிலின் சார்பில் நடைபெறும் அருள்மிகு பழனியாண்டவர் கலைக் கல்லூரி, அருள் மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் செந்தமிழ் கல்லூரி, அருள் மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி ஆகியநான்கு கல்லூரிகளும் ஒரு சேர வரவேற்பளித்துப் பாராட்டின. அப்போது, அந்தப் பாராட்டுக்கு நன்றி கூறிய தமிழக முதல்வர் அவர்கள், ''இங்கு நான்கு கல்லூரிகளும் வரவேற்பளித்ததைக் காணும் போது ஆண்களும் படிக்க வேண்டும்; பெண்களும் படிக்க வேண்டும்; அதுவும் தமிழிலே படிக்கவேண்டும்; படிப்பதுடன் நில்லாமல் பண்பாட்டுடனும் திகழ வேண்டும் என்பதைக் குறிப்பிடுவதாக அறிகிறேன்'' என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

திருக்கோயிலின் சார்பில் இவ்வாறு நடைபெறும் நிறுவனங்கள் பலப் பல. அவற்றைப்பற்றிய செய்திகள் சிலவற்றை நாம் இங்கே காணலாம் :

### அருள்மிகு பழனியாண்டவர் கலைக் கல்லூரி

இக் கல்லூரி, திருக்கோயில் தேவஸ்தானத்தின் சார்பில், 24—6—63-இல் தொடங்கப் பெற்றுச் சிறப்புற நடந்து வருகிறது. இக்கல்லூரியில் இப்போது பட்டப்பின் படிப்புப் படிக்கின்ற 15 மாணவியர் உட்பட மொத்தம் 1,100 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.



குழந்தைகள் காப்பகத்தில் குழந்தைகள் உணவருந்துகின்றனர்.

சுமார் 20 ஏக்கர் பரப்பில் 9,57,951 ரூபாய் செலவில் கட்டப்பெற்ற எழில் மிகு கட்டிடத்தில் இக் கல்லூரி நடைபெறுகிறது.

72—73-ஆம் ஆண்டு பட்டப் பின் படிப்பு (எம். எஸ்ஸி) விலங்கியல் துறையில், மதுரை பல்கலைக் கழகத்திலேயே முதல் மாணவராகத் தேர்வு பெற்றுள்ள திரு முத்தையா இந்தக் கல்லூரி மாணவரே.

இக் கல்லூரியில், இரண்டு விடுதிகள் உள்ளன. ஒன்று கலைஞர் கருணாநிதி விடுதி; மற்றொன்று காமராஜ் விடுதி. கல்லூரி மாணவர்களுக்கு வசதியாக, கல்லூரிக்கென்றே 'பாங்க்' ஒன்றும், 'அஞ்சலகம்' ஒன்றும் உள்ளது.

இக் கல்லூரியில், வருகிற கல்வியாண்டில், பி.ஏ., எம். எஸ்ஸி, (தாவர இயல்), எம். காம், எம். ஏ. (ஆங்கிலம்) ஆகிய புதிய வகுப்புகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

இக் கல்லூரியை நிர்வகிக்க ஓராண்டுக்கு ஆகும் செலவு ரூ. 7 இலட்சம். இதற்கு அரசு தரும் உதவித் தொகை ரூ. 2.5 இலட்சம்.

### அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி

பழனி நகரிலும், நகரைச் சுற்றிலும் உள்ள மகளிர்க்குக் கல்லூரிக் கல்வி அளிப்பதற்கென்றே 1—7—70-இல் இக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இக் கல்லூரியில் இப்போது 299 மாணவியர் கல்வி பயில்கின்றனர்.

இக் கல்லூரியில் வருகிற கல்வியாண்டில், இளம் அறிவியல் கணிதம், இளம் அறிவியல் விலங்கியல், முதுகலை தமிழ் இலக்கியம் ஆகிய புதிய வகுப்புகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

பல்கலைக் கழகத்தில் இக் கல்லூரியின் சார்பில் உள்ள அறக் கட்டளை ரூ. 5 இலட்சம். இக் கல்லூரிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 7 இலட்சம் செலவாகிறது. இதில், அரசின் உதவித்தொகை ரூ. 3 இலட்சம்.

இப்போது இக்கல்லூரிக்கென, பழனியிலிருந்து 3 கல் தொலைவிலுள்ள சின்னக்கலையம் புத்தூர் நரேந்திர தேவ நகரில் சுமார் 40 ஏக்கர் நிலத்தில் 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

### அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் செந்தமிழ்க்கல்லூரி.

திருக்கோயில் நிருவாகத்தினரால், மகளிர்க்கெனத் தனித் தமிழ்க் கல்லூரியாக 1-7-70-இல் தொடங்கப் பெற்றது. ஒரு முதல்வர், ஒரு விரிவுரையாளர், 30 மாணவியருடன் தொடங்கப் பெற்ற இக் கல்லூரி படிப்படியாக வளர்ந்து, இன்று ஆறு விரிவுரையாளர்களுடனும், 146 மாணவியருடனும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்கலைக் கழகத்தேர்வு எழுதிய முதனிலை மாணவியர் எல்லாருமே வெற்றி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர, செல்வி எம். மனோரஞ்சிதம், செல்வி எஸ். நவமணி இருவரும் பல்கலைக் கழகப் பரிசு பெற்று இக் கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்துள்ளனர்.

இந்தக் கல்லூரிக்கும், திருக்கோயிலின் நிருவாகத்தில் இயங்கும் மகளிர் கலைக் கல்லூரிக்குமாக கூட்டு விடுதி ஒன்றுள்ளது. இந்தத் தமிழ்க் கல்லூரிக்கென நல்லதொரு நூல் நிலையம் உள்ளது. இந்த நூல் நிலையத்தில் 2,112 நூல்கள் உள்ளன. இது தவிர., நாள், கிழமை, திங்கள் இதழ்களாக 12 இதழ்கள் வரவழைக்கப்படுகின்றன. மாணவியர் இவற்றை நல்ல முறையில் பயன்படுத்துகின்றனர்.


மகளிர் செந்தமிழ்க் கல்லூரியில் இலக்கிய வகுப்பு.

### அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி·

இந்த நாட்டு இளைஞர்கள் சமய அடிப்படையிலான இந்தியப் பண்பாட்டினை நன்குணர்ந்து போற்றும் வகையில் அத் துறையில் கல்லூரிக் கல்வி அளிக்க வேண்டிய இன்றியமையாமை உணர்ந்து 23—7—60-இல் தொடங்கப் பெற்றது, இக் கல்லூரி. தென்னகத்தில், பண்பாட்டுக் கல்வியை இளைஞர்கட்கு வழங்கும் முதற் கல்லூரி இதுவே யாகும். இந்திய வரலாறு, தொல் பொருள் ஆய்வு, சமய தத்துவம், பண்பாடு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய இந்தியப் பண்பாட்டில் பட்ட மேற் படிப்புக் கல்விக்கும் (எம். ஏ. வகுப்பு) இங்கு வசதி செய்து கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த முறையில் அமைந்த பாடத் திட்டங்

களைக் கொண்ட பண்பாட்டுக் கல்லூரிகள் இந்தியாவில் வேறெங்கும் இல்லை.

இக் கல்லூரிக்கு அரசு மானியம் தவிர தேவஸ்தானம் ஆண்டுதோறும் 1,25,000 ரூபாய் செலவு செய்கிறது.

இங்குள்ள நூலகத்தில் 7,000 புத்தகங்கள் உள்ளன. ஒரேயொரு பட்டப் படிப்பிற்கு இவ்வளவு அதிகமான புத்தகங்களைக் கொண்ட நூலகம் வேறெங்கும் இருப்பதரிது.

கிறித்தவ சமயத்தைச் சார்ந்த மாணவர்களும் இந்தக் கல்லூரியில் சேர்ந்து பயில்கின்றனர்.

அடுத்த கல்வி ஆண்டில், பண்பாட்டுக் கல்வியை ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளிலும்—புகுமுக வகுப்பில் புகுத்த ஏற்பாடு செய்து வருகின்றனர். பட்டப் படிப்பு மூன்றும் பகுதியில், சுற்றுலா, புவியியல், வரலாறு போன்ற பாடங்களும், பட்டப் படிப்பில் வரலாற்றுப் பாடங்களும் சொல்லிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது; இங்கு பி.எச்டி. ஆரம்பிக்கவும் ஏற்பாடு ஆகியுள்ளது.

இக் கல்லூரியில் சேர, ஏனைய கல்லூரிகளில் புகுமுக வகுப்புப் பயின்ற யாரும் விண்ணப்பிக்கலாம்.

பண்பாட்டுக் கல்லூரியின் பாடத் திட்டத்திற்குத் தற்போது தமிழில் போதிய நூல்கள் இல்லை என்னும் பொதுவான குறை இருந்தாலும், அப்பாடத் திட்டத்திற்கு உதவக் கூடிய புத்தகங்களைத் தாம் தமிழில் தயாரித்துக்கொண்டிருப்பதாகக் கூறுகிறார் கல்லூரியின் முதல்வர் திரு டி. எஸ். இராமதாஸ், எம். ஏ.

இக் கல்லூரியில் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்கள் வழக்கம்போல எல்லாத் துறைப் பணிகளுக்கும் செல்லலாம் எனினும், கோயில் நிருவாக அதிகாரிகளாகவும், சுற்றுலாத் துறை அலுவலர்களாகவும், சமயப் பரப்புனராகவும் பணிபுரிவதற்குக் கூடுதல் வாய்ப்பு உள்ளதாக முதல்வர் பெருமையுடன் கூறுகிறார்.

அருள்மிகு பழனியாண்டவர் கோயிலுக்குச் சொந்தமான மேற்குறித்த கல்லூரிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் அவர்கள் தம் குடும்பத்தினருக்கும் தேவஸ்தான மருத்துவ மனைகளில் இலவச மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. அலுவலர்களின் குழந்தைகளுக்கு, மேற்குறித்த கல்லூரிகளில் இலவச படிப்புப் பெறுவதற்கான வசதியும் வழங்கப்படுகிறது.

### ஊமையர் செவிடர் பள்ளி

'அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பார்கள். அத்தகைய அரிய மானிடப் பிறவியைப் பெற்றிருந்தும், கூனாகவும், குருடாகவும், செவிடாகவும், ஊமையாகவும் வாழ்ந்தால் அவர்களுக்குச் சமுதாயத்தில் உரிய அந்தஸ்து கிடைக்காது. இவ்வகையில், அவர்களுக்கு நல் வாழ்வு அளிப்பது, உயரிய தெய்விகப் பணி என்பதில் ஐயமில்லை. அத்தகைய செவிடர் ஊமைகளுக்கு எழுத—படிக்க—பேசக் கற்றுக் கொடுக்கும் வகையில் பழனித் திருக்கோயிலின் சார்பில், 'ஊமையர் செவிடர் பள்ளி' ஒன்று நடைபெறுகிறது. இந்தப் பள்ளியைத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 14—2—72-இல் துவக்கி வைத்தார்கள். சென்ற ஆண்டு 20 குழந்தைகளுடன் தொடங்கப் பெற்ற இப்பள்ளியில் இப்போது 27 சிறுவர்கள் கல்வி பயில்கின்றனர். இந்தப் பள்ளியில், காது செவிடாயிருந்து ஒலியெழுப்பக் கூடிய ஊமைச் சிறுவர்கள் சேர்த்துக் கொள்ளப் பெறுகின்றனர். பரம்பரைச் செவிடர்களும் நோய் வாய்ப்பட்டு இடையே செவிடர்களான சிறுவர்களும் சேர்த்துக்கொள்ளப் பெறுகின்றனர். எனினும், இப்பள்ளியில், 10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப் பெறுகின்றனர். இங்கு பயிலும் சிறுவர்களுக்குப் பயிற்சியளிக்க ஆடியோமீட்டர் குரூப் ஆம்ளிஃபையர் ஆகிய விஞ்ஞானக் கருவிகள் வாங்கப் பட்டுள்ளன. இவற்றின் மதிப்பு சுமார் 12,000 ரூபாய் ஆகும்.

இப் பள்ளியின் நிருவாகச் செலவிற்காக ஆண்டுதோறும் திருக்கோயில் பொது நிதியிலிருந்து ரூ. 25,000 செலவிடப் பட்டுவருகிறது. இங்குபயிலும் மாணவர்களுக்குத் திருக்கோயிலின் மற்றொரு நிறுவனமான அன்பில்லத்தில் இலவசமாக உணவும், உறையுளும் அளிக்கப்பட்டுள்ளது.. இவர்களுக்குத் திருக்கோயிலின் நிருவாகத்தில் உள்ள ஆங்கிலமுறை மருத்துவ மனையிலும் சித்த மருத்துவ மனையிலும் இலவசமாக மருத்துவ உதவிகள் அளிக்கப்படுகின்றன.

இந்த ஊமையர் செவிடர் பள்ளிக்குக் கட்டளை நிதியாக ரூ. 10,000 முதலீடு செய்யத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

### கார்த்திக் பள்ளி

திருக்கோயில் நடத்திவரும் கல்வி நிறுவனங்களில் ஒன்றான கார்த்திக் பள்ளி, கிண்டர்கார்டன் வகுப்புத் தொடங்கிச் சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு ஆங்கில மொழி வாயிலாகக் கல்வி அளித்து வருகிறது. 19—1—72-இல் தொடங்கப் பெற்ற இப் பள்ளியில் இப்போது 125 குழந்தைகள் கல்வி பயில்கின்றனர். ஐந்து ஆசிரியைகள் பணி புரிகின்றனர்.



இந்தியப் பண்பாட்டுக் கல்லூரியில் வகுப்பு நடைபெறுகிறது.

குழந்தைகளோடு அவர்கள் மிக நல்ல முறையில் அன்போடு பழகி, அவர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கின்றனர். பள்ளிக்கு வேண்டிய விளையாட்டுக் கருவிகள், ஒலிப் பதிவுக் கருவி, ரிக்கார்டு பிளேயர் ஆகியவை திருக்கோயில் நிதியிலிருந்து வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. மாண்டிசோரி முறையில் நடைபெறும் இப் பள்ளியில், குழந்தைகளுக்குச் சரியான ஆங்கில மொழி உச்சரிப்பைக் கற்றுக்கொடுக்க ஒலிப்பதிவுத் தட்டுகள் பயன்படுத்தப் படுகின்றன. இங்கு பயிலும் குழந்தைகளைக் கூட்டி வரவும், கொண்டு போய் விடவும், திருக்கோயில் நிதியிலிருந்து ஒரு 'வான்' வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழந்தைக்கும் மாதச் சம்பளம் ரூ. 15-ம், 'வான்' கட்டணமாக ரூ. 5-ம் வசூல் செய்யப்படுகிறது.

குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உறு துணையாக அமையும் வகையில் 500 குழந்தைப் புத்தகங்களைக் கொண்ட நூலகம் ஒன்றும், சோதனைக் கூடம் ஒன்றும், மாணவர் அரும் பொருட்காட்சியகம் ஒன்றும் உள்ளன.

கோயிலுக்குச் சொந்தமான 'முருகன் அகம்' என்னும் அழகிய—நல்ல கட்டிடத்தில் கார்த்திக் பள்ளி நடைபெறுகிறது. மாதச் சம்பளமாகவும் வான் கட்டணமாகவும் கிடைக்கக்கூடிய வருமானம் ரூ.20 ஆயிரம். எஞ்சிய தொகை திருக்கோயில் வருமானத்திலிருந்தே செலவழிக்கப் பெறுகிறது. இப்பள்ளி முழுக்க முழுக்க ஒரு நல்ல ஆங்கில நர்சரிப் பள்ளியாகவே காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது.

**குழந்தைகள் காப்பகம் :**

திருக் கோயிலின் சார்பில் குழந்தைகள் காப்பகம் ஒன்று 14—9—72-இல் தொடங்கப் பெற்றுச் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. பட்டத்து விநாயகர் கோயிற் பின்புறத்தே உள்ள இந்தக் காப்பகத்தில் இன்று 81 குழந்தைகள் உள்ளன. 3 வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட இந்தக் குழந்தைகள் அனைவரும், காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை வெளியில் சென்று பணி புரியும் தாய்மார்களின் குழந்தைகளே! இந்தக் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக 3 ஆசிரியை



மகளிர் செந்தமிழ்க் கல்லூரியில் பல்கலைக்கழகப் பரிசு பெற்ற செல்வி எம். மனோரஞ்சிதம், செல்வி எஸ். நவமணி

களும் உதவியாளர்களும் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள், குழந்தைகளுக்குப் படிப்பும் கதையும், பாட்டும் சொல்லிக் கொடுப்பதோடு விளையாட்டுக் களையும் சொல்லிக் கொடுக்கின்றனர். காலையில் பாலும், மதியம் உணவும், மாலையில் 2 பிஸ்கட் முதலியனவும் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. அள்ளியுண்ணத் தெரியாத குழந்தைகளுக்கு அந்த ஆசிரியைகள் உணவை ஊட்டி விட்டுப் பின்னர் கதை சொல்லித் தூங்க வைத்து, அவர்கள் எழுந்ததும் முகத்தைக் கழுவி, தலை நீவி, பவுடர் போட்டு, உடைகளைச் சரி செய்து விடுகின்றனர். மாலை 4.30 மணிக்கு மேல் பெற்றோர்கள் வந்து அந்தப் பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு செல்லும் வரை அக் குழந்தைகள் யாரும் தாங்கள் தாயைப் பிரிந்திருக்கின்ற உணர்ச்சிஇல்லாமலேயே ஒரு குடும்பத்தின் குழந்தைகளாகப் பழகுகின்றனர். குழந்தைகளுக்கு இலவச மருத்துவ வசதியும் செய்யப்படுகிறது. இந்தக் காப்பகத்திற்காகத் தேவஸ்தானம் ஆண்டுதோறும் சுமார் 24 ஆயிரம் ரூபாய் செலவு செய்கிறது.

**அன்பு இல்லம் :**

பெற்றோரை இழந்த—ஆதரவற்ற ஏழைச் சிறுவர்கள் தங்கி உணவும், கல்வி, மருத்துவ வசதிகளும் பெறுவதற்கு வாய்ப்பாக உள்ளது இந்த அன்பு இல்லம். இது 1-5-52ல் ஆரம்பிக்கப்பட்டது. பழனியிலுள்ள உயர்நிலைப் பள்ளி, தொடக்கப் பள்ளி, ஊமை செவிடர் பள்ளி ஆகியவற்றில் பயிலும் மாணவர்கள் இவ்வில்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்போது 111 மாணவர்கள் உள்ளனர்.

இவ்வில்லம் தெற்கு கிரி வீதியிலிருந்து சின்ன அய்யம் புள்ளிக்குச் செல்லும் பாதையில் சுமார் 3 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது.

மாணவர்களுக்கு 3 வேளையும் (காலை, மதியம், இரவு) நல்ல முறையில் உணவு தயாரித்து வழங்குகிறார்கள். மாலை நேரத்தில் தேநீர் மட்டும் கொடுக்கப்படுகிறது.

இவர்களுக்குப் பள்ளிச் சீர் உடை 2 செட்டும், ஒரு வேட்டி, ஒரு துண்டு வீதம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிறது.

அன்றாடம் குளியலுக்கு, லைப் பாய் சோப்பும், வாரமொரு முறை எண்ணெய்க்குளியலுக்கு எண்ணெய், சிகைக்காய்த் தூள் துணி துவைப்பதற்காக சோப் ஆகியனவும் கொடுக்கப்படுகின்றன. மாதம் ஒரு முறை முடி திருத்திக் கொள்ளவும் வசதி செய்யப்படுகிறது.

இங்கு 6 வயது முதல் 16 வயது வரையுள்ள ஆதரவற்ற—ஏழை மாணவர்கள்சேர்த்துக் கொள்ளப் பெறுகின்றனர்.

அன்பு இல்லத்தில் உள்ள மாணவர்களின் சமய அறிவு தழைக்க, தனியாகத் தேவார

ஆசிரியர் ஒருவரை நியமித்துத் தேவாரம், திருமுறை, திருப்புகழ் போன்றவற்றிலிருந்து பாடல்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. இங்குள்ள மாணவர்களுக்கு தேவஸ்தான மருத்துவ மனையில் மருத்துவ வசதி செய்து கொடுக்கப்படுகின்றன. தேவஸ்தானம், இந்த அன்பு இல்லத்திற்கு ஆண்டுதோறும் 45 ஆயிரம் ரூபாய் செலவு செய்து வருகிறது.

## முதியோர் இல்லம்

ஆதரவற்ற—தொழில் செய்து பிழைக்க முடியாத முதியவர்களின் நலன் பேணுவதற்கான முதியோர் இல்லம் ஒன்று 15—2—72-இல் தொடங்கப்பட்டுள்ளது. இந்த முதியோர் இல்லத்தில் நல்ல வசதியான கட்டில், மெத்தை, போர்வை, தலையணைகள் கொண்ட 10 படுக்கைகள் போடப்பட்டுள்ளன. இங்கு இப்போது பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 10 முதியவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும் குறைவறச் செய்து கொடுக்கப்படுகின்றன. அவர்களைச் சந்தித்து உங்களுக்கு எல்லா வசதிகளும் சரிவரச் செய்து கொடுக்கப்படுகின்றனவா என்று கேட்டபோது, 'எங்களுக்கு எந்தக் குறைவுமில்லை' என்று பெரு மகிழ்ச்சியோடு கூறுகிறார்கள். இவர்கள் 10 பேரும் ஒருவருக்கொருவர் மிகவும் அன்போடும் பாசத்தோடும் பழகிக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு மருத்துவ வசதி தேவைப்பட்டால் தேவஸ்தான வானில் தேவஸ்தான மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று, மருத்துவ மனையிலேயே தங்கிச் சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்பட்டால், அங்கு படுக்கைகள் இல்லையென்றாலும் அருகிலுள்ள தேவஸ்தான சத்திரத்தில் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்து மருத்துவ வசதி செய்யப்படுகிறது.

## இலவச சித்த மருத்துவச் சாலை

தேவஸ்தானத்தின் சார்பில் சித்த மருத்துவச்சாலை ஒன்று 8—11—64-இல் திறந்து வைக்கப்பெற்றது. இங்கு விஷக்கடிக்குச் சிறப்பான முறையில் மருத்துவம் பார்க்கப்படுகிறது குழந்தை வைத்தியமும் நல்ல முறையில் பார்க்கப்படுகிறது.

இம்மருத்துவச் சாலைக்குத் தேவஸ்தானம் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 7 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்கிறது.

## தேவஸ்தான மருத்துவமனை :

திருக்கோயில் சார்பில் கடந்த 14—2—72-ல் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது இம் மருத்துவமனை. பழனி புகைவண்டி நிலையத்திற்குச் செல்லும் சாலையில் மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள பழைய சத்திரத்தின் அருகில் அமைந்துள்ள இம் மருத்துவ மனையில் இப்போது இரண்டு டாக்டர்கள் (ஒரு பெண் டாக்டர் உட்பட) பணி புரிகின்றனர்.

தற்பொழுது நாள் ஒன்றுக்கு சுமார் 175 முதல் 200 நோயாளிகள் வரை சிகிச்சை பெற வருகின்றனர். முதலில் இத் திருக்கோயிலில் பணி புரியும் ஊழியர்களுக்கும் அவர் குடும்பத்தினருக்கும் மட்டுமே இலவச வைத்திய வசதிகள் கொடுக்கப்பட்டு வந்தது. பின்பு அது 'கார்த்திக் பள்ளி', நாதசுரப் பள்ளி, ஆகியவற்றில் படிக்கும் மாணவ, மாணவியர்க்கும் அன்பு இல்லத்தில் தங்கி இருக்கும் ஏழை மாணவர்கள், செவிடர்கள் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் 'குழந்தைகள் காப்பக'த்தில் உள்ள குழந்தைகள் இப்படியாக வளர்ந்துள்ளது.

பழனியாண்டவர் கலைக் கல்லூரி, பண்பாட்டுக் கல்லூரி பழனியாண்டவர் மகளிர் செந்தமிழ்க் கல்லூரி, ஆகமப் பள்ளி, கோசாலை, சித்த மருத்துவமனை, முதியோர் இல்லம் ஆகியவற்றில் பணியாற்றும் ஊழியர்ளுக்கும் அவரது குடும்பத் தினருக்கும் இவ்வசதி கொடுக்கப்பட்டு வருகின்றது.

தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்காக இம்மருத்துவ மனையில் இரண்டு வார்டுகள் உள்ளன. ஆண் பகுதி, பெண் பகுதி என இரு பகுதிகள் வீதம் 20 படுக்கைகள் உள்ளன.

> தூய உள்ளமே கோயில்; நலிந்தோரைத் தேற்றுவதே தோத்திரம்; மக்கட் பணியே மகேசனுக்கு உகந்த பூசை; ஏழை இதயத்திலே களிப் பூட்டலே, பகவானுக்குத் தேர், திருவிழா.
>
> —பேரறிஞர் அண்ணா

## நாதசுரப் பள்ளி :

தகுதி வாய்ந்த 30 மாணவர்களுக்கு இலவசமாக உணவு, உறையுள், மருத்துவம் முதலிய வசதிகள் அளித்து நாதசுரம், தவுல் ஆகிய இசைத்துறையில் மூன்றாண்டுகளுக்கு இங்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## ஆகமப் பாடசாலை :

தகுதி வாய்ந்த 24 மாணவர்களுக்கு ஆகமப் பயிற்சி அளித்துச் சிறந்த அர்ச்சகர்களாகவும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## தேவார இசைப் பள்ளி :

கிரி வீதி வடக்கு துர்க்கை அம்மன் கோயிலில் பள்ளி விடுமுறை நாட்களான சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களில் ஆரம்பப் பள்ளி மாணவர்கள், சிறுவர் சிறுமியர் தேவாரம், திருப்புகழ் முதலான தெய்வப் பனுவல்களை இசையொடு பயில வாய்ப்பளிக்கிறது.

## மதிய உணவுத் திட்டம் :

சுமார் 300 மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் தொண்டினைத் திருக்கோயில் மேற்கொண்டு செய்துவருகிறது.

## தங்கும் வசதிகள் :

பழனிக்கு வரும் பயணிகள் தங்குவதற்கு வசதியாகச் சிறந்த தங்கும் விடுதிகளை, திருக்கோயில் சார்பில் கட்டப்பட்டுள்ளன. தேவஸ்தான சத்திரமும், தண்டபாணி நிலையமும் தவிர, தேவஸ்தானத்திற்குச் சொந்தமான குளிர்சாதனம் பொருத்தப்பட்ட வசதியான அறைகளும், சிறு குடில்களும் கூட உள்ளன.

இன்றையப் பழனியாண்டவர் திருக்கோயில் தொண்மைக் காலத் திருக்கோயிலை நினைவுறுத்தும் வண்ணம், நல்லதொரு சமுதாயப் பணி நிலையமாகத் திகழ்ந்து புகழ் ஒளி வீசி வருவது பெரிதும் பாராட்டுக் குரியதாகும்.

—சாமி. பழ




நாங்கள்போய் நட்டகல்லே நடுகல் ஆகும்;
நடுகல்லாய் இருக்கின்ற மலையே! நீயோ
ஓங்கார மாயுள்ள உருவம்; ஆனால்
உனதுச்சிக் குடுமிஎங்கள் கையில்; என்ன
ஆங்காரம் உனக்குத்தான்? உயரங் காட்டி
'ஆத்தாடி' எனவியப்பால் அயர வைப்பாய்;
சாய்ங்கால நேரத்தில் காற்று வாங்கச்
சரியான இடம்உனது தாழ்வா ரந்தான்!

உல்லாச நிலையம் நீ; உடல்நோ யுற்றோர்
ஓய்வெடுத்துக் கொள்ளுகின்ற மாளிகை நீ;
வில்லாக வளைந்துள்ள குறிஞ்சித் திட்டே!
வீணாக ஏன்படுத்துக் கிடக்க வேண்டும்?
பொல்லாரின் படையெடுப்பைத் தடுக்கத் தானே
பொதுவான மதிற்சுவரே! எல்லைக் கோடே!
கல்லாக நின்றாலும் பொறுப்பை உன்போல்
கல்லாமல் தாழ்ந்திட்டோம்; பொறுபொ ருப்பே!

'மலையசைந்து நகர்ந்தாலும் அசையேன்' என்பார்;
வரலாற்றில் நீ அசைந்த சாட்சி ஏது?
தலையசைத்து நடக்கின்ற யானைக் கூட்டம்
தான்எதிரே வருதல்போல் தோன்று கின்றாய்;
தொலைவினிலே உனைப்பார்க்குந் தோறும், வந்து
தொடவேண்டும் போலிருக்கும்; ஏதோ மாய
வலைவீசி இழுக்கின்றாய், தெரிய வில்லை;
மயக்கத்தைக் கொடுக்கின்றாய், புரிய வில்லை

'பச்சைமலை போலுமொரு மேனி' என்று
பக்திப்பாப் பாடினானோர் புலவன்; ஆனால்,
இச்செகத்தில் இச்சகத்தார் உளரே யன்றி
எங்கணுமத் திறத்தாரைக் காண வில்லை;
இச்சையினை எழுப்புகின்ற முகடே! நீயும்
ஏற்றத்தாழ் வுக்குள்ளே சிக்கி னாயா?
பச்சைநிறம் பொதிகைமலை; ஒப்பு கின்றோம்!
பாறையது பொன்மலையாம்; பொருத்தந் தானா?





உன்னிடத்தில் சமதருமம் உரைக்க வில்லை ;
உள்ளத்தைச் சொல்வதிலோர் ஆசை ; நீயே
விண்ணுயரம் போய்வளர்ந்தாய் ; கொடியை நாட்டி
வெற்றிவெற்றி எனமுழங்கு கின்றோம் நாங்கள்,
மண்ணுலகின் சமவெளியை அன்றைக் கெல்லாம்
வாய்பிளந்து பார்க்கின்ற வாய்ப்பே உன்னால் ;
திண்ணமுடன் வையமொரு வட்ட மென்னும்
தோற்றத்தைத் தந்தமுதல் தோற்று வாய் நீ !

திண்டுதிண்டாய் உள்ளதனால் திண்டு கல் நீ !
சிலர்ஏனோ இருக்கின்றார் குத்துக் கல்லாய் ?
சிண்டுமுடிப் பவர்இங்கே உண்டு : நீயோ
தேனருவி முடிக்காமல் அவிழ்த்து விட்டாய் ;
தொண்டுசெயும் உன்னுடைய தூதர் தாமோ
சுறுசுறுப்பாய் ஓடுகின்ற நதிகள் எல்லாம் ?
கண்டவரும் நுழைவதற்குக் கணவாய் கொண்டாய்
கண்டுவரும் மலர்ச்சியைநீ கனவா கண்டாய் ?



எரிமலையோ இல்லை, சிலர் சரிக்கட் டத்தான்
எரிந்துவிழு கின்றாரோ ? விறகெ ரிந்தால்
கரிமிஞ்சும் ; இவரெரிந்தால் என்ன மிஞ்சும் ?
கற்கண்டாய் இனிக்குமலை வாழை ; ஆனை
உரிஞ்சுகின்ற மலைப்பாம்பைக் காணும் போதே
உளம்ஒடுங்கிப் போகாதோ ? பெயரை மட்டும்
வரிந்துகொண்டால் பண்புமதில் நுழைந்தா கொள்ளும்?
மலையமான் அஞ்சிஉன துறவா என்ன ?

எறும்பூர்ந்து நீதேய்ந்து போவ தில்லை ;
இடிக்கின்ற வேட்டுகளால் சிதறு கின்றாய் ;
பெரும்புயலும் உனைமோதிக் காலில் வீழும் ;
பிறந்தழியும் எம்மிடமா உனக்குத் தோல்வி ?
திரும்புகின்ற திசையெல்லாம் நேர்க்கோட் டில் நீ
தெரிகின்றாய் ; இளம்பரிதி உன்னி டத்தில்
அரும்புகின்ற அழகுக்கா போட்டி ? ஈன்ற
அன்னையெனத் தாலாட்டு கின்றாய் நீயே !

— இளங்கோ






## எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

# சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்



சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

– சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.



# கோடைப் பருவத்திற்கு ஏற்ற இரு புதிய வீரியச் சோளம்!

புதிதாகப் புகுத்தப்பட்டுள்ள சி. எஸ் எச். 5 (C. S. H. 5) கோவில்பட்டி உயரம் (Koilpatti tall) ஆகிய இரு கலப்பின வீரியச் சோள இரகங்கள், தற்பொழுது உழவர் பெருமக்களிடையே புகழ் பெற்று விளங்கும் 'கோ. 18' இரகத்தைவிட அதிக தானியமும், அதிக தட்டையும் கொடுத்துள்ளன. 'சி. எஸ். எச். 5' இரகம், 'கோ. 18' இரகத்தைவிட 53 சதம் அதிக தானியமும், 7 சதம் அதிக தட்டையும் கொடுத்துள்ளது. 'கோவில்பட்டி உயரம்' என்ற இரகம் 33 சதம் அதிக தானியமும், 14 சதம் அதிக தட்டையும் அளித்துள்ளது. இவ்விரு கலப்பின வீரியச் சோள இரகங்களும் பின் கண்ட சிறப்புக் குணங்களைப் பெற்றுள்ளன.

1. ஒரு வார காலம் முன்னதாகவே, அறுவடைக்கு வந்து விடுகிறது.
2. அதிக அளவு இரசாயன உரம் இவ்விரு இரகங்களுக்கும் தேவை இல்லை. 'கோ. 18' இரகத்திற்கு இடும் அளவு இரசாயன உரமே இவ்விரு இரகங்களுக்கும் போதுமானது.
3. தானியமணிகள் உருண்டையாகவும், முத்துப்போன்ற வெண்மை நிறமாகவும் உள்ளன.
4. விற்பனை அங்காடிகளில் இவ்விரு புதிய இரகங்களுக்கும் அதிக விலை கிடைக்கிறது.

கோவை மாவட்டத்தில், வேளாண்மைத் துறையினரால் மேற்கொள்ளப் பெற்ற அனுசரணை ஆராய்ச்சிப் பரிசோதனைகளிலிருந்து மேற்கூறிய உண்மைகள் தெரியவருகின்றன. எனவே இவ்விரு புதிய கலப்பின வீரியச் சோள இரகங்களும் கோவை மாவட்டத்திலும், மற்றும் இதர மாவட்டங்களிலும் கோடைப் பருவத்தில் இறைவைச் சோளம் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களின் வாழ்வை வளப்படுத்தும் என்பது திண்ணம்.

[தகவல்: கூடுதல் வேளாண்மை இயக்குநர் (ஆராய்ச்சி), திருச்சிராப்பள்ளி-18].


## தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ். 406.

நெ. 14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி,
சென்னை-600007.

தொலைபேசி எண்: 30800 தந்தி: "ஹவுஸ்பாங்க்"

தபால் பெட்டி எண்: 486

*தலைவர்:* திரு பழனிவேல் ராஜன், பி. எஸ்ஸி., பி.எல்., எம். எல். ஏ.
*உபதலைவர்:* திரு பி. கஸ்தூரி பிள்ளை.
*பொருளாளர்:* திரு எஸ். பழனிசாமி, எம். ஏ.

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ... .. | ரூ. 2·5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ... ... ... | ரூ. 1,87,69,500 |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை. | ரூ. 10,12,30,217 |

*இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.*

| | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு |
|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு ... ... ... ... | ரூ. 25,000 |
| கிராமப்புறங்களில் புதிய வீடு கட்ட ... ... ... | ரூ. 10,000 |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும் புதுப்பிக்கவும்... | ரூ. 10,000 |

பூ. க. பத்மநாதன், பி.ஏ., எச்.டி.சி.,
*இணைப்பதிவாளர்—செயலாளர்.*





# அலைகடலோரத்திலே அண்ணா நீச்சல் குளம்

அலைகடலோரத்திலே — அறிஞர் அண்ணா சதுக்கத்தின் அருகிலே — அழகாய்க் காட்சியளிக்கிறது அண்ணா நீச்சல் குளம்!

மனத்திற்கு மகிழ்வைத் தரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குளம் ஈடு இணையற்றதாக விளங்கி வருகிறது.

1973 ஜூன் முதல்நாள் துவக்கப்பட்ட இது, அனைத்துலக நீச்சல் விதிகளுக்குட்பட்டு அழகுற அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கே பாய்ச்சல் குளம் (Diving pool), நீச்சல் குளம் (Swimming pool) என இருவகைக் குளங்கள் கண்ணைக் கவரும் வகையில் கட்டப்பட்டிருக்கின்றன.

பாய்ச்சல் குளம் அதாவது உயரே பலகை மேலிருந்து நீரில் குதிக்கும் குளம் 25 மீட்டர் நீளமும், 15 மீட்டர் அகலமும் கொண்டது. நீரின் ஆழமோ 5 மீட்டர். இதன் தெற்குப் பக்கத்தில், மேலே இருந்து நீரில் குதிப்பதற்கு வசதியாக ஒரு நான்கு அடுக்குக் கட்டடம் எடுப்பாய்க் காட்சி தருகிறது. இந்தக் கட்டடத்தில் 3, 5, 7·50, 10 மீட்டர் உயரங்களில் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த அடுக்குக் கட்டடத்தின் கீழே





மூன்று கண்ணாடிச் சன்னல்கள் பொருத்தப்பட்ட அறை ஒன்று உள்ளது. இது எதற்குத் தெரியுமா?

நீச்சல் போட்டி நடக்கிறது என்று வைத்துக்கொள்வோம். நடுநிலையாளர், நீரில் குதிப்பவரின் நிலை, குதிக்கும் விதம் முதலானவற்றைப் பார்க்க வேண்டும். இதை அவர் இந்த அறையிலிருந்து கொண்டே பார்த்து விடலாம்! ஆம். அவற்றையெல்லாம் இந்தக் கண்ணாடி நன்கு எடுத்துக் காட்டிவிடும்!

இம்மாதிரியான ஒரு நூதன அமைப்பு இந்தியாவிலேயே முதன்முறையாக இங்குதான் கட்டப்பட்டுள்ளது என்பதை நாம் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

இங்குள்ள குதிக்கும் பலகைகள் (Diving Boards) நூலிழைக் கண்ணாடியால் உருவாக்கப்பட்டு, பலகையினால் மூடப்பட்டவையாகும். இதனால் நன்கு எம்பி நீரில் குதிக்க முடியும். இம்மாதிரியான பலகைகள் இந்தியாவிலேயே முதன்முறையாக இங்குதான் வழக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது!

இத்தனை சிறப்புமிக்க இந்த நீச்சல் குளம் உள்ளூர்க்காரர்களை மட்டுமல்ல, வெளிநாட்டினரையும் வெகுவாகக் கவர்ந்து வருகிறது. இதன் எழில்மிக்க அமைப்புகளைப் பார்த்து மேலைநாட்டினர் மனமாரப் பாராட்டுகின்றனராம். அமைதியான சூழ்நிலை, அழகான தோற்றம், சுகாதார முறைப்படிக் குளங்களின் அமைப்பு இவை யாரைத்தான் கவரா?

தமிழ்நாடு அரசின் பொதுப் பணித்துறையினரால் ரூ. 20 இலட்சம் செலவில் கட்டப்பெற்ற இந்த எழில்மிக்க நீச்சல் குளம், காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை திறக்கப்பட்டுள்ளது. நீந்தும்போது விபத்துக்கள் ஏதேனும் ஏற்பட்டால் அவர்களைக் காப்பற்ற இங்கு 6 உதவியாளர்கள் இருக்கின்றனர். இரவைப் பகலாக்கும் வண்ணம் ஒளிமிக்க மின்விளக்குகள் குளத்தைச் சுற்றிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தண்ணீர் அசுத்தமாகாமல் இருப்பதற்காக, பாய்ச்சல், நீச்சல் குளங்களிலுள்ள நீர் தொடர்ச்சியான சுழற்சி முறையினால் (Continuous re-circulation method) சுத்தமாக்கப்படுகிறது. அதற்காக இங்கே 8 அடி அகலமும் 20



அடி நீளமுள்ள நான்கு வடிகட்டிகள் உபயோகிக்கப்படுகின்றன.

தொட்டியில் உள்ள நீரை 25 குதிரைச் சக்தியுள்ள இயந்திரத்தின் உதவியால் உறிஞ்சப்பட்டு, நான்கு வடிகட்டிகளுக்கும் சீரான முறையில் அனுப்பப்படுகிறது. இந்நிலையில் நீரைச் சுத்தப்படுத்தத் தேவையான மருந்துகளும் கலக்கப்படுகின்றன. பின்னர் வடிகட்டிகளினின்றும் வெளிவரும் நீர் பாய்ச்சல், நீச்சல் குளங்களுக்குத் தேவையான அளவு குளங்களின் அடிமட்டத்தில் செலுத்தப்படுகின்றது.




குளங்களில் நிரம்பி வழியும் நீர், இருபக்கங்களிலுமுள்ள வடிகால்களின் வழியாக மீண்டும் தொட்டிக்கே வந்துவிடும். இம்முறையினால் குளங்களைச் சுத்தப்படுத்த வேண்டுமென்பதற்காக நீர் அனைத்தையும் வெளியேற்றி, சுத்தப்படுத்தி நீர் நிரப்ப வேண்டும் என்ற அவசியம் இல்லை.



இந்தக் குளங்களில் நீந்துவதற்கும், குதிப்பதற்கும் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. பெரியவர்கள் 2 மணி நேரம் நீந்த ரூ. 1.50; சிறுவர்கள் 2 மணி நேரம் நீந்த ரூ. 1.

1972 அக்டோபரில் அனைத்துலக நீச்சல் போட்டி இங்கே சிறப்பாக நடந்தது. அந்தப் போட்டியைப் பார்த்தவர்கள் 'நீச்சல் அடித்தலும் ஒரு கலைதான். இதனைத் தெரிந்துகொண்டால் எத்தனை நன்மை!' என்பதை நிச்சயம் உணர்ந்திருப்பார்கள். ஏனென்றால், தப்பித்தவறி தண்ணீரில் விழுந்து விடுபவர்களை நாம் காப்பாற்றலாம் அல்லவா? அதுமட்டுமா? இந்தப் பயிற்சி உடல்நலத்துக்கும், மனவலிமைக்கும், மகிழ்ச்சிக்கும்கூட நமக்குத் துணை புரிகின்றதே!

**ஒரு வேண்டுகோள்!**

**அருள்கூர்ந்து, நீச்சல் தெரியாதவர்கள் மட்டும் இங்கே வந்து 'விஷப் பரீட்சை' யில் இறங்க வேண்டாம்!**

—பி. வி. ஜி.

# தாவரங்களில் ஊடுருவி இருந்து தாக்கும் பூச்சிக் கொல்லிகள்

சாதாரணமாக நாம் தெளிக்கும் பூச்சி மருந்துகள் மழையினுலும், சூரிய வெப்பத்தாலும் தங்கள் வீரியத்தை இழந்துவிடுகின்றன. இவ்வித இழப்பைத் தடுக்கவே உட்கிரகிக்கப்படும் (ஊடுருவிப்பாயும்) பூச்சி கொல்லிகள் தெளிக்கப்பட்டால் அவைகள் இலைகள், தண்டுகளில் உள்ள மென்துளைகள் வழியாக உட்கிரகிக்கப்பட்டுச் செடியின் எல்லாப் பாகங்களுக்கும் காற்றுக் குழாய்களால் எடுத்துச் செல்லப்படுகின்றன. இதனுல் செடியின் பாகங்கள் நச்சுத்தன்மை அடைகின்றன. இவற்றை இவ்வகை பூச்சிக் கொல்லிகள் பயிர்களின் ஊட்டச்சாற்றை உறிஞ்சும் பூச்சிகளான அசுவணி, தத்துப் பூச்சி, நாவாய்ப்பூச்சி, மாவுப் பூச்சிகள், செதிற் பூச்சிகள், மெழுகு இறக்கைப் பூச்சிகள், இலைப்பேன்கள் மற்றும் பயிர்ச் சிலந்திகளைக் கட்டுப்படுத்துவதில் தனிச்சிறப்புப் பெற்றுள்ளன.

**ஊடுருவிப்பாயும் பூச்சிக் கொல்லிகளின் நன்மைகள்:—**

1. தெளிக்கப்பட்ட பூச்சிக் கொல்லிகளது வீரியம் மழை, காற்று, வெப்பம் போன்றவற்ருல் குறைவடைவதில்லை.

2. மருந்துச் சத்து உடனே பயிரால் உட்கிரகிக்கப்படுவதனுல், பூச்சிகளின் இயற்கை விரோதிகளான ஒட்டுண்ணிகள், பூச்சி தின்னும் வண்டினங்கள் போன்றவைகள் பாதிக்கப்படுவதில்லை.

3. சாதாரணமாகப் பூச்சிக் கொல்லிகளால் எளிதில் அழிக்க இயலாத செதில் பூச்சிகள், பஞ்சுப் பூச்சிகள், பயிர்ச் சிலந்திகள் போன்றவை இவ்வகைப் பூச்சிக் கொல்லிகளால் எளிதாக அழிக்கப்படுகின்றன.

4. இவ்வகைப் பூச்சிக் கொல்லிகளில் சில பயிர்களுக்குள் சென்றதும் பூச்சிகளுக்கு மிகவும் நஞ்சுள்ளதாக மாறுகின்றன.

5. இவ்வகைப் பூச்சிக் கொல்லிகள் பயிர்களின் வளர்ச்சியில் விரும்பத்தகுந்த முன்னேற்றங்களை உண்டாக்கிவிடுகின்றன. வளர்ச்சியை அதிகரித்தல் இதில் முக்கியமானதாகும்.

6. பூச்சிகளால் பரப்பப்படும் 'பயிர் வைரஸ்' நோய்களை இப்பூச்சிக் கொல்லிகளை உபயோகித்துத் தடுக்கலாம்.

**குருணை வடிவப் பூச்சிக் கொல்லிகள்:—**

தற்சமயம் சிலவகை உட்கிரகிக்கப்படும் பூச்சிக்கொல்லிகள் 5 அல்லது 10 சதம் குருணை வடிவத்தில் கிடைக்கின்றன. இக்குருணைகளை விதைக்கும்போதோ, நடவு செய்த பின்னரோ பயிரைச் சுற்றி இட்டால் மருந்துச் சத்தானது நீரில் கலந்து, பயிர்களது வேர்களால் உட்கிரகிக்கப்பட்டு வேர் அழுத்தத்தாலும், பயிர்களது நீர்ப் போக்காலும், பயிர்களின் பல்வேறு பாகங்களுக்கும் செலுத்தப்படுகிறது. இம்முறையால், மருந்திடுதல் எளிதாக்கப்படுவதுடன் தெளித்தலால் ஏற்படக்கூடிய தீங்குகள் தவிர்க்கப்படுகின்றன. செலவும் குறையவாய்ப்பு ஏற்படுகிறது.

**விதையுடன் மருந்து கலத்தல்:—**

பெரிய விதைகளான பருத்தி, வெண்டை முதலியவற்றுடன் உட்கிரகிக்கப்படும் பூச்சிக் கொல்லிகளைக் கலந்து விதைத்தால், அவ்விதைகள் முளைக்கும் போது மருந்துச் சத்தினை விதைகள் உறிஞ்சிவிடுகின்றன. பின்னர் அம்மருந்தானது செடியின் பல பாகங்களுக்கும் செலுத்தப்படுகிறது. இவ்வாறு மருந்து கலக்கப்பட்ட விதைகளிலிருந்து தோன்றும் செடிகள், உறிஞ்சும் பூச்சிகளிடமிருந்து ஒரு மாத காலம் வரை பாதுகாப்புப் பெறுகின்றன. 4 முதல் 6 சதம் மருந்துச் சத்து இருக்குமாறு விதைகள் கலக்கப்படுகின்றன. இதற்காகக் கரியில் கலக்கப்பட்ட தனித் தயாரிப்புகளும் கிடைக்கின்றன. இவைகள் விதைகளில் ஒட்டிக்கொள்வதற்கு 'மிதைல் செல்லுலோஸ்', வேப்பங் கோந்து முதலியன பயன்படுத்தப்படுகின்றன.

**உட்கிரகிக்கப்படும் பூச்சிக் கொல்லிகளின் வகைகள்:—**

**1. பாஸ்பரஸ் கலந்தவை:—**

**'மிதைல் டெமடான்':**—இது 'மெட்டாசிஸ்டாக்ஸ்' என்று அழைக்கப்படுகிறது. விற்பனை செய்யப்படும் 'மெட்டாசிஸ்டாக்ஸ்' 25 சதமருந்தில் நச்சுப் பொருள் உள்ளது. ஒரு லிட்டர் நீரில், ஒரு மில்லி லிட்டர் 'மெட்டாசிஸ்டாக்ஸ்' கலந்து தெளிக்கலாம். பருத்தி, காய்கறிப் பயிர்களில் தோன்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த இது பயன்படுகிறது.

**'டைமீதோவேட்':** விற்பனையில் உள்ள 'ரோகார்' என்னும் பூச்சிக்கொல்லியில் 38 சத 'டைமீதோவேட்' கலந்துள்ளது. இதை 0.30 சதம் (ஒரு லிட்டர் நீரில் ஒரு மில்லி லிட்டர்) என்ற விகிதத்தில் பயன்படுத்தலாம். இது 'ரோகார்' 5 சதம் என்ற குருணை வடிவத்திலும் கிடைக்கிறது. நெல், பருத்தி, காய்கறிகள், புகையிலை போன்ற பயிர்களுக்குப் பாதுகாப்பளிக்க இம்மருந்தை உபயோகிக்கலாம்.

**'தயோமிட்டன்';** 'எக்டின்' என்ற பெயரில் 20 சதம் திறனில் இது கிடைக்கிறது. இது பருத்தி, புகையிலை போன்றவற்றிற்குப் பயன்படுகிறது.

**'பாஸ்பாமிடான்':** இது தண்ணீரில் கரையக் கூடிய பூச்சிக் கொல்லியாகும். 'டைமெக்ரான்' என்ற பெயரில் இது கிடைக்கிறது. ஒரு ஏக்கருக்கு 100 மி.லி. வீதம் இதைப் பயன்படுத்தலாம். நெல், பருத்தி, புகையிலை, மிளகாய்

போன்ற பயிர்களில் இதைப் பயன்படுத்தலாம்.

**மானேகுரோட்டோபாஸ்':** இதுவும் நீரில் கரையக்கூடிய தன்மை பெற்றுள்ளது. 40 சதம் 'மானேகுரோட்டோபாஸ்' அடங்கிய' நூவக்ரான்', 60 சதம் 'மானேகுரோட்டாபாஸ்' அடங்கிய 'அசோட்ரின், ஆகியவை பருத்திப் பயிர்ப் பாதுகாப்பில் பெருமளவு பயன்படுத்தப் படுகின்றன. இது, 0.025 சதம் அளவில் உறிஞ்சும் பூச்சிகளுக்கெதிராகவும், 0.075 சதம் அளவில் காய்ப் புழுக்களுக்கெதிராகவும் உபயோகிக்கப்படுகிறது.

**'டைகுரோட்டோபாஸ்':** நீரில் கரையக்கூடிய வீரியம் வாய்ந்த இது 'பிட்ரின்' என்ற பெயரில் 24 சதம் திரவமாகக் கிடைக்கிறது. இதை 0.024 சதம் அல்லது 0.048 சதம் அளவில் தெளிக்கலாம். இதை 0.1 சதம் டி.டி.டீ. மருந்துடன் கலந்து தெளித்தால், பருத்திக் காய்ப்புழுக்களைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்தலாம்.

**'சிட்ரோலென்':** பத்து சதக் குருணைகளாகக் கிடைக்கும் இம்மருந்து எக்டேருக்கு 1—1.5 கிலோ அளவு மருந்துச் சத்தளவில் பயன்படுத்தப்படுகிறது. பருத்தி, நெல் போன்றவற்றில் இதைப் பயன்படுத்தலாம்.

**'பென்ஸ்ல்போத்யான்':** இது 'டசானிட்' அல்லது 'டெராகர்பி' என்ற பெயர்களில் 5 சதம், 10 சதம் குருணை வடிவங்களில் கிடைக்கிறது. இது நீண்ட நாட்கள் நிலைத்துச் செயல்பட வல்லதாகும். எனவே, இதை நீண்ட காலப் பயிர்களான பருத்தி போன்றவற்றிற்குப் பயன்படுத்தலாம். இது நூற்புழுக்களை அழிப்பதில் சிறந்து விளங்குவதால் நூற்புழுக் கொல்லியாகவும் பயன்படுகிறது. உருளைக்கிழங்கின் பொன்னிற நூற்புழு, மிளகாய், கனகாம்பரம் போன்றவற்றைத்தாக்கும் வேர்முடிச்சு நூற் புழுக்கள் ஆகியவைகளைக் கட்டுப்படுத்த இதைப் பயன்படுத்தலாம். (தொடரும்)



**தமிழக அமைச்சரவைக் கூட்டம், 14—11—73ல் முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் கூலி வரையறை அறிவிக்கப்பட்டது. அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பின் முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகள்.**



''கார்த்திகேயன் தலைமையில் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கான குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிப்பதற்காக அமைக்கப்பட்ட குழு தந்துள்ள பரிந்துரையை அரசு ஏற்றுப் பரிசீலித்து அதை அமைச்சரவை ஏற்றுக் கொண்டது.



அக்குழுவில் இடம்பெற்றுள்ள திரு சி. நாராயணசாமி நாயுடு, திரு சாமிநாதன், எம்.எல்.சி., திரு ஏ. கே. சுப்பையா, எம் எல்.ஏ., திரு எஸ். நல்லசாமி, எம்.எல்.ஏ., ஆகியோர் ஒருமனதாகப் பரிந்துரை செய்துள்ள குறைந்த பட்சக் கூலி—கீழத் தஞ்சை நீங்கலாக மாநிலம் முழுதும் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டதாகும்.



உழவுக்கு மாடு, கலப்பையுடன் வருகிற தொழிலாளிக்குக் குறைந்தபட்சக் கூலி, நாள் 1–க்கு ரூ. 5·50; மாடு கலப்பையின்றி உழவுக்கு மட்டும் வந்தால் ரூபாய் 3.



அறுவடைக்கு வரும் ஆணுக்குக் குறைந்த பட்சக்கூலி ரூ.3·25; பெண்ணுக்கு ரூ.2·25 சிறியவர்களுக்கு ரூ. 1·50.



விதைத்தல், உழவு, நாற்று நடுதல் ஆகிய விவசாய வேலைகளுக்கு ஆணுக்கு ரூ. 3·00; பெண்ணுக்கு ரூ. 1·75; சிறியவர்களுக்கு ரூ. 1·25.



இந்த ஊதிய விகிதங்கள் குறைந்தபட்சக் கூலி விகிதங்களாகும். இதற்கு அதிகப்படியாகத் தற்போது இருந்து வரும் ஊதிய விகிதங்கள் குறைக்கப்படமாட்டா.



நாம்
என்பது....
நாம்
இந்நாட்டு மன்னர்கள்
இன்றைய சமுதாயம்
எதிர்காலத்தை
உருவாக்குபவர்கள்
வருங்காலத்தின் வாழ்வும் வளமும் நம் கையில்!
எதிர் காலத்தைப்
பொன்னொளியாக்க
நமது அரசுத்
திட்டங்களின் பட்டியல் இதோ!
உணவு உற்பத்தியில் தன்னிறைவு!
மாநிலத் திட்டக்குழுப் பணிகள்!
ஏழையர்க்கு வீட்டுமனை, நிலப்பட்டா!
குடிநீர் வடிகால் வாரியப் பணிகள்!
குடிசை மாற்றுவாரியப் பணிகள்!
பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை
தொழில் வளர்ச்சிக்குப் புதிய அமைப்புகள்!
நமது அரசின் இத்திட்டங்களும், முயற்சிகளும்
முழு வெற்றி ஈட்டிட நாம் ஆற்றும் கடமையே
அளவான குடும்பம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்!
தமிழரசு
குடும்ப நலத் துறை தமிழ்நாடு அரசு

# வெண்பாப் போட்டி

## 67. 'அரிசி' எனத் தொடங்கி 'அரசு' என முடித்தல்.

** அரிசி, படியளந்தாய் ; அம்மனைதான் தந்தாய்
பரிசளித்துச் சாதி பழித்தாய்;—வரிகுறைத்தாய்,
கண்வழங்கிக் காத்தாய், கடையனுக்கும் வாழ்வீந்தாய் ;
அன்புத்தாய் ஆனாய் அரசு!

—சுவித, வே. கள்ளிப்பாளையம்.

அரிசிக் கடைதன்னில் அந்திவரை நின்று
வரிசை தினம்பார்த்த வள்ளி—சிரித்தின்று
என்றும் நிலைக்கட்டும் என்கிறாள் எஃதென்றால்
இன்றுவாழ் இந்நாட் டரசு !

—புலவர் ச. இராசு, கோவில்பட்டி.

அரிசி மிகவிளைந்த ஆள்வினையின் மாண்பால்
பரிசாய் நிலம்பெற்றோம் பாராய்—விரிபஞ்சின்
நூல்போல் மிகவிளைத்த நுண்ணிடையே! நீ வாழ்த்தாய்
ஆல்போல் தழைக்க வரசு !

—புலவர் ஆ. திருஞானசம்பந்தன் பி.ஏ., திருச்சி-4.

'அரிசி' னங் கொன்றே, அனைவரு மொன்றாய்
நரிசெயல் நாட்டில் நசுக்கித்—தரிசைப்
பரிசா யுயர்த்திப் பசி-நோ யகற்று
மரசே குடிக ளரசு

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

அரிசிவப் பூசைதான் அன்பென்று சொல்வர் ;
அரிசனங்கள் அர்ச்சித்தால் மட்டும்,—பரிவோடு
கற்பூரம் நாறாதோ ? கற்கண் டினிக்காதோ ?
அற்புதமே செய்தாய் அரசு !

—மா. சே. இராசு, திருப்பூர்.

'அரிசி' வனும் போற்றுகின்ற ஆன்றபிள்ளை யார்க்கே
இருக்க இடம்கொடுப்பேன், இன்னும்—விரிநிழலால்
உங்கட்கும் தண்ணென்பேன் உள்ள மரக்குலமாம்
எங்களிலே யானே 'அரசு.'

—சு. கிருஷ்ணன், திருப்பூர்.

அரிசிவாயில் ஏதென்றான் ஆவென்னு முன்னே
பரிசொன்று தந்தான் பறந்து;—கரத்தை
இணைத்தான் இடையோடே; என்பதிலைக் கேளா(து)
அணைத்தான் அறிவுக் கரசு.

—புலவர் செந்தமிழ்க்கிழார், அருப்புக்கோட்டை.

அரிசி குவிந்ததடி ஆனமட்டும் உண்ண!
புரட்சியடி பாவாய்! புகல்வேன்!—வரட்சியுற்று
கண்கலங்கும் மாநிலத்தாக்(கு) அள்ளியும் தந்திடுதே!
அண்ணா அமைத்த அரசு!

—நா. மணிமேகலை, வந்தவாசி (வ. ஆ. மா).

''அரிசி'' யின்றி நாளும் அயல்நாட்டாார் சாரு,
அரிசி குவிக்கும் அரசே!—உரசித்
தரிசு நிலத்தைத் தழைத்தோங்கச் செய்யும்
அரசே நலம்பெய் அரசு

—பி. சி. அசனல்லி, அரக்கோணம்.

அரிசி விழைவோர் அகமகிழ்ந் துண்ண
உரிய வழியெல்லாம் ஓர்ந்தே—அரிதாம்
பசுமைப் புரட்சியதால் பாலரிசி ஊட்டி
அசையாமல் ஆளும் அரசு.

—ப. திருவேங்கடம், திருச்சி-4.

அரிசியிலை என்னும் அவலநிலை மாற்றி
அரியதோர் சாதனையாய் அண்டை—அரசுகளாம்
கேரள, கர்நாடகத்தார்க் கேண்மைமிகத் தானுதவும்
ஆரா அமுதிவ் வரசு.

—கோ. மா. இராசகோபாலன், சென்னை-23.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:
திரு. சுவித,
வே. கள்ளிப்பாளையம்,
பல்லடம் (வழி),
(கோவை மாவட்டம்).

# வெண்பாப் போட்டி

அரிசிவன்மால் என்றுதெய்வம் ஆயிரங்கள் சொல்வர்!
புரிசெயல்கள் அத்தனையும் புன்மை!—நரியாய்த்
தடங்காட்டும் அன்னவர்க்குச் சாவு மணியை
அடிக்கட்டும் இந்த அரசு.

—நாமக்கல் தமிழருவி, நாமக்கல்.

அரிசி இராக்கடைகள் அந்நாளில்; எங்கும்
முரசறைந்து விற்கின்றார் இந்நாள்—பரிசு
வழங்குவதால் ஏருழவர், வாங்கும் பிறநாட்டார்
முழங்குஞ்சொல் 'வாழ்க அரசு'

—இல. சக்கரபாணி, மடவாளம் (வ. ஆ.)

அரிசி கிடைக்காமல் அல்லலுற்றோம் அன்று!
வரிசையில் நின்று வாட்டமுன்றோம்!—அரிசிக்கு
நின்ற நெடுந்துயரம் நீக்கிய நல்லரசு
இன்றைக் கிருக்கும் அரசு.

—புலவர் மா. தமிழன்பன், சென்னை-30.

அரி, சிவா என்றேதும் ஆன்மிகத் தாலே
அரிசி, வா என்றிடில் ஆமோ?—தெரிவாய்
நமதுழைப்பே தெய்வம் நவிலுமிக் கொள்கையதே
அமைந்தெமை ஆளும் அரசு.

—லாயக்கில்லுதானை கட்டிதாணு, காளனூறு.

அரிசி அரிசியென்று ஆலாய்ப் பறந்து
வரிசையிலே வாழ்ந்தநாள் மாய—தரிசுநிலம்
நன்செய்யாய் மாற்றி நிறைத்தும் பிறர்க்கீந்தும்
அண்டை அயல் வாழ்த்தும் அரசு.

—கவிஞர் சிவி. நடராசன், மாமல்லபுரம்.

அரிசி பெருகநல் லாராய்ச்சி செய்தே
கருணை ஐ யாரெட்டு, பத்மா—கரிகாலன்
நல்லதமிழ்க் கண்ணகியாய் நாட்டிற் பலவகையை
அள்ளி அளிக்கும் அரசு.

—ம. சக்குபாய், உடுமலைப்பேட்டை.

'அரிசிவனே!' என்றால் அரிசிவிளை யாதென்(று)
அறிந்தார்தம் ஆட்சியிஃ(து) அன்றோ!—நிறையுழைப்பால்
எங்கும் பயிர்செழித்தே ஏற்றம் பலகாணும்
எங்கள் அரசே அரசு!

—புலவர் ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

அரிசியினைக் கேட்க அணுகிவரு வோரை
வருகவெனக் கூறும் கருணை!—அருமைநிறை
பொன்னியுடன் உன்றனையும் பூரிப்பாய் ஈன்றதனால்
மன்னுபுகழ் பெற்ற தரசு.

—இரா. கூத்தரசன், கிழக்குறிச்சி.

அரிசியிலே தன்னிறைவை ஆக்கிக், கலைஞர்
அரிசியினைக் கேட்போர்க் களிக்கும்—விரிசெயலால்
ஏற்ற புகழ்கொண்டான், எம்மவர்கோன் நல்லாட்சி
ஆற்ற அமைந்த தரசு.

—வெண்ணெய்வேலன், திருவெண்ணெய்நல்லூர்.

அரிசிக்கே அன்றொருநாள் அல்லலுற்றோம்; இன்றோ
பிறருக்கும் ஈந்துபுகழ் பெற்றோம்—திறமிக்கார்
நாடாள வந்ததனால் நாம்பெற்ற பேறிதன்றோ?
நீடூழி வாழ்க அரசு!

—க. இரத்தினம், ஆயக்காரன்புலம்.

அரிசிக்கு நாள்முழுதும் அங்காடி முன்னே
வரிசையாய் நின்றிருந்தோர் வாழ்வில்—சிரித்திடவே
கொள்முதலாம் நெல்குவித்தும் கோதில்லாத் திட்டத்தால்
அள்ளிக் கொடுத்த அரசு.

—து. ம. இராமசாமி, கோவை-34.

''அரிசி வளம்பெருக்கி, அன்பு மனம்பெருக்கித்
தரிசு நிலந்திருத்தித் தாய்போல், பரிந்துடனே
கண்ணொளியும் மின்னொளியும் காலமெல்லாம் தருகிறதே
அண்ணா வழிச்செல் அரசு''.

—மா. சிவக்குமார், கோவை-20.

அரிசியென்று வந்தவர்க்கே அன்புடனே வாரி
வரிசை கெடாதீந்து வண்மைப்—பரிசுபெறு
பாட்டிலொளிபெற்றுப் பண்பிற் சிறந்ததமிழ்
நாட்டரசே நல்ல அரசு.

—தாரைவில்லவன், தாராபுரம்.

அரிசிக்கு நிற்கும் அவலநிலை மாற்றி
வரிசை ஒழித்துவளம் காணப்—பரிசாய்க்
கருணை ஐ ஆரெட்டுக் காஞ்சியுடன் பொன்னி
அருமையுற நல்கும் அரசு.

—புலவர் சு. இராமனுசன், ஆ. தெற்கூர்.

அரிசி கிடைக்காத அல்லலை நீக்க
தரிசும் விளைநிலமாய் ஆகப்—பரிசளித்தே
ஊக்கப் படுத்தி உழைப்போரை என்றென்றும்
காக்கும் கழக அரசு.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

அரிசியினைத் தேவைக்(கு) அதிகம் விளைவித்(து)
அருந்திறன் காட்டியதோ(டு) அன்றிப்—பெருமகிழ்வோ(டு)
அண்டைபல மாநிலங்கட்(கு) அன்னையென வேயளித்த(து)
அண்ணன் அமைத்த அரசு.

—நா. பகவதிஅப்பன் பி. எஸ்சி., சென்னை-5.

# நாடு காப்போம் நலங்குவிப்போம்!



வீரத்தின் விளைநிலமாகத் தமிழகம் அன்றும் இருந்தது; இன்றும் இருந்து வருகிறது. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் இதனைப் பறைசாற்றி வருவதை உலகம் உணர்ந்துமிருக்கிறது.

அண்மையில்கூட இந்திய-பாகிஸ்தான் போரில் தமிழ்நாட்டு வீரர்கள் பங்கு பெற்ற உணர்ச்சிமிகு வரலாறு நமக்கெல்லாம் பெருமை தருகிறது.

நமது நாடு, நமது மக்கள் என்ற ஒருமைப்பாட்டுணர்ச்சியே நம் வெற்றிக்கெல்லாம் மூலகாரணம் என்பதை நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம்.

நாடு காக்க வீட்டுக்கொரு வீரர் தேவையென பண்டைத் தமிழர் முரசொலித்தது இன்னும் நம் செவிகளில் கேட்கின்றதே! இன்றுங்கூட அந்த வழக்கம், அந்தப் பண்பு மறையாது குறையாது அணையா விளக்காய் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

வீணர்கள் நம் மண் மீது காலடி எடுத்து வைத்தபோது அதற்குப் பதிலடி கொடுத்துப் பகை முறித்த காட்சி நம் கண் முன் தெரிகிறது.

இவ்வாறு வீரவரலாறு படைக்க இளைஞர்களையெல்லாம் அழைக்கிறது, சென்னைத் தேனாம்பேட்டையில் உள்ள இராணுவ ஆள்சேர்ப்பு அலுவலகம் (Branch Recruiting Office).

இது 1952-ல் புதுப்பேட்டையில் துவக்கப்பட்டது. இன்று தேனாம்பேட்டையில் இயங்கி வருகின்றது. நாள்தோறும் நூற்றுக் கணக்கானவர்கள் இராணுவத்தில் சேர வரும் காட்சி நமக்கெல்லாம் பெருமிதம் தருகிறது.

அதோ! வரிசை வரிசையாக மாணவர்கள் கையில் சான்றிதழ்களுடன் நிற்கின்றனர். அவர்கள் முகத்திலே புதுத் தெம்பு—பட்டாளத்திலே சேர்ந்து நாடு காக்கும் நற்பணியிலே ஈடுபடப் போகிறோமே என்ற பெருமிதம் அவர்கள் முகத்திலே பளிச்சிடுகிறது.

ஒவ்வொருவராக வருகின்றனர். இராணுவ அதிகாரி ஒருவர் அவர்களது சான்றிதழ்களைச் சரி பார்க்கிறார். எடை, உயரம் முதலானவற்றைக் குறித்துக் கொள்கிறார். இதற்குப் பிறகு அவர்களை மருத்துவ அதிகாரி சோதிக்கிறார். உடலில் ஒரு சிறு குறைபாடு இருந்தால்கூட அவர்கள் படையில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. அதனால் அவர்களுக்கு இராணுவத்தில் சேரவே வாய்ப்பு இல்லை என்று முடிவு கட்டிவிட முடியாது. உடலில் நோயோ குறைபாடோ இருந்தால் அதனைக் குறித்து, வெளியிலுள்ள பொது அல்லது இராணுவ மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற இராணுவ மருத்துவர் உதவி புரிகிறார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று உடல் நலமுற்று வந்தால் அவர்கள் நிச்சயம் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பட்டாளத்தில் சேர வரும் மாணவர்களின் தகுதி, உடலமைப்பு, தோற்றம் முதலானவற்றைப் பார்க்கும் போதே, இவர் எந்த வேலைக்குப் பொருத்தமானவர் என்பதை முடிவு செய்துவிடுகின்றனர். உடனே, இவர் டிரைவருக்குத் தகுதியானவர், இவர் பொறியாளருக்குப் பொருத்தமானவர், இவர் சமையல் வேலைக்குச் சரியான ஆள் என்று தேர்ந்தெடுத்து இந்தியாவின் பல பாகங்களுக்கும் அனுப்பப்படுகின்றனர்.

இந்த மாதிரியான இராணுவ ஆள்சேர்ப்பு அலுவலகம் ஒன்று திருச்சியிலும் உள்ளது. இந்த அலுவலகங்களில் ஆட்களைத் தேர்வு செய்வதல்லாமல், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அடங்கிய குழு மாவட்டந்தோறும் சுற்றுப் பயணமும் செய்து ஆட்களைத் தேர்ந்தெடுக்கின்றது.

மருத்துவர் அடங்கிய இந்தத் தேர்வுக் குழு, நாள், இடம், நேரம் முதலானவற்றை முன் கூட்டியே செய்தித்தாள்களிலும், வானொலியிலும் அறிவிக்கின்றது. இந்தக் குழு ஒவ்வோரிடத்திலும் நான்கு, ஐந்து நாட்கள் தங்கி ஆட்களைத் தேர்வு செய்கின்றது. இப்படி இந்தக் குழு சுற்றுப் பயணம் செய்வதின் நோக்கமே, இராணுவத்தில் சேர கிராமப்புற

மக்கள் செலவு செய்துகொண்டு சென்னை வந்து தொல்லைப் படாமலிருக்கவும், அவர்களுக்கு அங்கேயே அத்தகைய வாய்ப்புகளை ஏற்படுத்துவதும்தான். இவ்வாறு இவ்வலுவலக இராணுவக்குழு சேலம், தர்மபுரி, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்கள், பாண்டிச்சேரி ஆகிய இடங்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பயணம் செய்கிறது.

நாடு காக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பலர் ஆர்வமுடன் இராணுவத்தில் சேருகின்றனர். ஆண்டுக்கு *1,000* பேர் இராணுவத்திலும், ஆண்டுக்கு சுமார் *100* பேர் கப்பற்படையிலும் இவ்வலுவலகத்தின் சார்பில் சேருகின்றனர்.

நமது இந்திய போர்ப்படை *1.* இராணுவம் *2.* கடற்படை, *3.* விமானப்படை என மூவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

உலகில் தலைசிறந்த இராணுவப் படைகளில் இந்திய இராணுவப் படையும் ஒன்றாகத் திகழ்கிறது. எந்நேரத்திலும் நாட்டின் சுதந்தரத்தைப் பேணிக் காப்பதற்காக ஆயத்த நிலையில் இருக்கும் இராணுவத்தினரின் வீரமும் தீரமும் குன்றாமலிருக்க வேண்டுமாயின், இளைஞர்கள் தொடர்ந்து இராணுவத்தில் சேருவது அவசியமாகும்.

நாட்டிற்கு நற்பணிபுரிய வாய்ப்பு அளிப்பதோடு மட்டுமின்றி, கண்ணியமானதொரு வாழ்க்கைக்கும், ஒளி நிறைந்த வாழ்க்கைக்கும், எதிர்காலத்திற்கும் இராணுவப் படை வழி செய்கிறது; நம்மையும் நம்முடைய சந்ததியினரையும் முன்னேற்றப்பாதையில் அது அழைத்துச் செல்கிறது.

இராணுவத்தில் சேருவதற்கு ஒரு சில வகுப்பினர் மட்டுமே உரிமை பெற்றிருந்த காலம் மறைந்துவிட்டது. உடற்கட்டு மற்றும் கல்வி சம்பந்தமான சில தகுதிகளுடைய எவரும் இன்று சாதிமத வேறுபாடின்றி இராணுவத்தில் சேரலாம். தாய்நாட்டின் சுதந்தரத்தைக் காக்கின்ற பொறுப்பு, உடல் வலிமையுள்ள ஒவ்வொரு இளைஞனுக்கும் உண்டல்லவா?

**இராணுவம்**

இராணுவ வாழ்க்கை எப்படிப்பட்டது?

நமக்கும், நம் குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும், மற்றும் நாட்டிற்கும் நன்மை பயக்கும் நல்வாழ்வு நிறைந்ததொரு வாழ்க்கையை இராணுவப் படை நமக்கு அளிக்கிறது. சுறுசுறுப்பான பழக்க வழக்கங்களுள்ள ஒருவருக்கு இராணுவ வாழ்க்கை கடினமானதாகத் தோன்றாது. உழைப்பும் உடற்பயிற்சியும் நிரவலாக அமைந்துள்ள அவ்வாழ்க்கை ரசிக்கத் தக்கதாக இருக்கும்.

தேர்வு பெற்றவர் நல்லதொரு படை வீரராவதற்கு முறையான பயிற்சி அவசியமாதலால் அவர்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது தவிர தொழில் நுணுக்கப் பயிற்சியும், கைத்தொழில் பயிற்சியும் கூட இராணுவப் படையினருக்கு அளிக்கப்படுவதால், அவர்கள் பல்வேறு கைத்தொழில்களைக் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

பயிற்சியில் செலவிடும் நேரம் தவிர ஒவ்வொரு நாளும் வெவ்வேறு விதமான விளையாட்டுகளுக்கும், உடற்பயிற்சிக்கும் நிறைய நேரம் கிடைக்கிறது. கால்பந்து, ஆக்கி, எறிபந்து, சடுகுடு போன்ற விளையாட்டுகளுக்கும் வசதிகள் செய்து தரப்படுகின்றன.

தம் படைவீரர்கள் மீது இராணுவம் காட்டும் அக்கறை அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் நின்று விடுவதில்லை. ''ஒரு முறை படை வீரராக விளங்கியவர் என்றுமே படை வீரர்தான்,'' என்று சொல்கின்றவகையில் அவர்கள் சிவில் வாழ்க்கைக்குத் திரும்பிய பின்னும் இராணுவம் அவர்கள் மீதும் அவர்கள் குடும்பத்தின் மீதும் தொடர்ந்து அக்கறை செலுத்தி அவர்களது வாழ்நலத்தைப் பேணுகிறது. கூடுதலான கல்வியறிவுடனும் தொழிற் பயிற்சியுடனும் அவர்கள் சிவில் வாழ்க்கைக்குத் திரும்புவதால் மீண்டும் வேலை தேடுவது அவர்களுக்கு எளிதாகிறது. இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பிறகும் படை வீரர்கள் சுறுசுறுப்புடனும் மன நிறைவுடனும் வாழ்வதற்கு உதவும் வகையில் அரசு பல திட்டங்களை வகுத்துள்ளது.

இராணுவப் படையானது வீரர்களுக்குப்பல வசதிகளையும் சலுகைகளையும் அளிக்கிறது— இலவசமாகச் சீருடை, உணவு, எரிபொருள் மற்றும் ஒளிவசதி, இருப்பிடம், மருத்துவ உதவி, கல்வி, முடிதிருத்தம், துணிச்சலவை முதலியன வழங்கப்படுகின்றன. இவை மட்டுமா? அவர்கள் குடும்பத்தினருக்கு இலவச மருத்துவ உதவி, கல்வி வசதி, குடும்பத்தின் பராமரிப்பு ஆகிய வசதிகளும் செய்து கொடுக்கின்றது.

ஒவ்வொரு படை வீரருக்கும், படை வீரரல்லாத (பதிவாகிய) இராணுவ ஊழியருக்



படையில் சேர வந்துள்ள மாணவர்கள்



உயரம் அளக்கப்படுகிறது.

கும், ஆண்டுதோறும் சொந்த ஊருக்குச் சென்று வர இலவச இரயில் பயண வசதியுடன் 60 நாட்கள் விடுமுறையும் அளிக்கப்படுகிறது. இவை தவிர, ஒவ்வோராண்டும் 30 நாட்கள் வரை சாதாரண விடுமுறைகளும் அவர்களுக்குத் தரப்படுகின்றன.

இராணுவப் படை வீரராகச் சேருவதற்குக் குறைந்த அளவு வயது 17 ஆண்டுகளாகும். பெரும்பான்மையான தொழில் பிரிவுகளுக்கும் நிர்வாக அமைப்புகளுக்கும் விதிக்கப்பட்டுள்ள அதிக அளவு வயது வரம்பு 21 ஆண்டுகளாகும். எனினும், சில தொழில் பிரிவுகளிலும், நிர்வாக அமைப்புகளிலும் 27 வயதுவரை ஆட்கள் சேர்க்கப்படுகிறார்கள். பொதுவாகக் குறைந்த வயதுள்ளவர்கள்தாம் வரவேற்கப்படுகிறார்கள். படை வீரரல்லாத (பதிவாகிய) பிரிவில் சேருபவர்கள் 17 வயதுக்கும் 27 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

படைவீரர்களுக்கான வெவ்வேறு தொழிற் பிரிவுகளுக்குத் தனித் தனியே கல்வித் தகுதிகள் விதிக்கப்பட்டுள்ளன. ''தாய் மொழி மட்டும் அறிந்தவர்'' களிலிருந்து, ''மெட்ரிகுலேஷன் மற்றும் அதற்கு மேலும் படித்தவர்கள்'' வரை குறிப்பிட்ட வயது வரம்பிலும் நல்ல உடல்நலத்துடனும் இருக்கின்ற எல்லா இளைஞர்களுக்கும் இராணுவத்தில் வேலை வாய்ப்பு உள்ளது. படை வீரரல்லாத (பதிவாகிய) ஊழியர்களுக்குக் கல்வித் தகுதி குறிக்கப்படவில்லை.

இராணுவத்தில் சேருவோர் நல்ல உடற்கட்டோடும் நல்ல மனநிலையுடனும் இருக்கவேண்டும். வெவ்வேறு பிரிவுகளுக்கும் தனித்தனியே உடற்கட்டுத் தகுதிகள் விதிக்கப்பட்டுள்ளன 'ரெஜிமெண்டுகள், மற்றும் 'கோர்கள்' ஆகியவற்றைப் பொறுத்து இந்தத் தகுதிகள் வேறுபடக்கூடும்.

இராணுவத்தில் சேரும் அனைவருக்கும் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்கப்படுகிறது. தகுதி வாய்ந்தவர்கள் பதவி உயர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். திறமை மிக்க படை வீரர்கள் இராணுவத்தில் அலுவலர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்குப் பரிந்துரை செய்யப்படுகிறார்கள். குறிப்பிட்ட வயது வரம்பிலிருக்கும் இத்தகைய படை வீரர்கள் பூனாவிலுள்ள இராணுவப் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பப்படுவர். இந்தக் கல்லூரி வாயிலாக அலுவலர்கள் பதவி உயர்வு பெறுகின்றனர்.

### கப்பற் படை

இந்தியக் கப்பற்படைக்குப் 'பாய்ஸ்', 'ஆர்ட்டிபிசர் அப்ரெண்டிஸ்கள்', 'ரேட்டிங்குகள்' என்ற வகைகளில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இவர்களுக்கான வயதுத் தகுதிகள் சிறுவர்கள் (பாய்ஸ்) 15½ வயது முதல் 16½ வயதுவரை; ஆர்ட்டிபிசர் அப்ரெண்டிஸ்கள் 15 வயது முதல் 17½ வயதுவரை; ரேட்டிங்குகள் 17 வயது முதல் 20 வயதுவரை.

சிறுவர்கள் (பாய்ஸ்) சம்பந்தப்பட்டவரை இந்தந்தப் பிரிவுக்கென அவர்களை நியமிப்பது 10 வார காலம் ஆரம்பப் பயிற்சி கொடுக்கப்பட்ட பின்னர்தான் முடிவு செய்யப்படுகிறது. நேரடியாகச் சேர்க்கப்படும் ரேட்டிங்குகள், ரிக்ரூட்டுகளின் விருப்பம்போல் -அவர்கள் வயது கல்வி சம்பந்தமான தகுதிகள் உடையவர்களாகவும், உடல்நலமுள்ளவர்களாகவும் இருந்தால்— குறிப்பிட்ட பிரிவுகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு ஒருவர் நல்ல மன, உடல் நலமுள்ளவராக இருக்க வேண்டும். தன் கடமையைத் திறம்பட ஆற்றுவதற்கு இடையூறான உறுப்புக் குறைவு அற்றவர்களாகவும் அவர்கள் இருத்தல் முக்கியம்.

இவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் சம்பளம் தவிர, இதர படிகளும் வழங்கப்படுகின்றன. உணவு, உடை, மருத்துவம் போன்ற எல்லா வித வசதிகளும் இவர்களுக்குச் செய்து தரப்படுகின்றன.

கடற்படையின் கப்பல்களுக்குத் தேவையான பெருமளவு மாலுமிகளுக்கென்று சிறுவர்கள் பயிற்சி நிறுவனம் ஒன்று பயிற்சியளிக்கிறது. இந்தப் பயிற்சியின் முடிவாக, எல்லா மாணவர்களும் கடலுக்குச் சென்று கப்பலில் பணியாற்றுவர். கடற்பயிற்சி முடிந்த பிறகு அவர்கள் ஓ.டி. (O.D.—Ordinery Seaman) அதாவது சாதாரண மாலுமி எனப்பெயர் பெறுவர். தேர்ந்

தெடுக்கப் பெற்ற எல்லாப் பிரிவுகளின் மாலுமிகளும் அதற்கென முடிவு செய்யப் பட்ட தேர்வில் தேறிய பின்னர் பிரிவு அதிகாரிகளாக வும், கமிஷன் அதிகாரிகளாக வும் பதவி உயர்வு பெறு வதற்குத் தகுதியுடையவ ராவர். பம்பாயிலுள்ள கப்பல் கட்டும் தளத்திற்கான தொழில் நுட்பப் பணியின் பல் வேறு பிரிவுகளில் பயிற்சி யாளர்களுக்குப் பயிற்சியளிக் கப்படுகிறது.

விமானப் படை

விமானப் படையில் இளை ஞர்கள் 'ஏர்மென்' களாகச் சேர்ந்து கொள்ள நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. இப்படையில் சாதாரணத் தகுதியுள்ள பணிகள் 'ஏர் மென்' என்றழைக்கப் படுகின்றன. இங்கு அவர்களுக் குத் தொழில் நுட்பம் உள்ளதும், அல்லாததுமான பல தொழில்களில் இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்திய விமானப்படையில் சேர விரும்புகிறவர்களுக்கு 43 விதமான தொழில்கள் இருக் கின்றன. ஆகவே, தங்கள் விருப்பம்போல் இதில் சேர்ந்து கொள்வதற்கு அதிகமான வாய்ப்புகள் இருக்கின்றன. ஏர்மென்களுக்கும், வேலை பயிலுவோருக்கும் சம்பளம் தவிர இதரப்படிகளும் கொடுக் கப்படுகின்றன. இவர்கள் ஆண்டுக்கு 60 நாட்கள் விடுமுறை எடுத்துக் கொள்ள வும் உரிமையுண்டு. இவை தவிர, இலவசக் குடியிருப்பு, உணவு, உடை போன்ற எல்லா வசதிகளும் தரப்படுகின்றன.

உதாரணமாக, விமானம் ஓட்டிக் (பைலட்)கான தகுதி கள் எத்தனைக் கடினமானது என்பதைத் தெரிந்து கொள்ள லாம்.

முதலில் உடலுறுப்புக் குறை வற்றவராக அவர் இருத்தல் மிக முக்கியம். போர் அல்லது சமாதானத்தின்போதும், இரவு பகலின்போதும், எந்தத் தட்ப வெப்ப நிலையிலும் விமானத் தில் பறக்கின்ற மனவலிமை, உடல்நலம் பெற்றிருத்தல் வேண்டும். சுறுசுறுப்பு, கூரிய புத்தியுடையவராகவும், இருத யத்துடிப்பு, சுவாசித்தல், சிறு நீர் கழிவு, நரம்பு சம்பந்த மானவை முதலியன சாதாரண நிலையில் இருக்க வேண்டும். உயரம், எடை முதலியன கணக்கிடுவது போல கால் நீளமும் கணக்கிடப்படுகிறது. கால் நீளம் 39 அங்குலத்திற்குக் குறையாமலிருக்க வேண்டு மாம். இவை மட்டுமா? கண்பார்வை மிகநன்றாக இருத்தல் வேண்டும்.

கண்ணாடி அணிந்தவருக்கு நிச்சயம் இந்த வேலை கிடைக் காது. 20 அடி தொலை விலிருந்து பலமாக முணுமுணுக் கும் சத்தம் தனித்தனியாக


மார்பு அளவெடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு காதிலும் கேட்க வேண்டும். எனவே, காதின் செவிப்பறையும் நன்றாக இருக்க வேண்டும். அடுத்தது பல்! இது போதுமான எண் ணிக்கையில் இருக்க வேண்டும்! பொய்ப் பல்லெல்லாம் இங்கே பலிக்காது!

விமானப் படையில் அதிகாரி கள் தரம் ஏழு பிரிவுகளைக் கொண்டிருக்கிறது. இப்படை யில் சேருவதற்கு மட்டும் தாம்பரத்திலுள்ள விமானப் படைக்கான ஆள் சேர்ப்பு அலுவலகத்தில்சேர வேண்டும்.

பிரதேச இராணுவப் படை

முப்படைகளைப்பற்றி ஓரளவு தெரிந்து கொண்டோம். 'டெரி டோரியல் ஆர்மி' என்றால் என்ன?

இது 'பிரதேச இராணுவப் படை' என்று அழைக்கப்படு கிறது. தாமே முன்வந்து விரும்பிச் சேரும் வீரர்களைக் கொண்ட பகுதி நேர இராணு வப்படையாகும் இது. இப் படை குடிமக்களால் உருவா னது. இதிலுள்ளோர் தொழில் சார்பில் முழுநேரப் போர் வீரர்கள் அல்லர். அவர்கள் நாட்டுப் பாதுகாப்புக்குத் தத்தம் பங்கினைச் செய்யும் ஆர்வத்துடிப்புள்ள குடிமக்கள் ஆவர்.

இளைஞர்கள் தம் ஓய்வு

வேலைகளில் இராணுவப்பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் இந்தப் படை உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டிற்குப் பெரும் நெருக்கடி ஏற்படும் காலத்தில் தாயகம் காக்கப் படைக்கலமேந்தி போர்க்களம் செல்ல அவர்கள் அழைக்கப்படலாம்.

இப்படையில் சேர 18 வயது முதல் 35 வயதுக்கு இடைப்பட்டோரனைவரும்— அவர்கள் உடற்கட்டுத் தகுதியும், மருத்துவத் தகுதியும் பெற்றவர்களாயின் இதில் சேருவதற்குத் தகுதி உடையவர்களாவர். இதில் சேர முன் வருவோர் பொதுவாழ்வில் நிலையான நல்ல பணியில் இருத்தல் வேண்டும். பயிற்சி பெறும் காலத்திலும், இராணுவத்தில் பணியாற்ற அழைக்கப்படும் காலத்திலும் சம்பளமும் படிகளும் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு, தாய்த் திருநாட்டின் தன்மானத்தைக் காக்கும் பொருட்டு வாழ்நாளில்பெரும் பகுதியைப் பட்டாளத்தில் கழித்துவிட்டுத் தாயகம் திரும்பும் இராணுவ வீரர்கள் பொதுவாழ்வில் உள்ள வேலைவாய்ப்புகளைப்பற்றி தெரிந்து கொள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வேலை வாய்ப்பு நிலையம் இருக்கிறது.

பட்டாளத்தில் பெற்ற அனுபவத்தை வைத்துத் தனியாகத் தொழில் ஆரம்பித்துச் சுயமாகச் சம்பாதிக்க முடியுமா? அதிகநாள் காத்திராமல் விரைவிலேயே வேலை பெறுவது எப்படி? இவை போன்ற வினாக்களுக்கு இந்த வேலை வாய்ப்பகம் விடை தந்து நல்வழி காட்டுகின்றது.

1971-ஆம் ஆண்டு இறுதியில் 6486 முன்னாள் இராணுவத்தினர் வேலைவாய்ப்புக்காகத் தமிழ்நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருக்கிறார்கள்; இவர்களில் 1,303 பேர் இந்த ஆண்டில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்று குறிப்புகள் தெரிவிக்கின்றன.

நாடு காக்கும் நற்பணியில் ஈடுபட்டுள்ள நம் வீரர்களை வாழ்த்துவதோடல்லாமல், அவ்வாறு ஈடுபட விரும்புவோரையும் வாழ்த்தி வரவேற்போம்! நடந்து முடிந்த புனிதப் போரிலே வெற்றி வாகைசூடி மறைந்த மாவீரர்களுக்கும் வீரவணக்கம் செலுத்துவோம்! நாடு காப்போம்! நலங்குவிப்போம்!

—பி.வி.ஜி.



மருத்துவப் பரிசோதனை

கடமையைச் செய்வதற்குப் பலன்களை எதிர்பார்த்தல் கூடாது. ஆனால் நல்ல செயல் எதுவும் முடிவில் பயனளித்தே தீரும் என்பது என் உறுதியான நம்பிக்கை.

—காந்தியடிகள்.

பெரும்பான்மையோரால் தங்களுடைய துயரங்களைப் பொறுத்துக் கொள்ள முடிகிறது. ஆனால் மற்றவர்களின் இன்பத்தைத்தான் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை.

—வில்லியம் பால்ஸ்.

# சிறந்த ஊர்நல உதவியாளர்



கடந்த 1971—72-ஆம் ஆண்டிற்கான தமிழகத்தின் சிறந்த ஊர்நல உதவியாளர் என்ற சிறப்பைப் பெற்று, அதன் வாயிலாக அனைத்திந்திய அளவில் டெல்லி 'க்ருஷி' பவனில் நடைபெற்ற போட்டியில் கலந்துகொண்டு 2-வது இடத்தைப் பெற்று, தமிழகத்திற்குத் தனிச் சிறப்பைத் தேடித் தந்துள்ளார், ஊர்நல உதவியாளர் திரு எம். அருணாசலம்.

இவர் பிறந்து வளர்ந்தது திருச்சி மாவட்டம். ஆயினும் இவரது பணி முழுவதும் கோவை மாவட்டத்திலேயே உள்ளது. 30 வயதே அடைந்துள்ள இவர், பள்ளி இறுதி வகுப்பு தேறியவர். பள்ளி இறுதி ஆண்டை முடித்துக்கொண்டு தமிழகத்தைச் சேர்ந்த பவானி சாகர் கிராமிய விஸ்தரிப்புப் பயிற்சி நிலையத்தில் இரண்டு ஆண்டுகள் ஊர்நல உதவியாளர்களுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி பெற்றுத் தேறி உள்ளார். பயிற்சிக் காலத்திலேயே துடிப்பும், சுறுசுறுப்பும் மிக்க இளைஞர்களுள் முதன்மையானவராகத் திகழ்ந்து, பயிற்சியின் பல தரப்பட்ட பாடங்களில் ஆர்வத்தோடு பயின்று, சமுதாயப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். இவரது மொத்த பணிக் காலம் 6½ ஆண்டுகள். இவர் 2-ஆம் நிலை ஊர்நல உதவியாளராகக் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டாமுத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணியாற்றி வருகிறார்.

தனது பணிக் காலம் மிகக் குறுகியதாயும், மற்ற ஊர்நல உதவியாளர்களுள் இவர் இளையவராக (ஜூனியர்) இருப்பினும், 'கடுகு சிறுத்தாலும் காரம் போகாது' என்ற பழமொழிக்கொப்ப, தனது பணியினை நிறைவேற்றும் திறமையில், நாட்டத்தில் அணுகு முறையில் இவர் முதியவர்களையும் மீறியவர் என்பதை இவரது சாதனைப் பட்டியல் படம் பிடித்துக் காட்டுகிறது.

வேளாண்மைத் துறையைப் பொறுத்த மட்டில் இவரது சாதனை வியப்பிற்கு உரியதாகும். போட்டிக்கான ஆண்டில் மட்டும் இவர் தனது தொகுதியில் கீழ்க்கண்ட பணிகளை ஆற்றியுள்ளார் :

| | |
|---|---|
| (அ) வீரிய விதைகளை விதைக்கச் செய்து அபிவிருத்தி செய்தது | 7068 ஏக்கர்கள். |
| (ஆ) திருந்திய கம்போஸ்ட் குழிகள் வெட்டச் செய்தது ... | 143<br>முன் ஆண்டில்: 300 டன்கள் |
| (இ) இரசாயன உரவினியோகம் செய்து இரசாயன உரத்தின் அவசியத்தை அபிவிருத்தி செய்தது ... | 10,578 குவிண்டால்கள். |
| (ஈ) கம்போஸ்ட் உற்பத்தி செய்தது ... | ஆண்டில் 1716 டன்கள். |
| (உ) பசுந்தாள் உரப் பயிர் விதைப்பு ... | 7,068 ஏக்கர்கள். |
| (ஊ) உழவர்களுக்கு திருந்திய வேளாண்மைக் கருவிகள் வழங்கியது ... | |







| | |
|---|---|
| கலப்பைகள் ... | ... 247 |
| தூவான்கள் ... | ... 54 |
| வரப்புக்கட்டும் கருவி ... | ... 24 |
| சமப்படுத்தும் பலகை ... | ... 18 |

• தட்டுவெட்டி ... ... 48

• பாக்குமரத்தெளிப்பான் ... ... 7

• விசைத்தெளிப்பான் ... ... 57

• தான்யம் பிரித்துத் தூவும் கருவி ... 6

• டிராக்டர்கள் ... ... 5

(எ) பயிர்ப் பாதுகாப்பு அனுசரித்தது... ... 21,525 ஏக்கர்கள்.

(ஏ) கல உர நிரூபணங்கள் செய்தது ... 32

(ஐ) பண்ணைத் திட்டங்கள் தயாரித்தது ...2,022

(ஒ) புதிதாகப் பாசன வசதிக்குக்கொண்டு வந்த பூமியின் பரப்பு ... ...2,865 ஏக்கர்.

(ஓ) ஒற்றைப்பயிர் முறையிலிருந்து இரண்டு (அல்லது) மூன்று பயிர் சாகுபடிக்குக் கொண்டு வந்த பரப்பு ... 4,332 ஏக்கர்

(ஔ) பயிர் விளைச்சல் போட்டிகளுக்கு ஏற்பாடு செய்து நடத்தியவை

| | | | |
|---|---|---|---|
| நெல் | ... | ...30 | ஏக்கர்கள். |
| சிறு தானியங்கள் | ... | ... 3 | ,, |
| கடலை | ... | ...10 | ,, |
| மக்காச் சோளம் | ... | ...12 | ,, |
| அமோக விளைச்சல் தரும் நெல் ரகங்கள் | | ...30 | ,, |
| பசுந்தாள் உரப்பயிர் | ... | ...30 | ,, |

**உயர்விளைச்சல் ரகத் திட்டம்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கார் | | ராபி | |
| 1. கொடுக்கப்பட்ட இலக்கு | ... ... | 320 | எக்டேர் | 355 | எக்டேர் |
| 2. இவர் ஆற்றிய சாதனை: | | | | | |
| (அ) நெல் | ... ... | 698 | ,, | 443 | ,, |
| (ஆ) ஹெச்.பி.1 கம்பு | ... ... | 16 | ,, | 11 | ,, |
| (இ) வீரிய மக்காச் சோளம் | ... ... | 1,478 | ,, | 1,269 | ,, |







| | |
|---|---|
| உயர் விளைச்சல் தரும் ரகங்களைச் சிறந்த சாகுபடி முறைகளைக் கையாண்டு பயிரிட்ட குடியானவர்கள் | 1878 குடும்பங்கள். 1790 குடும்பங்கள் |
| பயிற்சி மற்றும் நிரூபண முறை முகாம்கள் ஏற்பாடு செய்தவை | 97 முகாம்கள் |
| பழச்செடிகள் விநியோகம் செய்தது ... | 4,519 |
| காய்கறிகள் உற்பத்திக்குக் கொண்டு வரப்பட்ட பரப்பு ... | 2,018 ஏக்கர்கள் |
| மண் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சீரமைத்த பரப்பு ... | 1,478 ஹெக்டேர்கள் |

**இவரது இதர துறைச் சாதனைகள் :**

1. காளைகளுக்குக் காயடித்து வீரியப்படுத்தியது ...975
2. செயற்கைமுறை கருத்தரிப்புக்கு ஏற்பாடு செய்தது ... 4798
3. தீவனப்பயிர்களை அபிவிருத்தி செய்யத் தீவினப் பயிர் போடப்பட்ட பரப்பு:

| | | |
|---|---|---|
| குதிரை மசால் | ... | ... 307 ஏக்கர் |
| எருமைப்புல் | ... | ... 60 ,, |
| யானைப்புல் | ... | ... 72 ,, |
| தீவனச் சோளம் | ... | ...1112 ,, |

4. தனிப்பட்டோர் கோழிப்பண்ணை ஆரம்பித்தது ... 28
5. குஞ்சு பொறிக்கத் தக்க முட்டை விநியோகம் செய்தது... 6439
6. மீன் வளர்ப்புக்குக்கொண்டு வரப்பட்ட நீர்ப் பரப்பு
   (அ) குளங்குட்டைகள் ... ... 13
   (ஆ) கிணறுகள் ... ... 303
7. மீன் குஞ்சுகள் கொடுக்கப்பட்டவை ... ... 30,000
8. மீன் உற்பத்தி ... 3,050 கிலோ





**பொது :**

இவரது முயற்சியில் வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்தின் மதிப்பீடு அளவு—உணவுப் பயிர்கள் : 97 சவிகிதம்.

மற்றும் இவர் சிறு சேமிப்புத் திட்டத்தில் சிறந்த நாட்டம் கொண்டு ரூ. 50,000 வசூல் செய்து தந்தார். கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 116 பங்குகள் சேர்த்துக் கொடுத்தார். நாட்டுப் பாதுகாப்பிற்கு என ஏற்பாடு செய்யப்பட்ட பரிசுச் சீட்டுக்களை ரூ. 3,500-க்கு விற்றுக் கொடுத்தார். மற்றும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் இலவசக் கண் சிகிச்சை முகாமுக்கு ரூ. 200-ம் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்ட நிதிக்கு ருபாய் 3,000-ம் வசூலித்துக் கொடுத்ததோடு, இலவசக் கண் சிகிச்சை பெற்று, விழியிழந்திருந்தவர்களின் வாழ்வில் ஒளியேற்றினர்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திலும் இவர் நாட்டம் மிகக் கொண்டு, பணியாற்றினர். 78 நபர்களை ஆண் அறுவைக்கு அழைத்து வந்து, சிகிச்சை செய்வித்து, அவர்களின் குடும்பங்களைச் சீர்மிகு குடும்பங்களாக மாற்றினர்.

இப்படிப் பல தரப்பட்ட பணிகளிலும், சிறந்த பணியாற்றி, ஊராட்சி வளர்ச்சித் துறையில் சீருடன் பணியாற்றி வரும், இவர் அனைத்திந்திய அளவில் 2-வது இடத்தைப் பெற்றது, தமிழகத்திற்கே தனிச் சிறப்பாகும்!

# மூன்று மாவட்டங்களின் முன்னேற்றப் பணிகள்

த.பி.

தென்னார்க்காடு, தஞ்சை, திருச்சி ஆகிய மூன்று மாவட்டங்களில் தமிழக அரசு செய்துள்ள சாதனைகளைப் பத்திரிகையாளர்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக, ஐந்துநாள் சுற்றுலாவைத் தமிழக அரசின் செய்தி-மக்கள் தொடர்புத்துறை அண்மையில் ஏற்பாடு செய்தது.

சென்னையைச் சேர்ந்த பத்திரிகை நிருபர்கள், செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த நிருபர்கள், அகில இந்திய வானொலி நிலையத்தின் செய்தி நிருபர் ஆகியோருடன், அந்தந்த மாவட்டங்களில் உள்ள பத்திரிகை நிருபர் சிலரும் இந்தச் சுற்றுலாவில் கலந்து கொண்டார்கள்.

சுற்றுலா சுவையாக இருந்தது. பத்திரிகையாளர்களுக்கு உணவு, தங்கும் வசதிகள் அனைத்தையும் அரசே ஏற்றுக் கொண்டது. அரசுப் பீடத்திலும் பத்திரிகையாளர்கள் தான் இருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக்கின பத்திரிகையாளர்களுக்குக் கிடைத்த வசதியும் வாய்ப்பும்!

சுற்றுலாவின் போது ஆங்காங்கே நாவுக்குக் கிடைத்த விருந்து ஏராளம். அதற்கு இணையாகவே செவிகளுக்குக் கிடைத்த விருந்தும், கண்களுக்குக் கிடைத்த விருந்தும் திகழ்ந்தன. தமிழக அரசின் சாதனைச் செய்திகளைக் கேட்டபோது செவிகள் இன்புற்றன! பார்த்தபோது கண்கள் மகிழ்வுற்றன.

பத்திரிகையாளர்கள் சென்று வந்த இடங்களில் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்களும் மிக மிக அன்புடன் வரவேற்று ஒத்துழைப்புத் தந்து, தமிழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்தார்கள்.

சில பத்திரிகையாளர்களின் எல்லையற்ற வினாக்களுக்கு இனிதாகவும் இதயம் வருந்தாமலும், சுவையாகவும், அரசு அலுவலர்கள் பதில் கூறினார்கள் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

அக்டோபர் திங்கள் 9-ஆம் நாள் நாங்கள் சுற்றுலாவைத் தொடங்கினோம்.

''உழுவார் உலகத்துக்கு அச்சாணி'' என்று வள்ளுவரும் ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்று பாரதியாரும், கூறியிருப்பதை எண்ணித்தானோ என்னவோ, சுற்றுலாவின்முதற்கட்டமாகத் திண்டிவனத்திலுள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்துள் அடி எடுத்து வைத்தோம்.



திண்டிவனத்தில் கண்டு பிடிக்கப் பெற்றுள்ள எண்ணெய் வித்துக்கள் திக்கெட்டும் புகழ் பரப்பி வருவதுடன், இந்தியாவின் தாவரஎண்ணெய் உற்பத்தியைப் பெருக்கப்பெருமளவில் உதவி உள்ளன. ஒரு காலத்தில் 'மணிலாக் கொட்டை மாவட்டம்' என்று கூறப்பட்ட தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திண்டிவனத்தில் அமைந்துள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சியில் செயற்கரிய சாதனைகள் செய்து அனைத்து இந்தியப் புகழ் பெற்று விளங்குகிறது. சிறப்பாக, நிலக்கடலை ஆராய்ச்சியில் திண்டிவனம் மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் இந்தியாவிற்கே வழி காட்டியாக உள்ளது.



கையினால் காகிதம் செய்யும் தொழிற் கூடத்தில்.........

திண்டிவனத்தில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் 1925-ஆம் ஆண்டில் பலாக் குப்பம் கிராமத்தில் 6.5 எக்டேர் குத்தகை நிலத்தில் துவங்கப்பட்டது. தமிழ் நாட்டில் மிகவும் அதிகமாக நிலக்கடலை பயிரிடப்படும் பகுதியின் இதயம் போன்று விளங்கும் இவ்வாராய்ச்சி நிலையம், படிப்படியாக வளர்ந்து 61.55 எக்டேர் பரப்பில் எண்ணெய் வித்துக்கள் பற்றிய ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் இயங்கும் எண்ணெய் வித்துக்கள் பற்றிய அனைத்து இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் நிலக்கடலை பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளும் முக்கிய நிலையமாகவும் இந் நிலையம் இயங்கி வருகிறது.

**குறிக்கோள் :**

திண்டிவனம் மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் முக்கிய குறிக்கோள்கள் மூன்று; அவை :

(1) தமிழ் நாட்டின் முக்கிய எண்ணெய் வித்துப் பயிர்களான நிலக்கடலை, எள், ஆமணக்கு ஆகியவற்றில் அதிக மகசூல், அதிக எண்ணெய் கொடுக்கும் தன்மை, பூச்சிகள் மற்றும் நோய்களைத் தாங்கிக் கொள்ளும் குணம் ஆகிய சீரிய பண்பு கொண்ட பொறுக்கு விதைகளை உருவாக்குதல்.

(2) நிலக்கடலை, எள், ஆமணக்கு ஆகியவற்றில் பெரு மகசூல் பெறுவதற்குரிய திருந்திய வேளாண்மைச் சாகுபடி முறைகளைக் கண்டறிதல்.

(3) எண்ணெய் வித்துப் பயிர்களைத் தாக்கும் பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றை ஆராய்ந்து, அவைகளைக்கட்டுப்படுத்துவதற்கான முறைகளைக் கண்டுபிடித்தல்.

மேற்கூறிய மூன்று முக்கியக் குறிக்கோள்களுடன் இயங்கும் இவ்வாராய்ச்சி நிலையம், பயிர் வல்லுநர் ஒருவரின் தலைமையில் இயங்குகிறது. அவருக்கு உதவியாக பின் கண்ட இயல்களில், உதவி ஆராய்ச்சி அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

(1) இன மேம்பாட்டியல்

(2) உழவியல்

(3) இரசாயன இயல்

(4) பயிர்நோய் இயல்

(5) பூச்சி இயல்

அனைத்து இந்திய ஒருங்கு இணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழும் 3 உதவி ஆராய்ச்சி அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களின் அயராத உழைப்பினால் இது வரை கீழ்க் கண்ட சாதனைகள் ஏற்பட்டுள்ளன.

குறுகிய கால வயது, அதிக மகசூல், அதிக எண்ணெய் கொடுக்கும் தன்மை, அதிகப் பயறு அளிக்கும் பண்பு, வறட்சி, பூச்சிகள், நோய்கள் ஆகியவைகளைத் தாங்கும் குணம், பல்வேறு தட்ப வெப்ப நிலைமையிலும், மண் வகையிலும் பயிரிடுவதற்கு ஏற்ற பண்பு ஆகிய குணங்களைக் கொண்ட புதிய இரகங்களை உருவாக்க இப் பிரிவில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பெறுகின்றன. புத்தம் புதிய ரகங்களை உருவாக்கும் பணியின் முதற் கட்டமாக, உலகின் பல பகுதிகளைச் சேர்ந்த 1,150 நிலக்கடலை இரகங்களும் 9 காட்டு நிலக்கடலை வகைகளும் (Wild Species) கொண்டு வரப்பெற்று இப்பிரிவில் பயிரிடப்பெற்று அவைகளின் சீரியபண்புகள் ஆராயப் பெற்று இன மேம்பாட்டிற்கான கருவூலமாக (Germplasm Bank) அமைக்கப் பெற்றுள்ளன. இவ்வளவு இரகங்கள் கொண்ட ஆராய்ச்சி நிலையம், இந்தியாவில் வேறெங்கும் இல்லை என்று பெருமிதத்துடன் கூறிக்கொள்ளும் பெருமையைப் பெற்றுள்ளது இந் நிலையம்.

இந்த ஆராய்ச்சி நிலையம் இதுவரை திண்டிவனம்-1 (டி.எம்.வி. 1), 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 ஆகிய 10 இரகங்களை உருவாக்கி வெளியிட்டுள்ளது. இவைகளில் மிகவும் சிறந்ததாக டி.எம்.வி. 10 விளங்குகிறது. இந்தியாவில் வெளியிடப் பெற்றுள்ள நிலக்கடலை



கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் வாங்கியுள்ள டிராக்டர்

வி. 3 எள் இரகத்தை விட 10 சதம் அதிக மகசூல் அளிப்பதாக உள்ளது. பரிசோதனையில் உள்ள 'ஆர்' (R) என்ற கலப்பின எள் ரகமும் சிறந்த எள் இரகமாக வெளியிட ஏற்றதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

புதிய இரகங்களை உருவாக்கி வெளியிட முயலும் திண்டிவனம் மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் எண்ணெய் வித்து சாகுபடி முறைகள், பூச்சிகள் மற்றும் நோய்கள் தடுப்பு முறைகள் பற்றியும் விரிவான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, பல பயன் தரும் முடிவுகளை உழவர் சமுதாயத்திற்கு வழங்கிவருகிறது.


வீராணம் திட்டத்திற்காகக் குழாய்கள் உருவாவதை நிருபர்கள் பார்வையிடுதல்

உழவுத் தொழில் செய்யும் ஆண் உழவர்களுக்கும் பெண் உழவர்களுக்கும் உழவு பற்றிய பயிற்சிகளை நடத்துவதற்கு ''உழவர் பயிற்சி நிலையம்'' இங்கே இயங்கி வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 7 பயிற்சி நிலையங்கள் உள்ளன. திண்டிவனத்திலுள்ள பயிற்சி நிலையம் 11.2.1971- லிருந்து பணிபுரிகிறது. தென்னார்க்காடு மாவட்டம் முழுதும் உள்ள 34 வட்டாரங்களுக்கும் இந்த நிலையம் பயன்படுகிறது. விவசாய விஞ்ஞானிகளுக்கும் விவசாயிகளுக்கும் இடையே இணைபாலமாக இயங்குவதே இந்நிலையத்தின் நோக்கமாகும்.

இந்தப் பயிற்சி நிலையம் செய்யும் தொண்டுகளைப் பார்ப்போம்.

ஒவ்வொரு பயிற்சிக் காலத்துக்கும் 25 உழவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்; ஒவ்வொரு வட்டாரத் தலைநகரிலும் ஐந்துநாள் பயிற்சி அவர்களுக்குத் தரப்படுகிறது. பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த அலுவலர்களாலும் சில சமயங்களில் சம்பந்தப்பட்ட நிபுணர்களாலும் உழவர்களுக்கு வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன. இவை தவிரத் திரைப்படங்களின் (Visual Education) மூலமாகவும் பாடங்கள் நடத்தப்படுகின்றன.

பருவத்திற்கேற்றவாறு பயிரிடப்படும் பயிர்கள் சாகுபடி செய்வதற்கு முன் அப்பயிர்களின் கட்டுக்கோப்பு மற்றும் சாகுபடி முறைகளில் உழவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் ஆராய்ச்சி முடிவுகள் அறிவிக்கப்படுவதோடு, பயிற்சியாளர்கள் அவற்றில் ஈடுபடும் வண்ணம் செயல்முறை விளக்கங்களும் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு பயிற்சியிலும் பங்குபெறும் உழவர்களுக்கு உணவுச் செலவுக்காக நாளொன்றுக்கு ஒருவருக்கு ரூபாய் 3.50 வீதம் பயிற்சி அளிக்கும் ஐந்து நாட்களுக்கும் அளிக்கப்படுகிறது.

ஆண் உழவர்களுக்குப் பயிற்சி அளிப்பது போலப் பெண் உழவர்களுக்கும் நிலையப் பயிற்சி ஐந்து நாட்களுக்குக் கொடுக்கப்படுகிறது. மனை இயல், விஞ்ஞான வேளாண்மை, தானியம் மற்றும் விதை சேகரிப்பு இவைகளில் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சிக்கு ஆண் உழவர்களைப் போலவே பெண் உழவர்களும் 25 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். நாளொன்றுக்குப் பெண் பயிற்சியாளர் ஒருவருக்கு ரூபாய் 3.50 சாப்பாட்டுச் செலவுக்காக வழங்கப்படுகிறது. இந்தப் பயிற்சியின் போது, பெண் உழவர்களுக்குப் புதிய உயர் விளைச்சல் தானியங்களிலிருந்து சுவையானபண்டங்கள் செய்வது குறித்துச் செயல் விளக்கம் காண்பிக்கப்படுகிறது. இதற்காக ஒவ்வொரு பயிற்சிக்கும் ரூ. 50 வீதம் கொடுக்கப்படுகிறது. இதுவரை 21 செயல் முறைகள் நடத்தப் பெற்றுள்ளன.



ஆண் உழவர்களுக்கு 34 முகாம்களும், பெண் உழவர்களுக்கு 29 முகாம்களும் நடத்தப் பெற்றிருக்கின்றன. 759 ஆண் உழவர்களுக்கும் 633 பெண் உழவர்களுக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. இந்த முகாம்களில் வேளாண்மை குறித்துப் புதிய செய்திகளை எல்லாம் அறிந்து கொண்ட பயிற்சியாளர்கள் கிராமத்திலுள்ள ஏனைய உழவர்களும் புதிய உத்திகளைக் கையாள்வதற்கு வழிகாட்டி வருகிறார்கள்.





குறைந்த செலவில் அதிக விளைச்சல் காண்பதற்குப் புதிய முறைகள் வேளாண்மைத் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அதனால், தகவல்களும், வழிகாட்டுதலும் கிராமங்களில் தொடர்ந்து கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டும். இந்தக் குறிக்கோளுடன் ஆண் உழவர் விவாதக்குழு 200, பெண் உழவர் விவாதக்குழு 100- இதுவரை-சில குறிப்பிட்ட கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விவாதக்குழுவில் 20 ஆண் அல்லது பெண்

உழவர்கள் இடம் பெறுவார்கள். ஒவ்வொரு குழுவுக்கும் தலைமையானவர் அமைப்பாளர் என்று சொல்லப்படுகிறார். அமைப்பாளர்களுக்கு ''டிரான்சிஸ்டர் செட்''டுகள் கொடுக்கப்படுகின்றன. அவற்றை இயக்கி, வானொலியில் ஒலிபரப்பப்படும் வேளாண்மைச் செய்திகளைக் கேட்டு அவை குறித்துக் கிராம மக்களிடம் விவாதம் செய்கிறார்கள். வேளாண்மைக் குடியினரின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு இந்த விவாதக்குழு ஒரு வாயிலாகப் பயன்படுகிறது.

அமைப்பாளர்களுக்கும் விவாதக் குழுவினருக்கும் வேளாண்மை குறித்த தகவல்கள் அறிந்து கொள்வதற்காக, 'விவசாய விளக்கங்கள்', 'சீர் மிகு சாகுபடி', ஆகிய விளம்பரச் செய்தி மடல்களும் 'தமிழரசு' இதழும் வழங்கப்படுகின்றன.

பயிற்சி பெறும், ஆண் பெண் உழவர்கள் பல்வேறு தேசிய விளக்கப் பண்ணைகளுக்கும் ஆராய்ச்சிப் பண்ணைகளுக்கும் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இச்சுற்றுலாவிற்கு 1971-72 ஆம் ஆண்டில் ரூ. 1,000 செலவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பல வகைகளிலும் வேளாண் . குடியினருக்குச் சிறந்த பயிற்சி தந்து வருகிறது இந்த நிலையம்.

ஏருழவர் பயிற்சி நிலையத்தை விட்டுப் புறப்பட்ட நாங்கள், அடுத்துச் சொல்லேருழவர்களுக்குப் பயன்படும் காகிதத் தொழிற்சாலையை நாடிச் சென்றோம். விழுப்புரம் அருகில் கோலியனூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பிடாகம் என்ற ஊரில் இயங்கிவரும் கையினால் காகிதம் செய்யப்படும் நிறுவனத்தைப் பார்வையிட்டோம்.

நவீன காகித ஆலைகளுடன் போட்டி போடத்தக்க அளவுக்கு இங்கே கையினால் உருவாக்கப்படும் காகிதங்கள் சிறப்பாகக் காட்சி தருகின்றன. விதவிதமான தாள்கள், பல வண்ணங்களில், பல தரங்களில் உருவாக்கப்படுகின்றன. தமிழ்நாடு காதி கிராமத் தொழில் வாரியத்தின் நிருவாகத்தில் உள்ளது இந்த நிறுவனம்.

தேவையில்லை என்று ஒதுக்கப்படும் பொருள்களைக் கொண்டு, செல்வத்தைத் திரட்டுவது இந்த நிறுவனத்தின் அரும்பணி என்றுகூற வேண்டும். எப்படித் தெரியுமா? காகிதம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களைப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும்.



பழைய கந்தைத் துணிகள்,



காங்கிரீட் குழாயில் கம்பி பொருத்தப்படுகிறது

கழிவுக் காகிதங்கள், வெட்டப்பட்ட காகித நறுக்குகள், பனியன் துணிகள், தையற்கடைத் துண்டுத்துணிகள், வீணான கோணிகள்-இவற்றுடன் முக்கிய இரசாயனப் பொருள்களான, அலுமினியம் சல்பேட், சோடியம் சிலிகேட், மற்றும் வண்ணக் கலவைகள் ஆகியவற்றைச் சேர்த்துக் காகிதங்களைச் செய்கிறார்கள். இங்கே உருவாக்கப்படும் காகித வகைகள்:



எழுதுதாள்

அச்சுத்தாள்

முத்திரைத்தாள்

பிரதிகள் எடுக்கும்தாள்

பத்திரத் தாள்

ஒத்தும் தாள்

மேலட்டைத்தாள்

அட்டைக் காகிதங்கள்

அழைப்பிதழ் அட்டை

இவை தவிரப் பலவகையான கோப்பு அட்டைகளும் (பைல்களும்) இங்கே தயாரிக்கப்படுகின்றன. இங்கே தயாராகும் புகைப்பட ஆல்பம் மிகச் சிறப்பாக உள்ளது. இங்கே தயாராகும் 'மார்பிள் காகிதம்' ஒவ்வொரு தாளும் ஒவ்வொரு டிசைனுக இருப்பதுடன் கவர்ச்சியாக உள்ளது. 1962-ஆம் ஆண்டிலே இந்த நிலையம் துவக்கப்பட்டது என்றாலும், 1967 வரை இது இலாபத்தில் நடைபெறவில்லை, அதற்குப் பின்னர்தான் முனைப்பான விற்பனை நடைபெற்று இலாபத்தை ஈட்டி வருகிறது.

1967-68-ஆம் ஆண்டில் ரூ. 19,825.05, 1968-69-ஆம் ஆண்டில் ரூ. 14,291.73 1969-70-ல் ரூ. 10,373.28, 1970-71-ல் ரூ. 5,708.67, 1972-73-ல் ரூ. 13,219.32 இலாபமாகக் கிடைத்திருக்கிறது.

இருபத்தைந்து தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்புத் தந்து வரும் கிராமத் தொழிலான இந்தத் தொழில் எதிர்காலத்தில் வளம் பெறுவதற்கு மிகுந்த வாய்ப்பு உள்ளது. இங்கே தயாராகும் காகிதங்கள், பம்பாய், போன்ற வெளி மாநிலங்களுக்கும் செல்லவிருக்கின்றன என்ற செய்தி நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்து வருகிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டம் நல்ல முறையில் செயலாக்கப்பட்டு வருகிறது. 18,683 சிறுநிலக்கிழார்கள், 17,087 மிகச் சிறுநிலக்கிழார்கள் இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சமுதாயக் கிணறுகள் தோண்டுதல், மின்சார மோட்டார் பொருத்தப் படுதல், பழைய கிணறுகள் ஆழப்படுத்தல், ஆட்டு மந்தைகள், கோழிப்பண்ணைகள், பால் வழங்கு நிலையங்கள் உருவாக்குதல், வேளாண்மைக்குக் கடன் வழங்குதல் ஆகியவை இந்தத் திட்டத்தின் வாயிலாக உருவாகியுள்ள பணிகளில் ஒரு சில.

கோலியனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சென்றோம். அங்கே ஒரு டிராக்டர் எங்களை வரவேற்றது. சிறுவிவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாகக் கிடைத்துள்ள 25,234.96 ரூபாயின் உதவியினால், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் 2–12–1972 அன்று வாங்கிய டிராக்டர்தான் அது. 13.3.73 முதல், இது உழவுப் பணிகளுக்குப் பயன்படுத்தப் பட்டு வருகிறது. சாதாரண விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு விதை விதைப்பதற்கு (Puddling) ரூ. 40 வீதமும் உழுவதற்கு ரூ. 27 வீதமும் வசூல் செய்கிறார்கள்; ஆனால் சிறுநிலக்கிழார் விஷயத்தில் சலுகை காட்டப்படுகிறது. அவை, முறையே ரூ. 26.70 வீதமும், ரூ. 16 வீதமும் வசூலிக்கப்படுகின்றன.

சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் மதுரை, திருநெல்வேலி, தென்னார்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில்தான் நடைபெறுகின்றது. தென்னார்க்காட்டில் இது முன்னோடித் திட்டமாகத் திகழ்கிறது. ஐந்தாண்டுக் காலத்திற்குள் ஏறக்குறைய 1.60 கோடி ரூபாய்



இந்தத் திட்டத்திற்காகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் மட்டும் செலவிடப்பட இருக்கிறது.

அடுத்து, பண்ணுருட்டி ஊராட்சி ஒன்றியத்தை நோக்கி நாங்கள் புறப்பட்டோம். பலாப் பழங்களுக்கும் முந்திரிக்கும் பெயர்போன பண்ணுருட்டி தற்போது வேறொரு வகையிலும் புகழ் பெற்ற பதியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. வீராணம் திட்டத்திற்குத் தேவைப்படும் மாபெரும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்னைக்கு அன்னை காவிரி பாய்ந்து வருவதற்குரிய வாயில்கள் இங்கே உருவாகிக் கொண்டிருக்கின்றன.

அகத்தியர் கமண்டலத்தில் காவிரியைக் கொண்டு வந்தார் என்ற கதை கேட்பதற்குச் சுவையாக இருக்கலாம்! ஆனால் காவிரியைச் சென்னைக்குக் கொண்டு வருவது எப்படி என்ற பிரச்சினைக்கு அந்தக் கதை எந்த விதப் பயனும் தராது.

காவிரியைச் சென்னைக்கு வரவழைப்பதற்கு-ராட்சத வடிவில் காங்கிரீட் குழாய்கள் பொருத்தப்பட வேண்டும் என்பது பொறியியல் நிபுணர்கள் கண்டுள்ள அறிவாராய்ச்சி. எனவே, அதற்குரிய குழாய்களைத் தமிழ்நாட்டு நிறுவனம் ஒன்று, அரசுக்காகச் செய்து வருகிறது. கிரீஸ் நாட்டுத் தொழில் நிறுவனம் ஒன்றின் அறிவுரைப்படியும் செயல் முறைப்படியும் கூட்டுறவுடனும் இந்த மாபெரும் பணி நடைபெற்று வருகிறது. ஏறக்குறைய 40 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம் இது. ஏறக்குறைய 20 அடி உயரமும், 5.5 அடி அகலமும் கொண்ட இந்த சிமெண்ட் குழாய்கள் தயாரிக்கப்படும் காட்சி கண்களையும், கருத்தையும் விட்டு அகலவே அகலாது!

காங்கிரீட் குழாய்கள் உருவாக்கப்படுவதும், அவற்றைச் சுற்றிக் கம்பிகள் முடுக்கப்படுவதும், அதன் பிறகு கம்பிகள் தெரியாவண்ணம், குழாய்கள் மீண்டும் சிமெண்டினால் பூசப்படுவதும் - அதன் பின்னர் வீராணம் திட்டத்திற்காக அந்தக் குழாய்கள் வெளியேறிச் செல்வதும் கண்கொள்ளாக் காட்சிகள். இவை அனைத்தும் மாபெரும் இயந்திரங்களின் உதவியினால் நடைபெறு



கின்றன. இயந்திரங்கள் இயங்கும் காட்சிகளைப் பார்க்கும் போது தமிழ்நாட்டில்தான் இருக்கிறோமா, இயந்திரமயம் நிறைந்த மேலைநாட்டில்தான் நிற்கிறோமா என்ற ஐயம் நமக்குத் தோன்றுகிறது.

18-1-73 அன்றுதான் குழாய் தயாரிக்கும் பணி, பண்ணுருட்டியில் துவக்கம் ஆகியது. நாள் ஒன்றுக்கு 16 குழாய்கள் தயாரிக்கப்படுகின்றன. அருவியெனப் பொங்கி வருகின்ற காவிரி அன்னை 5.5 அடி அகலம் கொண்ட குழாய்களின் வழியாகச் சென்னைக்கு விரைந்து வரப் போகிறாள் என்ற செய்தியை இராட்சதக் குழாய்கள் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் - கருவறைக்குச் செல்லுமுன் வாயிலில் இருக்கும் துவார பாலகர்களுக்கு மரியாதை செய்வது போல, சென்னைக்கு வரும் அன்னை காவிரிக்குத் தடம் அமைத்துக் கொடுக்கும் காங்கிரீட் குழாய்களை வாழ்த்தி விட்டுப் புறப்பட்டோம்.

பண்ணுருட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த காடாம்புலியூர் ஊராட்சி மன்றத்தைச் சார்ந்த மதுரா கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பார்க்கும் வாய்ப்புப் பெற்றோம். காவிரி அன்னையின் வருகைக்குரிய ஆக்க வேலைகளைப் பார்வை யிட்டதாலோ என்னவோ, சில வினாடிகளிலேயே நீர்த்தேக்கத் தொட்டியைக் காணுகின்ற வாய்ப்புக் கிடைத்தது போலும்!

ஏறக்குறைய 1,050 பேர் வசிக்கும் இந்தக் கிராமத்தில் கிணறு வெட்டப்பட்டு 1971-ஆம் ஆண்டு மின்சார மோட்டார் பொருத்தப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. 567 அடி ஆழத்திற்குக் குழாய் இறக்கப்பட்டுள்ளது. ஆழ்குழாய்க்கிணறு தோண்ட ரூ. 77,318.80, மின்சார மோட்டார் பொருத்த, நீர்த்தேக்கத் தொட்டி கட்ட ரூ. 42,700.00 ஆக மொத்தம் 1,20,018.80 ரூபாய் அரசு செலவு செய்துள்ளது.

வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் உருவான ஆழ்குழாய்க்

கிணறு இது. இந்தக் கிணறு தோண்டப்படுவதற்கு முன்பு இந்தப் பகுதி மக்கள் குளத்துத் தண்ணீரை அருந்திக் காலம் கழித்து வந்தார்கள். அதனுல் பல்வேறு வகையான நோய் களுக்கு ஆட்பட்டார்கள். இப் போது நல்ல குடிநீர் இவர் களுக்குக் கிடைத்து வருகிறது.

தென்னுர்க்காடு மாவட்டத் தில் குடிநீர்த் திட்டத்திற்கு அரசு மிகுந்த உதவி செய்து வருகிறது. குடிநீர் வசதி எது வும் இன்றி அல்லற்பட்ட 10 கிராமங்கள் பாதுகாக்கப் பெற்ற குடிநீர் வசதியினைப் பெற்றிருக்கின்றன. இந்தத் திட்டத்திற்காக, இந்த மாவட் டத்தில்,

*1969-70*-ல் ரூபாய் *1,61,277*
*1970-71*-ல் ,, *1,68,191*
*1971-72*-ல் ,, *4,08,000*
*1972-73*-ல் ,, *1,60,000*
செலவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் கிராமப் புற வேலைவாய்ப்பு முன்னேடித் திட்டம் சிறப்பான முறையில் நடைபெறுகிறது. இந்தத்திட் டத்தின் கீழ், சாலே அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன. மேலமாம்பட்டு என்ற ஊரில் புதிதாக உருவாக்கப்பட்டு வரும் சாலே ஒன்றினைப் பார்த் தோம். 2 கிலோமீட்டர் நீள முள்ள இந்தச் சாலேப்பணியின் திட்ட மதிப்பீடு ரூ. 80,000, சாக்கடைகள் உருவாக்க ஆகும் செலவு மதிப்பீடு ஒரு லட்சம்.

இவ்வாறு இம்மாவட்டத் தில் அநேக கிராமங்களில் முதன்மைச் சாலேகளும், இணைப்புச் சாலேகளும் அரசின் முயற்சியால் உருவாகி வரு கின்றன.

கரும்பு ஆலேகள் இருக்கும் எல்லேயில், சில சாலேகள் கரும்புக்கு விதிக்கப்படும் வரிப் பணத்தைக் (Chess) கொண்டே உருவாக்கப்படுகின்றன.

அடுத்து நெல்லிக்குப்பத்தை நோக்கிப் புறப்பட்டோம். 42 ரெவின்யூ கிராமங்கள் கொண்ட நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன் றியம் ஏறக்குறைய 54.32 சதுர மைல் பரப்பளவும், 14,853 ஏக்கர் பாசன வசதி யும் பெற்றதாகும். மக்கள் தொகை 96,940. நிலவரி மூலம் இந்த ஒன்றியம் 1,26,226 ரூபாய் வருமானத் தைப் பெறுகிறது.

பாசன வசதிக்காக உள்ள (Tube well) குழாய்க் கிணறு களின் எண்ணிக்கை 3,002 ஆகும். மின்சாரத்தினுல் பயன் படுத்தப் பெறும் பம்ப் செட்டு களின் எண்ணிக்கை 4,240, எண்ணெய் இயந்திரத்தால் பயன்படுத்தப்படுபவை 207.

கல்விப்பணி, நல்வாழ்வுப் பணி, அரிசன மக்களின் உயர் வுப்பணி, இளேஞர் அணிப் பணிகள் எல்லாம் இங்கே சிறந்து விளங்குகின்றன. சமூகக் கல்வி தருவதில் இந்த ஒன்றியம் சிறந்து விளங்கி வரு கிறது. மகளிர் மன்றங்கள் 30 கிராம வானெலி மன்றங்கள் 44, இந்த ஒன்றியத்தில் உள் ளன. ஊராட்சிகளினுலும் ஊராட்சி ஒன்றியங்களினுலும் நடத்தப் பெறும் நூலகம் 22 உள்ளன. பேரறிஞர் அண்ணு அவர்கள் உருவாக்கிய சீரணி யினர் ரூ. 3,000 மதிப்பில், நூலகம்-மற்றும் வானெலி அறையினையும் கட்டியிருக் கிறுர்கள்.

மைய அரசு, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தும் முனைப்பு கிராமக் குடிநீர் வசதித் திட் டத்தின் கீழ் நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றியத்தில் 39 கிராமங்களில் மேல்நிலே நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கும் வேலேயைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற் கொண்டு, தற்சமயம் வேலேகள் நடைபெற்றுக்கொண்டு வரு கின்றன. இன்னும் ஓரிரு திங்களுக்குள் வேலேகள் யாவும் முடிவுற்றுவிடும் எனத் தெரி கிறது. இந்தத் திட்டத்தின் மொத்தமதிப்பீடு, ஏறக்குறைய 32.5 லட்ச ரூபாய் ஆகிறது.



அண்மையில், மேல் குமார மங்கலத்தில் வெள்ளத்தினுல் சேதமான வயல்களெல்லாம், தமிழக அரசு கொடுத்த உதவித் தொகையின் பயனுல் சீர்திருத் தம் பெற்றுள்ளன. அந்த வயல்களில் எல்லாம் இன்று நல்ல விளேச்சல் ஏற்பட்டிருக் கிறது.

ஏறக்குறைய 6 அடி, 8 அடி உயரத்துக்கு மண் மூடப்பட்ட வயல்கள் எல்லாம், அரசின் நிவாரணப் பணிகளால் காக்கப் பட்டன. இன்று உயர் விளேச் சலேத் தந்துள்ளன. முதலாம் போக அறுவடை ஏற்கெனவே முடிந்துவிட்டது. இந்த இதழ் அச்சாகும் போதில் இரண்டாம் போக அறுவடை நடைபெற லாம்.

தென்னுர்க்காடு மாவட்டத் தில் 3 போகம் பயிரிடப்படும் நிலங்கள்கூட இருக்கின்றன. ஓர் உழவருக்கு ஏறக்குறைய ரூ. 1,200-லிருந்து 1,500வரை இலாபம் கிடைக்கிறது.



பெரிய அளவில் காணப்படும் காங்கிரிட் குழாய்கள்

வேளாண்மையைப் பொறுத்த வரையில் தென்னார்க்காடு மாவட்டம் தமிழ்நாட்டில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருக்கிறது.

இந்த நெல்லிக்குப்பம் ஊர் ஆட்சி ஒன்றியத்தில் ஒரு கிராமத்தை 'அண்ணா கிராமம்' என்று மாதிரி கிராமமாக ஆக்குவதற்குத் திட்டம் உள்ளது. மதுரை மாவட்டத்தில் உள்ள காந்தி கிராமத்தைப் போலவே, இங்கே 'தென்னாட்டுக் காந்தியின்' பெயரால் அண்ணா கிராமம் என்று உருவாக்கி, சமூகப் பணிகள், கல்விப் பணிகள் ஆகிய அருந்தொண்டுகளைச் செய்து, மாதிரி கிராமமாக ஆக்க நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றியம் முடிவு செய்திருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு, இது ஓர் அழியாத நினைவுச் சின்னமாகத் திகழப்போவது உறுதி.

நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றியத்தை விட்டு நாங்கள் புறப்பட்டபோது இரவு பத்து மணியிருக்கும். இரவு 11.30 மணி அளவில் சிதம்பரம் அண்ணாமலை நகரில் ஆல்போல் தழைத்திருக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் விருந்தினர் இல்லத்தை அடைந்து அங்கே தங்கினோம்.

**ம**றுநாள்-அக்டோபர் 10-ஆம் நாள், காலை 9 மணியளவில் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

மாவட்டத்தின் வளர்ச்சி பற்றியும், தமிழக அரசு தென்னார்க்காடு மாவட்டத்தில் செய்துவரும் சாதனைகளைப் பற்றியும் விவரமாகவும் விளக்கமாகவும் தெரிவித்தார். அவர் தெரிவித்த சில கருத்துக்களை இங்கே குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.

''தென் ஆர்க்காடு மாவட்டம் பல வகைகளில் தன்னிறைவு பெற்றுத் திகழ்கிறது.

''கரும்பு, நெல், முந்திரி, மணிலா ஆகியவற்றின் விளைச்சலிலும், கல்வித்துறையிலும் இந்த மாவட்டம் தன்னிறைவு பெற்றுள்ளது.

''வெள்ளத்தால் இந்தமாவட்டத்தில் 10,000 ஏக்கர் சேதமடைந்திருந்தன. தமிழக அரசு ஏறக்குறைய ஒருகோடி ரூபாய் செலவு செய்து சீர்படுத்தியுள்ளது.

''இங்கே 8 லட்ச ஏக்கரில் நெல் விளைகிறது. இவற்றில் 3 லட்சம் ஏக்கர் ஆழ்கிணறுகளின் மூலம் பாசனம் செய்யப்படுகின்றன. 4 லட்ச ஏக்கர்கள் நதிகளின் மூலமாகவும் அல்லது ஆழ்குழாய்க் கிணறுகள் மூலமாகவும் பாசனம் செய்யப்படுகின்றன. மீதியுள்ள 1 லட்சம் ஏக்கரில் பாசனம் செய்வதற்கு நீர் வசதியை உருவாக்குவது தான் இந்த மாவட்டத்தின் பிரச்சினை.

''இந்த மாவட்டத்தில் தனியார்களாலும் கூட்டுறவுத் துறையினாலும் மொத்தம் 4 சர்க்கரை ஆலைகள் உள்ளன. விரைவில் மற்றொரு கூட்டுறவு சர்க்கரை ஆலை திருவெண்ணெய்நல்லூர் வட்டாரத்தில் திறக்க வேண்டும் என்ற திட்டம் இருக்கிறது''

-இவை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்த கருத்துக்களில் ஒருசில......!

பொதுவாகத் தென்னார்க்காடு மாவட்டம் நெல் விளைச்சலில் தஞ்சை மாவட்டத்துக்கு அடுத்த இடத்தைப் பெற்றிருக்கிறது. தஞ்சையைப்போல இயற்கை அளிக்கும் நீர் இங்கே கிடையாது. ஆழ்குழாய்க் கிணறுகள் மூலமோ, சமுதாயக் கிணறுகள் மூலமோதான் பாசன வசதி பெற வேண்டியிருக்கிறது.

ஐந்து லட்சம் ஏக்கராவில் உயர்விளைச்சல் ரக நெல் பயிரிடப்படுகின்றது. ஐ.ஆர். 20 அதிகமாகப் பயிரிடப்படுகின்றது. அதற்கடுத்து பொன்னி, ஐ.ஆர். 8 ஆகியவை பயிரிடப்படுகின்றன. 15 சத மின்சார வெட்டின் காரணமாக இந்த மாவட்டத்தின் வேளாண்மைத் தொழில் எள்ளளவும் பாதிக்கப்படவில்லை. 60, 70 சதவீத வெட்டின்போதுகூடப் பாதிக்கப்படவில்லை என்று மாவட்ட உழவர்கள் சிலர் தெரிவித்தார்கள்.

**மா**வட்ட ஆட்சியாளரின் சந்திப்புக்குப் பிறகு, பரங்கிப் பேட்டைக்குச் சென்றோம். அங்கே துறைமுக முகத்துவாரத்தில் அக்காலத்திய நாளங்காடிபோல் பல கடைகள் காணப்பட்டன. அங்கிருந்தோரெல்லாம் ஆர்வமாகக் கடலையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். காரணம் என்ன தெரியுமா? வலைவீசி இறால் பிடிக்கச் சென்றவர்களின் வரவினை எண்ணித்தான் வியாபாரிகளும் பொதுமக்களும் காத்துக் கொண்டிருந்தார்கள். இந்தப் பகுதியில் பிடிக்கப்படும் இறால், மேல் நாட்டுக்கு ஏற்றுமதியாகின்றன. அமெரிக்காவில் இவ்வகை மீனுக்கு அதிக வரவேற்புக் கிடைத்து வருகிறது. நமது தமிழ்நாட்டு மீன்கள் வெளிநாட்டுக்குப் போவதை எண்ணி மகிழ்ந்தோம்.



பரங்கிப் பேட்டையில் சலவைத்துறை ஒன்று வேண்டுமென்ற கோரிக்கை கடந்த 20 ஆண்டுக் காலமாக நிறைவேற்றப் படாமல் இருந்து வந்தது. அந்தக் கோரிக்கையைத் தமிழக அரசு அண்மையில் நிறைவேற்றி வைத்திருக்கிறது. ஏறக்குறைய 80 ஆயிரம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்தச் சலவைத் துறைக்கு 50 விழுக்காடு தொகையை மானியமாகவும் 50 விழுக்காடு தொகையைக் கடனாகவும் கொடுத்துள்ளது தமிழக அரசு.

இங்கே துவக்கம் ஆகும் பக்கிங்காம் கால்வாயில் 3.5 இலட்ச ரூபாய் செலவில் ஒரு பாலம் கட்டுவதற்கும், வெள்ளாற்றில் ஒரு பாலம் கட்டுவதற்கும் அரசு அனுமதியளித்துள்ளது. வெள்ளாற்றில் அமையவிருக்கும் இந்தப்பாலம் இப்பகுதி மக்களுக்குப் பல வகைகளிலும் பயன் தரும் என்பது உறுதி.

பரங்கிப் பேட்டையில் அமைந்துள்ள கடல்வாழ் உயிரினம் பற்றிய கல்வி நிலையத்தினைப் பார்த்தோம்.

இங்கே பரங்கிப்பேட்டையில் கிடைத்துள்ள கடல் வாழ் உயிரினங்களைக்கொண்டே ஒரு கண் காட்சியும் அமைத்திருக்கிறார்கள். பாம்புகள், எத்தனை ரகம்! மீன்கள் எத்தனை ரகம்!

கண்காட்சியை வியந்த படியே அண்ணாமலைப் பல்கலைக் கழக விருந்தினர் இல்லம் நோக்கிப் பறந்தோம். எங்களுக்காக அங்கே காத்திருந்த நண்பகல் உணவை ஒருகை பார்த்து விட்டுப் புறப்பட்டோம்.... எங்கள் உந்து வண்டி நஞ்சை வளமும் கொஞ்சும் கலை வளமும் கொழிக்கும் தஞ்சை மாவட்டத்தை நோக்கி ஓடத் தொடங்கியது.

(அடுத்த இதழில் முடியும்)

தாவரங்களின் வளர்ச்சிக்குப் பல மூலகங்கள் அல்லது சத்துணவுகள் தேவைப்படுகின்றன. இவற்றில் சில சத்துணவுகள் அளவில் அதிகமாகவும், சில குறைந்த அளவிலும் தேவைப்படுகின்றன. அளவில் அதிகமாகத் தேவைப்படும் சத்துணவுகளைப் 'பெரு மூலகங்கள்' என்றும், குறைந்த அளவில் தேவைப்படுபவைகளை 'சிறு மூலகங்கள்' அல்லது 'சிறு அளவில் தேவைப்படும் சத்துணவுகள்' என்றும் அழைக்கப்படுகின்றன. பெரு மூலகங்களைப் பற்றிப் பலருக்கும் நன்றாகத் தெரியும். அவைதான் தழைச் சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்து எனப்படுபவை. இந்த மூலகங்களின் தேவையை இரசாயன உரங்கள் போடுவதன் மூலம் பூர்த்தி செய்கிறோம். இவற்றை எந்த அளவில் போட வேண்டும் என்பது பற்றி ஏராளமான ஆராய்ச்சிகளின் முடிவுகள் நமக்குத் தெரிந்திருக்கின்றன. இந்த அளவுக்கு, நுண்ணுணவுச் சத்துக்களைப் பற்றிய விவரங்கள் நம்மிடம் இல்லை.

சிறிது காலமாக நுண்ணுணவுகளைப் பற்றிய அவசியத்தை நாம் உணர ஆரம்பித்திருக்கிறோம். அதிக விளைச்சல் தரும் வகைகளை உபயோகிப்பதால் அதிக அளவு இரசாயன உரங்களை உபயோகிக்கிறோம். இதனால் ஏற்கெனவே நிலத்திலுள்ள நுண்ணுணவுகளின் அளவு, பயிர்களுக்குத் தேவையான அளவு கிடைப்பதில்லை. ஆகையால் பயிர் வகைகள் அதிக உரமிடுவதால் ஏற்படக்கூடிய முழுப்பலனைக் கொடுப்பதில்லை. சில வகைப் பயிர்கள் நுண்ணுணவுகளின் தேவைகளைச் சிற்சில குறிகளால் (Deficiency symptoms) காட்டுகின்றன. மற்ற பயிர்கள் அவற்றை வெளிக் காட்டாமல் ''மறைவு பசியினால்'' (Hidden Hunger) வாடுகின்றன; அதனால் அவைகளுக்கு அதிக விளைச்சல் தரும் சக்தி இல்லாமல் போய் விடுகின்றன.

சில பயிர்கள் சில வகை மண்ணில் நல்ல மகசூல் தராமல் இருப்பதற்கும், அதே வகைப் பயிர்கள் மாறுபட்ட மண் வகையில் அதிகப் பலன் தருவதற்கும் இந் நுண்ணுணவுச் சத்துக்கள் தேவையான அளவுக்கு முறையே அங்கு இல்லாததும், இருப்பதுமே மூலகாரணமாகும்.

மண்ணில் இச் சிறு மூலகங்களின் குறைவு மூன்று காரணங்களால் ஏற்படுகின்றன. அவை :

(1) வெகு நாட்களாக அந் நிலம் வேளாண்மைக்கு உபயோகப்படுத்தப்பட்டிருப்பது.

(2) இடைவிடாமல் ஒரு நிலத்தில் இரசாயன உரங்கள் உபயோகித்து பயிர் செய்து வருவது.

(3) பல பயிர்த் திட்டத்தின் படி தொடர்ந்து பயிர் செய்தல்.

மேற்கூறியவற்றால்— நுண்ணுணவுப் பற்றாக் குறையினால் —பயிர்களில் 'மறைவுப் பசி' அதிக அளவில் ஏற்படக் கூடும். இதனால் நுண்ணுணவின்றிப் பயிர்கள் தவிக்கின்றன. மேலும் இப் பயிர்த் தவிப்புச் சம கால நிலை (சீதோஷ்ணம்) நாடுகளில் இருப்பதைவிட, வெப்ப மண்டல நாடாகிய நம் நாட்டில் ஏற்பட அதிக வாய்ப்பு இருக்கிறது.

சாதாரணமாக, சிறந்த தாவர வளர்ச்சிக்குக் கீழ்க் கண்ட நுண்ணுணவுச் சத்துக்கள் தேவையெனக் கருதப்படுகின்றன. அவைகள் தேவையான அளவு இல்லாதிருப்பின், பயிர்களில் கீழ்க் கண்ட 'பற்றாக் குறை அறிகுறிகள்' காணப்படும்

# சிறுதுளி ஆனால் பெரும் தேவை!

| நுண்ணுணவுச்சத்து (1) | பயிர்கள் (2) | பற்றாக்குறை அறிகுறிகள் (3) |
|---|---|---|
| 1. வெண்காரம் | குதிரை மசால் | நுனி வெளுத்துக் காணப்படும். |
| | கோசுக் கீரை | நடுத் தண்டுப் பாகத்தில் கருமை படர்ந்திருக்கும். |
| | தக்காளி | இலைகள் வெளுத்துச் சுருங்கி இருக்கும். |
| | ஆப்பிள் | பழத்தின் நடுவில் கெட்டித்தன்மை ஏற்பட்டிருக்கும். |
| | எலுமிச்சை | நுனியிலிருந்து கருகி, இலைகள் மாறுபட்டிருக்கும். |
| 2. மாலிப்டினம் | பூக்கோசு (காலிஃப்ளவர்) | இலைகள் சுருண்டுவிடும். இலைப் பகுதிகள் மிகவும் குறைந்துவிடும். |
| 3. மாங்கனீசு | ஓட்ஸ் | சாம்பல் புள்ளிகள் காணப்படும். |
| | பச்சைப்பட்டாணி | நீர்த் திவலைப் புள்ளிகள் தோன்றும். |
| | கரும்பு | நீளக்கோடு வியாதி வரும். |
| | பசலைக் கீரை | மஞ்சள் இலை வியாதி தோன்றும். |
| 4. தாமிரம் | எலுமிச்சை | குருத்து வாடல் நோய் ஏற்படும். |
| | வெங்காயம் | மஞ்சள் நிற, கெட்டியில்லாத வெங்காயம் தோன்றும். |
| 5. துத்தநாகம் | மக்காச்சோளம் | இலை அடிப்பாகம் வெளுத்துப் போய்விடும். |
| | பழ மரங்கள் | நரம்பு இடைப்பகுதி வெளுத்துவிடும். |
| 6. இரும்பு | எல்லா வகைத் தாவரங்கள் | இலை வெளுத்துக் காணப்படும். |

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர்:
சென்னை அரசினர் தோட்டம் [illegible]




Criterion CO 2883



# . . . ஆனால் தமிழ்நாடு பரிசுச் சீட்டு சாலவும் நன்று!

முதல் பரிசு: ரூ. 1,00,000 (ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

**62-வது குலுக்கல் நாள்: 12-12-73**

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

செலவு ஒரு ரூபாய்




வரலோ லட்ச ரூபாய்

*கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*
*இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-600002*
*விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,*
*மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-600009*